தை - பங்குனி 2025 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல் 3 பாடல் 12




ஹரி டெக் கம்ப்யூட்டர் காலேஜ்
கணினி பயிற்சி மையம்
மேல் நிலை மற்றும் கல்லூரி வகுப்புகளுக்கு
ACCOUNTANCY
COMPUTER SCIENCE
Tuition நடைபெறுகிறது.
SKILLS
DOA
TALLY
TYPEWRITING
பயிற்சி அளிக்கப்படுகிறது.
89 கீழ முதல் தெரு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் – 614001
செல்: 9842332859

# விருதும் விழைவும்

உலகின் ஆகச்சிறந்த சொல் மனிதன் என்பார் மாக்சிம் கார்க்கி. மனிதனின் அளப்பரிய ஆற்றல் உழைப்பு ஆகும். மனித சமூகத்தின் ஆகப்பெரும் பேருழைப்பு காலந்தோறும் இவ்வுலகைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கின்றது. எளிய மக்களின் உடலுழைப்பை, நிறையுழைப்பை, முழுமையான உழைப்பு என்பார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். நிறையுழைப்புத் தருகின்ற தொழிலாளர் தோழர்களை தலைமேல் வைத்துக் கொண்டாடுவார்.

ஆனாலும், சமகாலத்தில் விருதுகளும், வெளிச்சங்களும் அறிவு உழைப்பில் ஈடுபடுபவர்களுக்கே கிடைக்கின்றது. எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள் போன்ற அறிவு உழைப்புக்காரர்களைக் கண்டுகொள்கின்ற பொதுசமூகம் உடலுழைப்பில் ஈடுபடுபர்களைக் கண்டுகொள்வதில்லை. ஒளிவட்டங்கள் அவர்களை நோக்கியே சுழல்கின்றன.

சிறந்த எழுத்தாளருக்கு, ஆசிரியருக்கு விருது கொடுப்பவர்கள் சிறந்த உழைப்பாளருக்கு என்று விருது கொடுக்க வேண்டும். தெருவைச் சுத்தமாக்கித் தன்னை அழுக்காக்கிக் கொள்கின்ற துப்புரவுத் தொழிலாளி, இன்றளவும் கிராமங்களில் தன்னந்தனியாக பிணம் எரிக்கின்ற மயானத் தொழிலாளி, ஒரு நெல்லை நூறு நெல்லாக மாற்றுகின்ற கூலி விவசாயி, இன்னும் சலவைத் தொழிலாளி, முடித்திருத்துபவர் எனப் பட்டியல் நீளும்.

இவர்களும் கண்டுகொள்ளப்பட வேண்டும். அறிவு உழைப்பில் ஈடுபடுவோருக்குக் கிடைக்கின்ற அங்கீகாரம், உடலுழைப்பில் ஈடுபடுவோருக்கும் கிடைக்க வேண்டும். நினைத்துப் பாருங்கள்... ஒரு துப்புரவுத் தொழிலாளிக்கு அவரது பணியை, சேவையைப் பாராட்டி விருதும், ஒரு லட்சம் பணமுடிப்பும் கிடைத்தால்...

சமூகத்தின் மீது அக்கறை உள்ளவர்கள் இணைந்து முன்னெடுப்போம். இதற்கான உரையாடலையும் தொடங்குவோம்.

ஆசிரியர் குழு

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2056
பங்குனி - 2025

நிறுவனர்
ப. பரிதிபாண்டியன்

ஆலோசகர்
அம்ரா பாண்டியன்

ஆசிரியர்
கோ.அருணகிரி

ஆசிரியர் குழு
கலைபாரதி
த.ரெ.தமிழ்மணி
சா.தமிழ்ச்செல்வன்
ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
பாலகுமரன்பரிதி
தமிழாதன்
க.சந்தானலட்சுமி

அட்டைப்படம்
கிஷ்கிந்தா பாலாஜி

இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்

தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசிக்கடைத்தெரு, மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம்-614001
செல்பேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

கட்டுரை

**கட+உள்=கடவுள்**
இடங்காண்கோட்டை சிவகுமார் **09**

கட்டுரை

**உப்பில்லா உப்புமா**
சு.இராமசுப்பிரமணியன் **18**

**கோ.அருணகிரி கவிதைகள்** **28**

சிறுகதை

**சாவக்கட்டு**
அய்யனார் ஈடாடி **30**

கவிதை

**தோழர் மன்னை உ. இராசேந்திரன்**
கலைபாரதி **35**

கட்டுரை

**அன்புன்னா அம்மா**
இரா.மோகன்ராஜன் **36**

சிறுகதை

**மம்புட்டி வைத்தியர்**
த.ரெ.தமிழ்மணி **46**

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட
சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**

# நண்டு

## கலைபாரதி

உலகில் பேசப்படுகின்ற மொழிகள் அனைத்திலும் எழுத்துக்கும், சொல்லுக்கும் இலக்கணம் உண்டு. ஆனால் மனிதன் வாழுகின்ற வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த செம்மொழி நம்மொழி. அது, தமிழர் வாழ்வை அகமாகவும், புறமாகவும் பகுத்துள்ளது. தமிழரது காதல் வாழ்வு அகமாகவும், வீரவாழ்வு புறமாகவும் தனக்குள் பொத்தி வைத்துள்ளது. புறவாழ்வைப் பெயர் சுட்டி அழைக்கின்ற தமிழ், அகவாழ்வை அவ்வாறு அழைப்பதில்லை. சுட்டி ஒருவர் சொல்லப்படாத அகவாழ்வு, தமிழரது பெருவாழ்வு. பெருமித வாழ்வும்கூட. அகவாழ்விலும் எல்லோருக்கும் தெரிந்த வாழ்வு, அதாவது திருமண வாழ்வு கற்பு என்றும், தான் மட்டும் அறிந்து, உணர்ந்து தனக்குள்ளாகவே வைத்திருக்கும் கமுக்க வாழ்வு களவு என்றும் அழைக்கப்படுகிறது. தலைமக்களது களவும் எல்லோருக்கும் தெரிவது அலர் எனவும் ஒரு சிலர் அறிவது அம்பல் எனவும் இதழ் விரிக்கும் மலர் போல மணம் பரப்புகிறது.

அரும்பான என் காதல் அலராக வேண்டும். அந்த அலரும் மலராக வேண்டும். அந்த மலரும் மணம் வீச வேண்டும். அதாவது காதல் மணம் வீச வேண்டும் என்கின்ற தலைவியின் விழைவை,

**மணியோசை கேட்டு**
**மகிழ்வோடு நேற்று**
**கைகள் தட்டிய**
**காலை சென்றதெங்கே...**

**அரும்பான என்காதல்**
**மலராகுமோ**
**மலராகி வாழ்வில்**
**மணம் வீசுமோ!**
**- கங்கை அமரன்**

என்று பதிவு செய்கிறது ஒரு திரையிசைப் பாடல்.



**பழச மறக்கலையே**
**பாவிமக நெஞ்சு துடிக்குது**
**உன்னையும் என்னையும் வச்சு**
**ஊருசனம் கும்மியடிக்குது...!**

என்பார் வைரமுத்து. தலைவன் தலைவியின் கமுக்க வாழ்க்கையை எவருக்கும் தெரியாது என நினைத்திருந்த, நினைத்து நினைத்து மகிழ்ந்திருந்த களவு வாழ்க்கையை ஊருக்குள் இழுத்து வைத்துக் கும்மியடிப்பது அலர். அத்தகைய அலர்ப்பேச்சு – ஊர்ப்பேச்சாக திருவிழா நடக்கின்ற வீதியைப் போல மணந்து கிடப்பதை,

**''இறவுப் புறத்து அன்ன பிணர்படு தடவுமுதல்**
**சுறவுக் கோட்டன்ன முள்இலைத் தாழை**
**பெருங் களிற்று மருப்பின் அன்ன அரும்பு முதிர்பு**
**நல்மான் உழையின் வேறுபடத் தோன்றி**
**விழவுக்களம் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப...**
**- நற்றிணை - 19**

என்கிறார் நக்கண்ணை.

விழா நடத்த வீதிபோன்று தாழை மணக்கிறது. தாழை மணப்பது போன்ற அலர்ப்பேச்சு – ஊர்ப்பேச்சாக ஊர்முழுதும் வீசுகிறது.

ஆதலால் ஊராரின் வாயடைக்க உற்றவளைக் கைப்பிடிக்க வேண்டும் என்கிற தோழியின் வேண்டுகோளை இப்பாடல்வழி அறியலாம்.

அத்தகைய அலரை சேற்றுமணம் என்ற கவிதையில் பின்வருமாறு நண்டோடு சேர்த்து பதிவு செய்திருப்பார் கவிஞர் செழியரசு.

**நடவுக்கு முன்**
**வெட்டிப் பதப்படுத்திய**
**சேற்றுவரப்பில்**
**வளைதோண்டி**
**புகுந்த நண்டாய்**
**எனக்குள் நீ.**

**தோண்டிய மண்கொண்டு**
**உள்நுழைந்த**
**வெளித்துவாரம் அடைத்து**
**யாருக்கும் தெரியாமல்**
**குடியிருப்பதாய்**
**நீ வேண்டுமானால் கருதலாம்...!**

**உன்**
**கால் தடங்களையும்**
**வளைதோண்டிய பொருக்குகளையும்**
**வைத்து**
**நம் வரப்பின்மேல் நடப்பவர்கள்**
**குறிப்பிட்டுச் சொல்லிப் போகின்றார்கள்**
**இந்த வளைக்குள்**
**நண்டு இருப்பதாக.**

இந்தக் கவிதையைப் படிக்கும்போது நண்டைப் பற்றி பேசுவதாக வெளிப் படையாகத் தோன்றினாலும், அது வண்டைப் பற்றி பேசுவதை, அதுவும் களவுக்காதல் வண்டைப் பற்றி பேசுவதை அறியலாம். நம் களவு வாழ்வு எவருக்கும் தெரியாததென வளைக்குள் பதுங்கியிருக்கும் நண்டாய் தலைவி நினைத்திருந்தாலும், வரப்பின் மேல் நடக்கின்றவர்களின் அலர்பேச்சு எல்லோருக்கும் தெரிந்திருப்பதை உணர்த்தி விடுகிறது.

தமிழரது வாழ்வியல் நெடுக, அது களவு வாழ்வானாலும், கற்பு வாழ்வானாலும் தலைமக்களுக்கு இடையேயான ஊடல் முக்கிய பங்காற்றுகிறது. அவர்களுக்கு இடையேயான ஊடலே வாழ்வின் இன்பதைக் கூட்டும். பகலை துரத்தி இரவை யாசிக்கும். இரவும் விடியக்கூடாது என வேண்டி நிற்கும். இருள் வெளிச்சம் ஊற்றி இரண்டும் ஒன்றாய்க் கலக்கும்.

அந்த ஊடலும் சிறு அளவில் இருந்தால் புலவி எனப்படும். ஊடல் என்றால் சிணுங்கல், புலவி என்றால் செல்லச்சிணுங்கல் என்றும் விளங்கிக் கொள்ளலாம். புலவியும் சிறுஅளவில், அதாவது உணவில் உப்பு போல் இருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். உணவில் உப்பு அதிகமானால் உணவு ருசிக்காது. வாழ்வில் ஊடல் அதிகமானால் வாழ்க்கை ரசிக்காது. இதனை,

**உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல் - குறள் 1302**

என்ற குறள்வழி அறியலாம். உப்பு வேண்டுமானால் சிறிது தூக்கலாக இருக்கலாம். ஆனால் அது ஊடலுக்குப் பொருந்தாது.

தொல்காப்பியம் தலைவன்–தலைவியின் கற்புக்காலப் பிரிவை ஆறு வகையாகப் பிரிக்கின்றது.

அதாவது,

1. பரத்தையர் பிரிவு
2. ஓதற் பிரிவு
3. காவற் பிரிவு
4. தூதிற் பிரிவு
5. துணைவயிற் பிரிவு
6. பொருள்வயிற் பிரிவு

ஆகும்.

இங்கு பரத்தையற் பிரிவு பற்றி ஒரு பாடல். கற்புக் காலத்தில் தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையிடம் செல்கிறான். நுகர்வு முடிந்த பின்பு மீண்டும் தலைவியைச் சேரும் தலைவன் – அவள் சொல்வதை எல்லாம் கேட்கின்றானாம். அது எப்படி என்றால், என்னுடன் சேர்ந்திருக்கும்போது, நான் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டு அதுபடி நடந்து கொண்டிருந்த தலைவன், இப்போது கண்ணாடி முன் கையும் காலும் தூக்கத் தூக்கும் பாவை போன்று தலைவி சொல்கின்றபடி எல்லாம் கேட்கின்றான் என்னும் பொருள்பட,

**''கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉ மூரன்**
**எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**

ஆடிப்பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே''
- குறுந்தொகை 8.ஆலங்குடி வக்கனார்

என்று கிண்டலடிக்கிறாள் குறுந்தொகை பரத்தையொருத்தி.

மாதவியிடமிருந்து மீண்டு வந்த கோவலனின் கையறுநிலை கூற்றையும் நாம் சொல்லியாக வேண்டும். கோவலனின் கூற்று கொஞ்சம் மிகையாகத் தோன்றினாலும் தன் செயலை நினைத்து நாணப்படுவது கவனிக்கத்தக்கது. அது தன்னிலை உணரல். மாதவி என்ற பெண்நிலை உணராத உளரலாகக்கூட இருக்கலாம்.

''சலம்புணர் கொள்கை சலதியொடு ஆடி
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு''
- சிலப்பதிகாரம்

என்கிறான் கோவலன். பரத்தையற் வாழ்விலும் ஓர் அறம் உண்டு. அந்த அறவாழ்வு கோவலனின் காதற்கணிகை மாதவியிடமும் காணலாம். கோவலனின் இழப்பை தாங்கிக்கொள்ள முடியாத கண்ணகி, நீதியை நிலைநாட்டி உயிர் துறந்தாள். மாதவியோ உணர்ச்சி துறந்து துறவி ஆனாள். உயிர் துறப்பது எளிது. உணர்ச்சி துறப்பது அரிது. செத்துப்போவது எளிது. செத்துக்கொண்டே இருப்பது அரிது. மாதவி தினந்தினம் செத்துக்கொண்டே இருந்தாள். ஆகையால்தான் கவியரசு கண்ணதாசனும்,

''கண்ணகியின் கற்புக்கு
தாய் கற்பு
உன் கற்பு...''

என்பார். கவிஞர் வாலியோ,

''கலையால் கலைந்துபோன
காதல் வாழ்வின் நினைவுகளைத்
துறவால் பழிதீர்த்த
துன்ப நாட்டியத்தின்
துணிச்சல் முத்திரை...!''

என்பார். அது நிற்க.

சிறுவயது உடையோர் பரத்தையரைத் தேடிச்சென்று விடுகின்றனர்.

அவர்களைக் கவனமாகக் கையாள வேண்டும் என்று முதியவள் ஒருத்தி அறிவுறுத்துவது போல,

''வாயில்வடு செய்யாமல்
மார்பில் நகம் வையாமல்
தோயும் இதங்காட்டிச் சுகங்காட்டு''
- கூளப்பநாயக்கன் காதல்

என்கிறாள்.

அவ்வாறு, பரத்தையின் நகக்குறியும், பற்குறியும் நெஞ்சிலும், முகத்திலும் காணப்படும் தலைவனை,

''இஃது ஒத்தன்! புள்ளிக் கள்வன்
புனல்சேர் பொதுக்கம்
வாள்உகிர் போந்தனவும் வாள்
எயிறு உற்றனவும்
ஒள்இதழ் சோர்ந்த நின்
கண்ணியும் நல்லார்
சிரறபு சீறச் சிவந்தநின் மார்பும்
தவறாதல் சாலவோ கூறு.
.......''

மருதக்கலி 23. இளநாகன்

என்று இழித்தும் பழித்தும் பேசுகிறாள் கலித்தொகைக்காரி.

அய்யய்யோ... உன்னைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. சேற்று வரப்பில் நகர்ந்து சென்ற நண்டின் கால்விரல் தடங்கள் போல உன் நெஞ்சும், மார்பும் காணப்படுகின்றன.

பரத்தையின் கூரிய நகங்கள் அழுத்திய கீறல்களும், ஒளிவீசும் பற்கள். உண்டாக்கிய வடுக்களும், கசங்கிப்போன உன் கழுத்து மாலையும் என்னால் காணச் சகிக்கவில்லை என்று ஊடலில் பொங்கியெழுகிறாள்.

மனிதகுல வாழ்வியலோடு நண்டும் ஒட்டி உறவாடி இரண்டறக் கலந்து நகர்வதை ஒருவாறு நாமும் உணரலாம்.

– நகரும்

**கோ.அருணகிரியின் மண்ணின் கதைகள் மக்கள் மொழியில்**

அடுத்த இதழில் தொடரும்...

# தீம்கள் பெண்ணை - நூல் அறிமுகம்

த.ரெ.தமிழ்மணி

பேராசிரியர் சு.இராமசுப்பிரமணியன் எழுதிய ‘தீம்கள் பெண்ணை’ நூல். தடை செய்யப்பட்ட காலத்திலும் கிடைத்த கள்!

‘தீம்கள் பெண்ணை’ என்பதற்கு இனிப்பான கள்ளையுடைய பனை என்பது பொருள். இது நற்றிணை தந்த தொகைநிலையாகும்.

வாழ்வியல் முதல், சங்க இலக்கியம் வரை பனை என்னவாக இருக்கிறது என்பதைப் பற்றிய இலக்கிய வரலாறே இந்நூல். பனையின் அடி முதல் நுனி வரை இதன் கருப்பொருளாகி இருக்கிறது. தமிழ்நாட்டின் தேசிய மரம் பனை. அது “நூறு ஆண்டுகள் வாழக்கூடியது பனையில் சில இனங்கள் 600 ஆண்டுகள் வரையிலும் வாழக்கூடியவை” என்னும் அருஞ்செய்தியில் தொடங்கி பனங்காடு, பனம்பூ, நுங்கு, பதநீர் கருப்பட்டி, பனையோலை பனைமட்டை, பனைநார், பனம்பழம், பனங்கிழங்கு, தவண், என்னும் தலைப்புகளில் புதையல் அள்ளித் தந்திருக்கிறார். இதில் நம் நெஞ்சை வீழ்த்துவது சங்க இலக்கியங்களில் பனைமரம் என்னும் தலைப்பில் ஆனவை.

பனங்காய் வண்டியைக் கூந்தல் வண்டி என்றும் பனங்கொட்டையின் உள்ளே உள்ள பூவைத் தவண் என்றும் நாம் தொலைத்த, நெல்லைத்தமிழ்ப் பாதுகாத்து வைத்திருக்கிற சொல்விருந்தைச் சுவையாகப் பரிமாறுகிறார், தென்னைமட்டை நாரை நாம் அவுணி என்போம்; பனைமட்டை நாரை அவர் அகனி என்கிறார்.

அரிசிப்பெட்டி என்ற உட்தலைப்பைப் பார்த்தவுடன் “வித்தொடு சென்ற வட்டி வரும் என நினைத்தேன் ஆனால் அதில் இடம்பெற்றிருந்த பண்பாடுசார் செறிவுச்செய்தி புதியதாக இருந்தது. கார்த்திகை நாளில் நாளேடு ஒன்றில் அவர் எழுதியிருந்த கட்டுரை இந்நூலில் இடம் பெறாதது சின்ன ஏமாற்றம்.

யானை, அன்றில் போன்ற உயிரினங்களின் மசக்கை உணர்ந்த பழந்தமிழரின் உயிரிநுண்ணோக்கு வியக்க வைக்கிறது.

சேர மன்னர்கள் அணிந்த பணம் பூ மாலை குறித்து, “நூறு ஆண்டுகள் வயது முதிர்ந்தால் தாளிப்பனை பூப்பதுண்டு. ஆனால் சேர மன்னர்கள் அணிந்திருந்த பனம்பூ மாலை இந்தப் பூக்களால் தொடுக்கப்பட்டதாகஇருக்கவாய்ப்பில்லை. ஆண்பனையின் கதிர்த்தண்டில் இருக்கும் மொக்குகளைப் பனம்பூ என்று சொல்வதுண்டு, அவற்றைத் தொடுத்து அணிந்திருக்கலாம் பெண்பனையின் விரிந்த பாலையை மாலையாக அணிந்திருக்கலாம். வெண்ணிறமுடைய குருத்தோலையைத் தரித்துத் தொடுத்தும் மாலையாக அணிந்திருக்கலாம்“ என்று குறிப்பிடுவது கருதத்தக்கது.

பனையைச் சூழ்ந்து அழித்த ஆலமரம் குறித்து ஆசிரியர் இப்படி கூறுவது கவனிக்கத்தக்கது. “உண்மையில் பனை மரத்தில்தான் ஆலமரம் வளர்ந்து இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் பனை காலத்தால் முந்தியது;ஆல் காலத்தால் பிந்தியது இயற்கையின் இத்திருவிளையாடல் நம் வாழ்விலும் பல இடங்களில் பொருந்திப் போவதுண்டு. உலகம் எங்கிலும் வந்தேறிகள் பழங்குடிகள் போன்று மயக்கத்தை ஏற்படுத்தி மண்ணின் உண்மையான பழங்குடிகளை அடக்கி ஆளுவதை ஒரு சான்றாகக் கூறலாம்“ இதையே இந்நூலின் பாவியம் எனலாம். பாவியம் என்பது காப்பியப் பண்பு: அறம்.

நூலைப் படிக்கத் தொடங்கியவுடன் பனங்காடு ஒன்றில் கால்வைத்த உணர்வு ஏற்பட்டது; முடித்தவுடன் ஏற்பட்ட கள்ளுண்ட மயக்கம் இன்னும் தெளிந்த பாடில்லை.

தீம்கள் பெண்ணை....
பனைசார் கலைக்களஞ்சியம்!
பக்கம்: 56
விலை : 80

வெளியீடு; பொன்னி,
4அ பூபதி நகர், கீழ்க்கட்டளை,
சென்னை – 17

# கட+உள் = கடவுள்

## இடங்காண்கோட்டை சிவகுமார்

இன்று (தை–29. 11.2.25) தைப்பூசம். தமிழர் முன்னோன் முருகனுக்கு உரிய நாள். முருகனைப் போற்றி ஒரு நல்ல பணியைத் தொடங்குகிறேன்.

கடவுள் இருக்கிறது என்று ஒரு கூட்டம். அது இல்லை என்று ஒரு கூட்டம். கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி, பிற்போக்குவாதி, மூடநம்பிக்கையாளன் என்றும் கடவுளை மறுப்பவன் மேதை, அறிவாளி, முற்போக்குவாதி, விஞ்ஞானி என்றும் பார்க்கப்படுகிற நிலை இப்போது. இரண்டு பக்கமும் வாதங்கள், விவாதங்கள். அடிதடிகள். எது சரி? இரண்டு பக்கத்தையும் விடுத்து ஒரு நடுநிலைப் பார்வை பார்க்கலாம்.

கடவுளை மறுப்பவர்கள் புறத்தோற்றத்தில் பார்த்ததை வைத்து மறுத்து விடுகிறார்கள் கடவுளைப் பற்றிய அகத்தோற்றம் கடவுளை நம்புபவர்களுக்கு இல்லை. ஆதலால் அவர்கள் முழு விளக்கம் தருவதில்லை. கடவுளை ஏற்போமா மறுப்போமா என்பதற்கு முன்னால் முதலில் கடவுளைப் பற்றிய ஒரு முழு விளக்கத்தைப் பார்த்து விடலாம்.

கடவுள் என்றால் என்ன? கடவுள் என்பவர் யார்? கடவுள் ஒரு பொருளா? மனிதனா? இரண்டில் எது சரி? கடவுள் என்றால் ஒரு கடவுளா? பல கடவுள்களா? ஒவ்வொரு மதத்துக்கும் ஒரு கடவுளோ பல கடவுள்களோ இருக்கிறார்களே! இதில் எந்தக் கடவுள் உண்மையான கடவுள். கடவுளை மறுப்பவர்கள் தனி. கடவுளை ஏற்பவர்களிலேயே இந்த மதக் கடவுளை அவர் ஏற்க மாட்டார்; அந்த மதக் கடவுளை இவர் ஏற்க மாட்டார் என்பதே இன்றைய நடைமுறை உண்மை இந்த நிலையில் எந்தக் கடவுள் உண்மையிலேயே கடவுள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

முதலில் கடவுள் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். கடவுள் என்பதற்கு ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு பெயர் உண்டு கடவுள், தெய்வம், சாமி, ஸ்வாமி, பிதா, அல்லாஹ், எல், எல்லோஹிம் மற்றும் அதன் பல வடிவங்களுக்கு, மனிதராய்ப் பிறந்து தெய்வமானவர்களுக்கு எனப் பல பெயர்கள். இந்த எல்லா பெயர்கள் எல்லாவற்றையும்விட சிறந்த, வேறுபட்ட, முழுமையான ஒரு பெயர் தமிழ் பெயரான கடவுள் என்பதுதான். என்ன சிறப்பு இருக்கிறது அந்தப் பெயரில்?

உலகத்தில் கடவுள் குறித்த எல்லா மொழிச் சொற்களும் பெயர்ச் சொற்கள். ஆனால் கடவுள் என்ற தமிழ்ச்சொல் மட்டும் வினைச் சொல்லாக இருக்கிறது. இயங்கிக் கொண்டே இருக்கிற வினை அதாவது செயலாற்றல் தன்மை உடையதால்தான் அதை அறிய முடிகிறது கடவுள் என. அதை உணர்த்தவே தமிழ்ச் சொல் வினைச்சொல்லாக இருக்கிறது.

கடவுள் என்ற சொல்லைப் பிரித்தால்

கட+உள் = கடவுள்

என்ற முறையில் அமையும். கடந்து உள்ளது (அ) உள்ளவர் கடவுள்.

1) யாரைக் கடந்து? 2) உட்புறமாக எதைக் கடந்து? 3) வெளிப்புறமாக எதைக் கடந்து.? இப்படி மூன்று வினாக்கள் கேட்கலாம்.

**1) யாரைக் கடந்து :**

அம்மாவை, அப்பாவை, அண்ணனை, தம்பியை, கணவன் (அ) மனைவியை, குழந்தைகளை, உற்றார் உறவினரை, நண்பர்களை, மற்ற மனிதர்களை, எல்லா உயிர்களை, அவற்றின் நினைவைக் கடப்பது. அவர்களின் அன்பை பாசத்தை, நேசத்தை, நட்பை மறந்து கடப்பது. அதனால் வரும் இன்ப துன்பங்களைக் கடப்பது.

எமன் வைத்திருக்கிற சுயிறுக்கு பாசக்கயிறு என்று பெயர். இந்த உலகின் மேல், உறவுகளின் மேல் வைத்திருக்கிற

பாசத்தை அறுத்து, நம் உயிரைக் கட்டி, எடுத்துச் செல்வதால் அது பாசக்கயிறு. இந்த உலகில் உள்ள எவற்றின் மீதும் வைத்திருக்கிற பாசம், பற்று, ஆசை ஆகியவற்றைக் கடந்தால் எல்லாம் கடந்த கடவுளை உணரலாம்.

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்று புத்தரைப் போன்றவர்கள் சொன்னதும் மயக்கங்களால் ஆன உலகைக் காக்கிற தலைவனான திருமாலை மாயன் என்றும் மாயமான சக்திகளைக் கொண்டு உலகங்களை ஆக்கியவளான சக்தியை மாயா என்றும் மாயனும் மாயாவும் அண்ணன் தங்கை என்றும் சொல்வதற்கான காரணமும் "சதுர்வர்ண்யம் மாயா சிருஷ்டம்' என்ற பகவத்கீதை வரியும் உலகே மாயம் வாழ்வே மாயம் " என்ற பாடலும் இங்கு நினைவுக்கு வரலாம்.

**2 உட்புறக்கடப்பு:**

இதை இரண்டு பிரிவாகச் சொல்லலாம். பிரிவு அ. மறை கடப்பு. பிரிவு ஆ.உரு கடப்பு

**அ. மறைகடப்பு**

இது கண்ணால் காண முடியாத மறைவைப் பற்றியது. நம் ஆன்மாவாகிய உயிரியக்கத்தின் படர்க்கை நிலைதான் மனம் என்பார் வேதாத்திரி மகரிஷி. மனம் என்பது ஆறாம் அறிவு. ''ஆறறிவதுவே. அவற்றோடு மனனே'' என்கிறது தொல்காப்பியம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆறாவது அறிவு மனம் என்று கண்டுபிடித்தது தமிழர்கள்தான். மனம் என்பதைப் பற்றி இவ்வளவு தெளிவான வரையறை உலகத்தின் வேறு எந்த நூல்களிலும் இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. மனம் என்பது குறித்து அறிவியல் உலகம் ஆய்வு செய்து வருவது சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகளாகத்தான்.

மனம் என்பது என்னவென்று தெரிந்து விட்டது. மனம் என்ன செய்யும்? அதன் வேலை என்ன? அதன் திறன் என்ன? மனம் ஒரு அலையல்லவா! எனவே அதன் போக்கில் அது ஓடிக்கொண்டேயிருக்கும் கற்பனை செய்துகொண்டே இருக்கும். மூன்று காலங்களையும் கற்பனை செய்யும். 1.ஏற்கனவே என்ன நடந்ததோ அதைக் கற்பனை செய்யும். 2. இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? அதில் நான் என்னென்ன செய்கிறேன் என்று கற்பனை செய்யும். 3. இனி என்ன நடக்கும்? நான் என்ன செய்வேன்? எதைச் செய்வேன்? எப்படிச் செய்வேன்? என்று கற்பனை செய்யும்

நேர்சால் ஓட்டுகிற இடத்தில் குறுக்குச்சால் ஓட்டுவது போல புரட்சிக்காரவுக , கடவுள் மறுப்புவாதிக, பகுத்தறிவுவாதிக என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்பவர்கள் (இவர்களைப் பற்றி பின்னால் பார்க்கலாம்) எந்த உயிரினத்துக்குமே இல்லாத அறிவு பகுத்தறிவு. பகுத்தறிவே ஆறாம் அறிவு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது தவறு. எல்லா உயிரினத்துக்கும் அதனதன் அறிவுத்தன்மைக்கு ஏற்றவாறு பகுத்தறிவு உண்டு.

நான்கு ஆடுகள் ஒரே நேரத்தில் குட்டி போட்டிருக்கின்றன. எல்லாம் ஒரே நிறத்தவை. ஒரு மாதத்திற்குப் பிறகு எல்லாம் ஒரே இடத்தில் மேய்கின்றன. எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதால் ஆறாம் அறிவுடைய நமக்கு எந்தக் குட்டி எந்த ஆட்டுக்குச் சொந்தம் என்று தெரியாது. ஆனால் அந்த ஆட்டுக்குத் தெரியும். சரியாக அழைத்து வரும். அது பகுத்தறிவா இல்லையா..?

பல பறவையினங்கள் சரியான காலநிலை இருக்கிற வேடந்தாங்கலுக்கு வெளிநாட்டிலிருந்து பல்லாயிரம் கிலோமீட்டர் தூரம் பறந்து வந்து திரும்பிச் செல்கின்றன. நாம் கடலில் சென்றால் திசை தெரியாது, எல்லாம் குழம்பி விடும். ஆனால் பறவைகள் சரியான திசையைக் கண்டறிந்து செல்கிறதே அது பகுத்தறிவா இல்லையா?

யானைகள் பூமிக்குக் கீழேயுள்ள நீரோட்டத்தை உணரும். பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள தன் இனத்தைக் கண்டுபிடித்து விடும். நாம் கடலில் ஆபத்தில் இருந்தால் டால்ஃபின்களுக்குத் தெரியும்; நம்மைக் காப்பாற்றும். நாய் அதன் முதலாளியை

ஆபத்திலிருந்து காத்திருக்கிற செய்தியைப் படித்திருக்கிறேன்.

புயல், மழை வெள்ளம். நிலநடுக்கம் போன்றன வரப்போவதை மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களால் உணர முடியும். சிறு வாய்க்காலின் இந்தக் கரையில் நிற்கிற ஆடு அந்தக் கரைக்குச் செல்வதற்குச் சிறிது தூரம் பின்னோக்கிச் சென்று விட்டுப் பின் ஓடி வந்து தாவித் தாண்டிச் செல்லும் அது பகுத்தறிவா இல்லையா...? ‘நாம் தாவரங்களை வெட்டுவதற்காக நெருங்கினால் அவைகளுக்குத் தெரியும்; வாடிப்போகும், என்று அறிவியல் கண்டுபிடித்து இருக்கிறது. கட்டிப்பிடித்து மரங்களோடு பேசினால் மரங்களால் உணர முடியும். இசையை வாசித்தால் பழங்கள் வேகமாகப் பழுக்கும்; மாடுகள் அதிகமாகப் பால் கறக்கும்.

ஒரு மலைக் கிராமப் பகுதியில் ஒரு படம் ஓடிக் கொண்டிருக்கிறது, அப்போது யானைகள் எந்தப் பயிரையும் சேதம் செய்யாமல் ஒதுங்கி, நடந்து வந்து அந்தப் படத்தின் ஒரு குறிப்பிட்ட பாடலைக் கேட்டுவிட்டு, மறுபடியும் திரும்பிச் சென்றுவிடுகிறது. இது அந்தப் படம் ஓடுகின்ற சில நாட்கள் தொடர்ந்தது. அந்தப் படம் வைதேகி காத்திருந்தாள். அந்தப் பாடல் நாம் ரசித்து ரசித்து உருகிய “ராசாத்தி ஒன்னக் காணாத நெஞ்சு’’. இது என்ன அறிவு? பகுத்தறிவு எல்லா உயிரினத்துக்கும் உரியது. மனம் என்பதே ஆறாம் அறிவு. அது மனிதனுக்கு மட்டும் உரியது.

பகுத்தறிவு எல்லா உயிரினங்களுக்கும் உண்டு என்பது தெரிந்து விட்டது மனம் என்கின்ற கற்பனை ஆற்றல் மனிதனுக்கு மட்டும் உரியதா? மற்ற உயிரினங்களுக்குக் கிடையாதா ? இதற்கான விடை ஆம். அது மனிதனுக்கு மட்டும் உரியது என்பதுதான். ஒரு தூக்கணாங்குருவியைப் போல நம்மால் வீடு கட்ட முடியாது. அந்த அறிவு அதற்கு உண்டு. ஆனால் கற்பனை கிடையாது. ஒரு கோடி ஆண்டுக்கு முன்பிருந்த தூக்கணாங்குருவியும் ஒரு லட்சம் ஆண்டுக்கு முன்பிருந்த தூக்கணாங்குருவியும் ஓராயிரம் ஆண்டுக்கு முன்பிருந்த் தூக்கணாங்குருவியும் இப்போது இருக்கிற தூக்கணாங்குருவியும் ஒரே மாதிரி கூட்டைத்தான் கட்டுகிறது இன்னும் ஓராயிரம் ஆண்டுக்குப் பின்போ ஒரு லட்சம் ஆண்டுக்குப் பின்போ ஒரு கோடி ஆண்டுக்குப் பின்போ வாழும் தூக்கணாங்குருவியும் இதே போன்ற கூட்டைத்தான் கட்டும். மாற்றிக் கட்டத் தெரியாது ஏனென்றால் அதற்குரிய அறிவு மட்டுமே அதற்கு உண்டு. கற்பனை அறிவாகிய மனம் என்னும் ஆறாம் அறிவு அதற்கு இல்லை.

மனிதர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குறிஞ்சிக் குகைகளில் வாழ்ந்தார்கள். பின்பு அறிவு பெற்றுக் கீழிறங்கி, முல்லைக் காடுகளில் குடிசை கட்டி வாழ்ந்தார்கள், பின்பு ஆற்றங்கரைகளுக்கு நகர்ந்து மேடு பள்ளம் திருத்தி, சிறு வீடுகள் கட்டி வாழ்ந்தார்கள். பின்பு ஓட்டு வீடுகளாக ஆக்கினார்கள். அதன் பின்பு மாடி வீடுகளாக மாற்றினார்கள் ஒரு மாடி இரண்டாக மூன்றாக நான்காக வளர்ந்துகொண்டே போனது. சங்ககாலத்திலேயே ஏழு மாடிகள் கொண்ட வீடுகள் இருந்தனவென்பதை “எழுநிலை மாடத்து” என்று சிலப்பதிகாரம் சொல்கிறது.

மேலும் மனிதன் இதற்கு மேல் என்ன செய்ய வேண்டும்.? எப்படிச் செய்ய வேண்டும்? எப்படி அழகாக்க வேண்டும்.? என்று தன் கற்பனை ஆற்றலை விரித்து, நூற்று இருபத்தோரு மாடிகள் கொண்ட புர்ஜ் துபய் என்ற கட்டடத்தைக் கட்டியுள்ளான். உலகம் முழுவதும் விதவிதமான அமைப்பு, முறை, வடிவம், அழகு கொண்ட பல கட்டடங்களைப் பார்க்கிறோம். இவையாவும் மனிதனின் கற்பனைத் திறத்தால் விளைந்தவை.

ஏற்கனவே இருக்கிற ஒன்றிலிருந்து கற்றுக் கற்று, ஒன்றை அதற்கும் மேலாக ஆக்கும் (அ) இன்னொன்றாக மாற்றும் அறிவுக்கு பெயர்தான் கற்பனை அறிவு. அதாவது மனம் என்னும் ஆறாம் அறிவு. தூக்கணாங்குருவிக்கு இருப்பது எதைச் செய்ய வேண்டுமோ அதை மட்டும் செய்கிற அதன் அறிவு. மனிதனுக்கு இருப்பது என்ன இருக்கிறதோ அதை மாற்றிமாற்றி மேம்படுத்திச் செய்கிற கற்பனை அறிவு. அதுதான் ஆறாம் அறிவு. அதைச் செய்யும்

புலன்தான் மனம் அது மனிதனுக்கு மட்டுமே உரியது.

நம் செயல்களை, சொற்களை எண்ணங்களை எண்ணங்களையுடைய அந்த மனத்தைக் கடந்து கடந்து உள்நோக்கிச் செல்ல வேண்டும். மனத்தின், எண்ணங்களின் அலைச்சுழல் (அ) சுழலும் அதிர்வெண் (frequency) எட்டு அல்லது அதற்கு மேல் இருந்தால் நாம் இன்ப துன்பங்களுக்கு ஆட்படுகிற சாதாரண மனிதனாக இருப்போம். அது மனத்தின் உள்நோக்கிய பயணத்தால் குறைந்து குறைந்து நான்குக்கு வந்தால் (அமைதியான, தெளிவான, வலிமையான நிலைக்கு வந்தால்) எல்லோரும் பாராட்டும் சிறந்த மனிதராக இருப்போம். அது மேலும் குறைந்து குறைந்து மன அதிர்வெண் ஒன்றிலிருந்து மூன்றுக்குள் அமைந்தால் நாம் பிரபஞ்சத்தைப் பார்த்து அறிகிற விஞ்ஞானியாகவோ அல்லது பிரபஞ்சத்தை உணர்ந்து அறிகிற மெய்ஞானியாகவோ மாறிவிடுவோம்.. பிரபஞ்ச இயக்கத்தையும் அதாவது எலக்ட்ரான் புரோட்டான் நியூட்ரான்களால் ஆகிய விண்வெளி இயக்கத்தையும் பிரபஞ்ச ரகசியத்தையும் அதாவது தெய்வீக ரகசியத்தையும் அறியலாம், உணரலாம்.

அதை இன்னமும் குறைத்துச் சுழியமாக மாற்றினால் அதாவது மன இயக்கத்தை (எண்ணம், சொல், செயல், நினைவு, கனவு, உணர்வுகளை) நிறுத்தினால் பிரபஞ்சத்தின் துகள்களுக்கு உள்ளே உள்ள ஆற்றலை, அதன் பிரதியாகிய பிரபஞ்சத்துக்கு வெளியே உள்ள ஆற்றலை அதாவது கடவுள் நிலையை உணரலாம்.

தொடரும்...

கவிதை

## ஈரம்

சக உயிர்களுக்கு
எப்போதும் இரங்குபவளாகவே
இருந்தாள் பாட்டி

மேனியில் ஊர்ந்தேறும்
எறும்பினையும்
மெல்ல தூக்கி
தரையில் இறக்கிவிடுவாள்



நடந்து செல்லும் போது
தெரியாமல் மிதித்த பூவை
தொட்டுதொட்டு
முத்தமிடுவாள்

வீட்டுக்குள் நுழைந்த அரவத்தினை
அடிக்காமல் வெளியேற்றியவள்
வானவில்லை வீட்டுக்குள்
வரவழைத்திருந்தாள்

சாலையைக் கடக்கும்
தருணத்தில் பாட்டியை
சடலமாக்கிய சக்கரங்களுக்கு
பாவ மன்னிப்பை அவள்
தந்தருளிய தருணத்தில்தான்

ஊரின் பழமையான
ஆலயத்தின் கோபுரத்தில்
புறா ஒன்று வந்தமர்ந்ததாகப்
பேசிக்கொண்டார்கள்.

- கூடல் தாரிக்

சிறுகதை

# பொணந்தின்னிப் புளி

## கிஷ்கிந்தா பாலாஜி

"ஏய்..ஏய்.சூதானமா பிடிச்சு இறக்குங்கப்பா.."

"தலைகெழக்க கவுத்துறாதீங்க..."

பாடை இறக்கப்பட்டது...

"மக்கமாரு சுத்தி வந்து தண்ணிக்குடம் உடைங்க."

இறந்த கிழவனின் மகள் தலை விரிகோலமாக மண்பானையில் நீரை தலையில் சுமந்துகொண்டே அழுகையுடன் பிணத்தைச் சுற்றி வந்தாள். சுற்றும்போது பானை ஓட்டையிடப்பட்டு நீர் ஒழுகிக்கொண்டே இருந்தது... கடைசியில் புளிய மரத்தடியில் பானை உடைக்கப்பட்டு பெண்கள் வீடு திரும்ப ஆரம்பித்தனர்...

"கொள்ளிக் கொடம் ஒடச்சாச்சு... பொம்பளை ஆளுகலாம் இந்த புளியா மரத்தை சுத்தி வீட்டுக்குபோயி விளக்கு பாத்துட்டு அவுகவுக வீடு போயி சேருங்க..."

ஊர் பெரியாம்பிளை கத்திவிட்டு கிளம்பினார்

பெண்கள் கூட்டம் இறந்தவரின் மனைவியையும் மகளையும் கைத்தாங்கலாய் பிடித்துக்கொண்டே நடக்க ஆரம்பித்தது..

வயல்காட்டிலிருந்து ஓடி வந்த குள்ளக்காளுக்கு மூச்சு வாங்கியது.

"அடப்பாவிகளா. அதுக்குள்ள தூக்கிட்டாகளே. என்ன செய்யுறது..." சொல்லிக்கொண்டே சேலையை இழுத்து தலையில் முக்காடு போட்டு முந்தானையை எடுத்து மூக்கை மூடிக்கொண்டே அழும் பாவனையோடு கூட்டத்தில் கலந்து விட்டாள். ஊர் வழக்கப்படி துக்கப்பட்ட வீட்டுப் பெண்களைக் கட்டி அணைத்து அழ வேண்டும்.

அந்தப் பெண்களைத் தாங்கிப் பிடிக்கும் சாக்கில் ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள். அவர்கள் வீட்டுக்குப் போய் கொஞ்சம் ஒப்பு சொல்லி அழுதாள். பிறகு அங்கிருந்து மெல்லக் கிளம்பினாள் .

சாவு வீட்டுக்குச் சென்று வீடு திரும்பியவள் குளித்து முடித்தாள்...

குள்ளக்காள் ஊர் ஓரமாய் தென்னந்தோப்பில் கூலிக்குத் தோப்பு பார்த்துக்கொண்டு குடியிருக்கிறாள்.. வழிவழியாக இவர்கள் குடும்பந்தான் அந்தத் தோப்பைப் பார்க்கிறது. அவர்கள் உள்காட்டுக்காரர்கள். வருசநாடு, மயிலாடும் பாறை எல்லாம் உள்காடு என்பார்கள். குள்ளக்காளுக்கு வருஷநாட்டுப் பக்கம் சொந்த ஊர். இறந்து போன பெரியவர்தான் குள்ளக்காள் கல்யாணத்தில் தாலி எடுத்துக் கொடுத்து நடத்தி வைத்தவர் ...

அவளுக்கு பழைய நினைவுகள் ஒன்றைப் பற்றி இன்னொன்று இன்னொன்றைப் பற்றி மற்றொன்று என்று வந்து விழ ஆரம்பிக்கின்றன. குள்ளக்காள் சடங்காகி நின்றபோது வந்து குச்சுகட்டி விட்டுப் போன தாய் மாமன் அடுத்த மாதமே கல்யாணம் என்றான்.

கல்யாணத்துக்குச் சீராக ஓலை. மூக்குத்தியாவது போட வேண்டும் என்று அம்மாச்சிக்காரி அடம் பிடித்தாள். அதெல்லாம் இல்லை. பண்டபாத்திரம், கொடிகொலுசு, புதுத் துணிமணி இவ்வளவுதான் முடியும் என்று அப்பா கறாராகச் சொல்லி விட்டார். பேச்சு முறிந்து போனது.

அதுக்கு அடுத்த மாதமே அப்பா கூடப் பிறந்த சிங்காரி அத்தை மருமகளுக்குத் தானே ஓலைமூக்குத்தி போட்டு பரிசச் சீலை கொடுத்து தன் மகனுக்குக் கட்டி, கூப்பிட்டுப் போய் விட்டாள். இவர்கள் சொத்துபத்து இல்லாத கூலிசனம்தான். உழைப்புதான் இவர்களுக்கு மூலதனம். தாய் மாமன் வீட்டுக்கு வாக்கப்பட்டுப் போயிருந்தால் இந்நேரம் பெரிய ஓலவந்தோப்புக்கே (இலவந்தோப்புக்கே) எஜமானி ஆகியிருப்பாள். அவரவர் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதுதானே நடக்கும். குள்ளக்காளுக்கு லேசாக சலிப்புத் தட்டியது.

ச்ச்... என்று உச் கொட்டிக் கொண்டாள்.

வீட்டுக்கு முன்னால் சற்று தொலைவில் ரோட்டோரமாய் அந்த வயதான

புளியமரம் நின்று கொண்டிருந்தது. ஊர்க்காரர்கள் ஈமச் சடங்குகள் செய்கிற அந்தப் புளியமரம்.

குள்ளக்காளும் சொந்த பந்தங்களும் கல்யாணம் முடிந்த கையோடுஇந்த புளிய மரத்தடியில்தான் லாரியில் வந்து இறங்கினர்.

இந்தப் புளிய மரம் பூத்துக் குலுங்கிய ஒரு வைகாசி மாதத்தில்தான் இங்கு வாழ்க்கைப்பட்டு வந்தாள். இவளின் முதல் காலடியையே புளியம் பூக்கள் மீது தான் வைத்தாள். அக்காக் குருவிகளின் குரலையே ஆசீர்வாதத்தின் ஒலியாக ஏற்றுக் கொண்டாள்.

அதெல்லாம் பழங்கதையானாலும் அவளுக்கு எப்பொழுதும் பிடித்த இடமென்றால் இந்தப் புளியமரத்தடிதான்...

உள்காட்டில் எப்போதாவது நீரோடும் மணல் வைகைக்கரையோரம் பிறந்தவளுக்குப் பார்க்கிற இடமெல்லாம் செழிப்பம்தான். ஊரெங்கும் ஒரு பசப்பு இருக்கும்.பார்க்கவே ஒரு சோங்கு இருக்கும் ஆனால் இங்கு பசப்பு குறைவு தான். அங்கே மாதிரி ஊங்கிறதுக்கெல்லாம் அழுகிற சவலைப் பிள்ளை மாதிரி மழை இல்லை. குள்ளக்காள் தான் வாக்கப்பட்டு வந்த நாளில் இருந்தே எல்லாவற்றையும் மென்று விழுங்கிக் கொண்டாள். கஷ்ட ஜீவனத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு விட்டாள்.

அவள் சந்தோச காலங்களையும் துக்க காலங்களையும் கடக்க உடனிருக்கிற உற்ற தோழியாய் நிற்கிறது இந்தப் புளிய மரம்..

அது ஒரு இலைகூட இல்லாமல் உதிர்த்து வெறுமையாய் நிற்கிற போதும் ஒரு கிளை கூட விடாமல் துளிர்த்து நிற்கிற போதும் பாளையம் கருப்பசாமி கோவில் பக்கம் இருக்கிற சுனை மகாமுனி போல சிரித்துக்கொண்டே நிற்பதை எண்ணி வியந்திருக்கிறாள்.

பிள்ளைகளின் திருமணத்திற்குப் பிறகு அவள் தனி மரமாக நின்றாலும் இந்த மரஞ்செடிகளுடன் இருப்பதால் தன்னை தோப்பாகவே உணர்கிறாள். வாழ்வின் இறுதி வரை வரும் துணை எவருமில்லை என்று அவ்வப்போது தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறாள்.

நல்ல கணவர், நல்ல மக்கள், நல்ல வீடு, நல்ல வாழ்க்கை என்றிருந்தவளுக்கு கணவரின் திடீர் மரணத்தை நல்ல சாவு என்றே எடுத்துக் கொள்ள முடிந்தது. துக்கம்தான். எனினும் எப்பாடும் படாமல் உறங்குவது போலே போய்ச் சேர்ந்த கணவனின் விடுதலையைப் பார்த்து அவன் நிலையில் நிம்மதியே உண்டானது.

நினைவில் லயித்துக்கொண்டே புளியமரத்தடி வந்தவள் அண்ணாந்து பார்க்கையில் இலை வழி தெரிகிற சூரியனை பார்க்கிறாள்.

சூரியனின் கிரணங்கள் கண்களில் பட்டு விலகும்போது கிச்சு கிச்சு மூட்டும் உணர்வில் சிரிப்பு முட்டிக் கொண்டு வருகிறது.

இதெல்லாம் பார்க்கும்போதுதான் ஊர்க்காரர்கள் மேல் கோபம் கோபமாக வருகிறது. இவ்வளவு அழகான மரத்திற்கு "பிணந்தின்னிப் புளியமரம்" என்று பேர்வைக்க எப்படித்தான் மனசு வருகிறதோ...

இவள் வீட்டை அடையாளப்படுத்தக் கூட பிணந்தின்னிப் புளியமரத்தையே குறிப்பிடுகிறார்கள்.

ஊரில் எங்கு பிணம் விழுந்தாலும் இந்த மரத்துக்கு கீழே வைத்து தான் சாங்கியம் செய்கிறார்கள். இன்றைக்குக் கூட இது இரண்டாவது கேதம்... முதல் கேதம் குடிகாரக்கணவனிடம் கோபித்துக்கொண்டு தூக்கு மாட்டிக்கொண்டவள்..

முன்பெல்லாம் இந்த சடங்குகளை அவரவர் தெரு முக்கிலேயே செய்து முடித்தனர். சமீப காலத்தில்தான் இந்த புளிய மரத்தடி. இவர்களாகவே பிணத்தை புளியமரத்தடிக்கு கொண்டு வந்து விட்டு அநியாயமாய் மரத்திற்கு பிணந்தின்னி புளியமரம் என்று பெயர் வேறு சூட்டி விட்டார்கள். பழி ஓரிடம் பாவம் வேறிடம். என்பது சரியாய்த்தான் இருக்கிறது...

இதெல்லாம் நினைக்கும்போது குள்ளக்காளுக்கு கோபமும் ஆற்றாமையும்தான் வருகிறது. புளியமரம் எப்பொழுதும் போல அது பாட்டுக்கு காற்றில் அசைந்துகொண்டு இருந்தது..

பெருமூச்சு விட்டுக்கொண்டே அவள் புடவையை நன்கு ஏற்றிவிட்டு இடுப்பில் சொருகிக்கொண்டாள். தலையை அவிழ்த்து இறுக்கமாக முடிந்துகொண்டாள். மரத்தில் லாகவமாக கால் வைத்து ஏறுகிறாள்.

புளியமரம் ஏறுவது அவளுக்கு ரொம்ப பிடித்தவிஷயம். அதுவும் அந்த உச்சிக்கிளையில் ஏறி நின்று தன் காலடியில் தூரத்தெரிதிற சிறிய ஊரைப் பார்க்கையில் தன்னை ஒரு மகாராணியாகவே நினைத்துக் கொண்டு மெய் சிலிர்ப்பாள்.

இந்த மரத்தின் புளியெல்லாம் எப்பொழுதும் இவளே எடுத்துக் கொள்கிறாள். யாரும் ஒன்றும் சொல்வதில்லை. இந்த வருஷம் புளி நல்ல காய்ப்பு. ஏற்கனவே நான்கு மூட்டை புளி அடித்துவிட்டாள்.

இன்றைக்கு முழுவதும் அடித்து முடித்து விடவேண்டும் என்று நினைத்திருந்தாள்.

“யம்மே குள்ளக்கா “

கீழே பார்க்கும் போது டிரைவர் கருத்தப்பாண்டி நின்றிருந்தான். இவன்தான் இந்த மரத்தின் பெயரை பிணந்தின்னிப் புளியமரம் என்று ஊரெல்லாம் பரப்பி விடுகிறான். ஊரில் எங்கு எழவு விழுந்தாலும் புளியமரமே காரணம் என்று கறுவித் திரிகிறான்.

இவனைப் பார்க்கிற போதெல்லாம் தன்னையறியாது புளியமரத்தை இறுகக் கட்டிப்பிடித்துக் கொள்கிறாள் குள்ளக்கா. காற்றும் புயலுமான ஒரு மழை நாளில் வீட்டுக்கரையைக் காற்று தூக்கி வீசிய இரவில் இந்த மரத்தடியில் தான் குழந்தைகளுடன் இரவு முழுவதும் நின்றிருந்தாள். அப்போது தாய்க்கோழி குஞ்சுகளைக் காலடியில் வைத்து அணைத்துப் பாதுகாக்குமே அப்படித்தான் நின்றிருந்தது இந்த மரம்... இதெல்லாம் இவனுக்கு எங்கே தெரியப்போயிறது.

“என்னாயா என்னா விஷயம்..?”

“இந்தா பாரு புளியம்பழம் நல்லா பறிச்சுக்க. இந்த வட்டத்தோட கடைசி.

நாளைக்கு இல்ல நாளை மக்யாநாளைக்கு மரத்த வெட்டிருவாக...” இளக்காரமாக சிரிக்கிறான்.

“வெட்டட்டும் அதுக்கு என்ன? .இது சருக்காரு மரம்...”

“இப்புடியே சொல்லிவிட்டு திரிவாக இவுக எங்க வெட்ட போறாகன்னு நெனச்சு கெனாக் காங்காத. நாளைக்கு கட்டாயம் வெட்டத்தே.. அதிகாரிக சொல்லிட்டாக.”

“வெட்டிக்கிடட்டும்..”

குள்ளக்காளின் உதடு இப்படிச் சொன்னாலும் மனசு விழுந்து அடித்துக் கொள்கிறது.

“என்னா வெட்டிக்கிடட்டும். இன்னக்கி சாயந்தரமே மரத்த வெட்டி வெறகாக்கி வண்டில ஏத்தி காட்டுறேன் பாரு...”

குள்ளக்காள் அவனுக்கு பதில் எதுவும் சொல்லவில்லை.

கருத்தப்பாண்டி ஆணவச்சிரிப்பை வெளிப்படுத்தி விட்டு கிளம்பிப் போனான்.

“இவனயெல்லாம் அந்த துள்ளுமாரி வந்து தூக்கிட்டுப் போகாதா... ஒரு கொள்ள நோயி வந்து கொண்டுட்டு போகாதா.. கடவுளே... கொடுக் கொளத்தானே. நொண்டி அப்புச்சியே..” என்று அங்கலாய்த்து விட்டு, அவள் வாய்க்கு வந்த கெட்ட வார்தையெல்லம் போட்டு அவனைத் திட்டித் தீர்த்தாள்..

சாலை விரிவாக்கத்திற்காக மரத்தை வெட்டப் போவதாக ஏற்கனவே சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் இந்த கருத்தப்பாண்டியின் காமாரம் பிடித்த பேச்சைத்தான் தாங்க முடியவில்லை. குள்ளக்காள் மரத்திலிருந்து மெல்ல கீழ் இறங்குகிறாள்..

ஊரில் கல்யாணம் காது குத்து எல்லாவற்றிற்கும் மைக் செட் போட்டு பாட்டு போடுவார்கள். பெரிய பெரிய குழாய்களை(லவுடு ஸ்பீக்கர்) ஊரில் உயரமான தண்ணி டாங்கி மேல் தான் கட்டுவார்கள். அப்பொழுது தான் பாட்டுச் சத்தம் எல்லா ஊர்களுக்கும் கேட்குமாம். ஆனால் இந்த கருத்தப் பாண்டி சாவு வீட்டுக்கு வைக்கும் குழாய்களை மட்டும் இந்த புளிய மரத்தில் கட்டுகிறான். மங்கல விழாக்களுக்கு கட்டும் குழாய் களை தண்ணி டாங்கி மேல் கட்டுகிறான். கேட்டால் குழாய் அலறுகிற சத்ததில் குள்ளக்காளின் காது சவ்வு கிழிய வேண்டுமாம்.

எவ்வளவு நல்ல எண்ணம்.

அவளுக்கு மனசின் ஓரத்தில் மகன்

சின்ராசும் மகள் வைரத்தாளும் மரத்தில் தூரி கட்டி ஆடியது வந்து போகிறது. அழுது கொண்டே கண்ணீருடன் அடித்த புளியம்பமழங்களை பொறுக்கிச் சாக்கில் கட்டுகிறாள்...

மனம் என்னும் மாயப்பிம்பம் எப்பொழுதும் ஒரு நாயைப்போல பிரியப்பட்ட ஒன்றையே சுற்றி வருகிறது. அந்த பிம்பம் உடை படும்போது யதார்த்தம் முகத்தில் அறைகிறது.

ஒருவழியாக மனதைத் தேற்றிக் கொண்டு கஞ்சி காய்ச்ச ஆரம்பித்தாள்...

என்றைக்கும் போலத்தான் மறுநாளும் விடிந்தது...

கொஞ்சம் கடுங்காப்பியை குடித்து விட்டு தென்னை ஓலையை எடுத்து கிடுகு முடைய ஆரம்பித்தாள். தூரத்தில் அதிக சப்தத்துடன் ஜே.சி.பி. இயந்திரம் வந்து கொண்டிருந்தது கொஞ்சம் வேலையாட்களும் வந்த வண்ணமிருந்தார்கள்.

வந்த வேலையாட்களில் பெண்கள் முதலில் காலை உணவை அமர்ந்து சாப்பிட இடம் தேடி அலைவது தெரிகிறது. பிறகு அவர்களே இந்த புளிய மரத்தடியில் ஓடி வந்து உட்காருகிறார்கள்.. குள்ளக்காளுக்கு அந்தக் காட்சியைப் பார்க்கையில் அது தாயின் மடியில் உணவு சாப்பிட வந்தமரும் குழந்தைகளைப் போலத் தோன்றியது. எம்புட்டு பெரிய சீவாத்தி பாரு மனசுக்குள் சொல்லிக் கொண்டாள்.

“யக்கா என்னா வெஞ்சனம்..”

“கருவாட்டுக் கொழம்பா..”

“பழைய கஞ்சியா”

“என்னாடி வெறும் வத்தல மட்டும் பொரிச்சு கொண்டுட்டு வந்திருக்க...”

“நல்ல மருமகள கட்டி கொண்டாந்தவல்ல.. அதுதே அவ ரெண்டு வெஞ்சனம் வச்சு குடுத்து விட்டுருக்கா..” இப்படியான உரையாடல்களை நிகழ்த்திக் கொண்டே அவர்கள் சாப்பிட்டு முடித்தனர்.

குள்ளக்காள் எல்லார் பேச்சையும் கேட்டுக் கொண்டே கிடுகு முடைந்து கொண்டிருந்தாள்.

அவ்வப்போது முந்தானையை முகத்தில் ஒற்றி எடுத்துக்கொண்டாள். மீண்டும் முந்தானையை எடுத்து கண்களை மூடி அழுந்த துடைத்துக் கொண்டாள். தலையில் போட்டிருக்கும் கொண்டயை அவிழ்த்து சரி செய்து கொள்கிறாள். முன் நெற்றியில் வந்து விழுந்து காற்றுக்குப் புரளுகிற முடிகளை விரல்களால் ஒதுக்கி விடுகிறாள்.

“ஏக்கா மேலுக்கு எதுவும் சேட்டமில்லயா.. ஒரு வடியா இருக்கயே..” அந்த வேலைக்கு வந்த பெண் கேட்கிறாள்.

“அதெல்லா ஒன்னு மில்லத்தா. இன்னும் பல்லு வெளக்கி கஞ்சி குடிக்கல அதேன்...”

“எந்திருச்சு போயி மொத ..கஞ்சி குடிக்கா... பெறகு கிடுகு பின்னுவயாம்...”

“இருக்கட்டும் த்தா. ஒங்களுக்கு குடிக்க தண்ணி கிண்ணி வேணுமின்னா கேளுங்க. கொண்டாந்து தாரேன்...”

“இருக்குக்கா வேணுமுன்னா வாங்கிக்கிறோம்.” அவர்கள் சிரித்துக் கொண்டே மறுத்தார்கள்.

அதிகாரிகள் அங்கும் இங்கும் ஜீப்பில் சென்றவண்ணம் இருந்தார்கள்.. குள்ளக்காளுக்கு அடி வயிறு கலக்கிக்கொண்டுருந்தது.மரத்தை வெட்டி விடுவார்களோ..

“என்னோட சீவனே... எஞ்சாமியே...” அவள்மனம் அரற்றிக் கொண்டிருந்தது.

வீட்டிலிருந்து கிளம்பி மரத்தைப் பார்த்து கொண்டே நின்றிருந்தாள்.

“ஏக்கா மரத்த வெட்ட போறாகளா..?” யாரோ ஒரு அம்மாள் கேட்டுக் கொண்டிருருந்தாள்... குள்ளக்காளிடம் பதிலில்லை.

“மரத்த வெட்டிப் புட்டா வெறுச்சுன்னு இருக்குமே. மரம் பச்ச புள்ள மாதிரி நிக்குதே. வெட்ட வாராங்களே சண்டாளப் பாவிக..” அந்த அம்மாளும் அரற்ற ஆரம்பித்தாள்.

“அவெய்ங்க வாயில மண்ணு விழுக. பேதியில போறவங்கெ” குள்ளக்காள் கெட்ட கெட்ட வார்த்தைகளில் சத்தம் போட்டு கத்துகிறாள். உலகம் ஒரு அசாதாரண கணத்தில் ஆட்பட்டு சுழல்வது போலிருந்தது.

ஜேசிபி இயந்திரம் வந்து விட்டது. அது புதரைத் தோண்டி சாலையின் ஓரமிருக்கிற மண்ணைத் தள்ள ஆரம்பித்திருந்தது.

ஜே சிபி இயந்திரத்தை ஒரு யானையைப் பார்ப்பது போல் ஊர்ச்சனம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. எப்போதும் போல் சாலையில் வாகனப் போக்குவரத்து இருந்தது. மரம் அறுக்கும் இயந்திரங்களைக் கையில் பிடித்துக் கொண்டு ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். குள்ளக்காள் அவர்களையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தூரத்தில் டிப்பர் லாரி ஒன்று ஆட்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்து கொண்டிருந்தது. அதைப்பற்றி எல்லாம் அவளுக்குக் கவனமில்லை. அது பயங்கர ஹாரன் ஒலியுடன் அதிக வேகத்தில் வருகிறது. வேகத்தை சற்றும் குறைக்காமல் புளியமர வளைவில் திரும்ப முயல்கிறது. இதை அப்போதுதான் கவனிக்கிறாள்.

டிரைவர் அந்த வண்டியின் வேகத்தைக் குறைக்க முயல்கிறார். முடியவில்லை. அப்போதுதான் எதிர்பாராத அந்த ஒன்று நடந்துவிட்டது. வண்டி அந்த புளியமரத்தில் பலத்த சத்தத்துடன் மோதி நிற்கிறது .

வண்டியிலிருந்து கேட்கிறது ஒரு பயங்கரமான மரணஓலம்.

குள்ளக்காளுக்கும் பார்த்துக் கொண்டிருந்த மற்ற எல்லாருக்கும் நடந்ததை உணரவே சில நிமிடங்கள் ஆயிற்று.

சுற்றி உள்ள மக்கள் லாரியை நோக்கி ஓடி வருகின்றனர். லாரிக்குள் ஓரே அழுகைக் குரல்கள். லாரிக்குள் ஆட்கள் ஒருவர் மேல் ஒருவராக கிடந்தனர். அங்கிருந்த இளவட்டப் பையன்கள் லாரியில் உள்ளவர்களைச் சிரமப்பட்டு உயிருடன் மீட்கின்றனர்..

டிரைவரை மட்டும் காணவில்லை..

“நாதாரிப் பய வண்டியக் கொண்டு மரத்துல மோதிப்புட்டு எறங்கி ஓடிட்டான்..” யாரோ திட்டிக் கொண்டு இருந்தார்கள்.

“அய்யய்யோ.. அந்தா பாருங்க”

ஒருவன் புளிய மரத்தின் உச்சிக் கிளையைக் காட்டி கத்துகிறான்.

அங்கே பிணமாகத் தொங்கிக் கொண்டுருந்தான் கருத்தப்பாண்டி.

இதை பார்த்த குள்ளக்காளுக்கு விலுவிலு வென்று வந்தது.. “நீ பேசுன பேச்சுக்கு எஞ்சாமி கொடிக் கொளத்தான் எப்படி தலேல.. அள்ளி வச்சான் பாத்தியா..’ அவளை அறியாமல் வாய்விட்டு கத்துகிறாள்.

“இவன் எங்குட்டுறி இங்க வந்து கெடக்யான்..?” சத்தங்கேட்டு ஓடி வந்த பெண்கள் நாடியில் கை வைத்துப் பேசுகிறார்கள்.

“பொறவு. வண்டிய இந்த நாயிதான ஓட்டிட்டு வந்திருக்கு. கண்ணு மண்ணு தெரியாம வந்தா இப்பிடித்தேன்..” என்கிறான் ஒருவன்.

குள்ளக்காள் திகைத்து நிற்க அவனுக்கு உயிர் இருக்கிறதா என்று பார்க்க அவசரமாக எளந்தாரிகள் மரம் ஏறுகிறார்கள்.

குள்ளக்காள் திகைத்துப் போய் புளிய மரத்தைப் பார்க்கிறாள். அம்மாந்தண்டி டிப்பர் லாறி மோதியும் சிற்சில சிராய்ப்புகளோடு நிற்கும் அந்த மரம் அவளிடம் எதோ சொல்ல வந்தது போலிருந்தது.

ஊரெங்கும் இதே தான் பேச்சு.

ஊர்க்காரர்களில் சிலர் பிணந்தின்னி புளியமரத்தை சபித்தனர். சிலர் இந்த மரம் இருந்ததால்தான் பெரும்விபத்து தவிர்க்கப்பட்டு இத்தனை பேர் உயிர் பிழைத்தனர் என்றனர்.

யாரும் இல்லை..

வழக்கம்போல குள்ளக்காளும் புளியமரமுந்தான். அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவசரமாக உள்ளே சென்று மஞ்சத்தூளை தண்ணி கலந்து விளுவிளுவென்று கரைத்துக் கொண்டு வந்தாள். லாரி மோதி சிராய்த்து செதில் பெயர்ந்திருந்த இடங்களில் ஆறுதலாக மஞ்சள் கலவையை தடவி விட ஆரம்பித்தாள். புளியமரம் வலி குறைந்து பெருமூச்சு விட்ட மாதிரி தெரிந்தது. செத்த புருசனின் பித்தவெடிப்புக் கால்களைப் போல சொரசொரத்து இருந்த செதில் அடர்ந்த அந்தப் புளிய மரத்தைக் கட்டிப் பிடித்து சத்தமில்லாமல் முத்தம் ஒன்று வைத்தாள் குள்ளக்கா. அவளுக்கு அழுகை வரவில்லை. ●

கட்டுரை

# உப்பில்லா உப்புமா

சு.இராமசுப்பிரமணியன்



பட்டிமன்றப் பேச்சாளர்களிடம் மாட்டித்தவித்த உப்புமா, சமூகவலைத் தளங்கள் வந்தபிறகு இளைஞர்களின் பேசுபொருளாகியிருக்கிறது. நகைச்சுவை என்னும் பெயரில் உப்புமாவைக் கிண்டலடிப்பதாக எண்ணிக்கொண்டு மனைவிமார்களை பொதுவெளியில் அவமானப்படுத்துகிறார்கள். நமக்கு அறிமுகம் இல்லாத, இந்த மண்ணுக்குச் சொந்தம் இல்லாத, பெயர் அறியாத என்னென்னவோ உணவுப்பொருட்களை வீட்டில் தயாரித்தும், வெளியில் வாங்கியும் உண்டுகொண்டிருப்பவர்கள், வீட்டில் தினமும் உப்புமா செய்வதுபோல பதிவுகளை இட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் நகைச்சுவைப்பொருளாக மாற்றப்பட்டிருக்கும் உப்புமாக்கும் ஒரு வரலாறு உண்டு என்பதும், ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் தமிழர் பண்பாட்டில் அதுவும் இடம்பெற்றிருந்தது என்பதும் இவர்கள் அறியாதது.

இன்று உப்புமாவைக் கிண்டலடித்துக் கொண்டிருக்கும் தலைமுறையினருக்குப் பழையசோறு என்றால் என்னவென்று தெரியாது. தெரிந்திருந்தால் உப்புமாவைக் கிண்டலடிக்கமாட்டார்கள். எங்களுடைய சிறுவயதில் ஊரில் அநேகமாக அனைவர் வீட்டிலும் மூன்றுவேளை சோறுதான் உணவாக இருந்தது. ஒருவேளை சுடுசோறு, இரண்டுவேளை பழையசோறு, ஒவ்வொரு தமிழ் மாதமும் வரும் கடைசிவெள்ளியில் விரதம் என்பார்கள். அன்று பழையசோறுக்குப் பதிலாக இட்லி, தோசை. களி, அடை அல்லது உப்புமா இருக்கும். பூரி, சப்பாத்தி போன்ற வேறு எந்த வகையான உணவும் வீடுகளில் அப்போது இல்லை. நீத்தண்ணி (காலையில் நீராகாரம்), சுடுதண்ணி (மதியம் சோறுவடித்தத் தண்ணி), காப்பித்தண்ணி (மாலையில் கருப்பட்டிக்காப்பி), பானைக்காரம் (கருப்பட்டி, புளி கரைத்த பானம்) தவிர வேறு குடிபானங்களும் இல்லை.

பழையசோற்றுக்குத் தொட்டுக்கொள்ள சுண்டக்கறி, தேங்காய்த் துவையல், பொரிகடலைத் துவையைல், ஈராங்கம் (ஈர வெங்காயம் / ஈருள்ளி / உள்ளி / பொடி உள்ளி / சின்ன வெங்காயம்) என்று ஏதாவது இருக்கும். ஒரு துண்டு தேங்காய், சிறு வெல்லக்கட்டி, கருப்பட்டிகூட தொடுகறி யாக இருந்திருக்கிறது. முன்பெல்லாம் ஐப்பசி, கார்த்திகை அடைமழைக்காலம் அப்போதும் பழையசோறுதான். சில வீடுகளில் மோர், தயிர் இருக்கும். பலவீடுகளில் தண்ணீர்தான்.

ஒன்றாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரையிலும் பள்ளிப் படிப்புக்காலத்தில் ஈயம்பூசப்பட்ட பித்தளைத் தூக்குச்சட்டியில் பழைய சோறுதான். சுண்டக்கறி அல்லது துவையல் சோற்றில் மிதந்துகொண்டிருக்கும். கல்லூரிக்குச் சென்றபோது எவர்சில்வர் வந்துவிட்டது. அதனால் பித்தளைத் தூக்குச்சட்டி, எவர்சில்வர் தூக்குச்சட்டியாக மாறியது. ஆனாலும் உள்ளடக்கம் மாறவில்லை. பட்டப்படிப்பு முடியும் வரையிலும் கல்லூரிக்கு எடுத்துச் சென்றது பழையசோறுதான். பட்டமேற்படிப்புப் படிக்க மதுரைக்குச்சென்று விடுதியில் தங்கியபிறகுதான் பூரி, சப்பாத்தி, ஊத்தப்பம் போன்ற உணவுவகைகள் எனக்கு அறிமுகம் ஆயின.

அப்போதெல்லாம் விறகு அடுப்பும், மண்பானை சமையலும்தானே. இரவு அடுப்பில் அன்றுள்ள குழம்பு, தொடுகறி ஆகியவற்றைக் கலந்து ஒரு மண் சட்டியில் இட்டு அடுப்பில் வைத்துவிடுவர்கள். காலையில் நீரெல்லாம் சுண்டிக் கிடைப்பதுதான் சுண்டக்கறி. நாஞ் சில்நாட்டில் திருமணங்கள் வீடுகளில் நடைபெற்ற காலத்தில், மதிய உணவு முடிந்த உடன் அனைத்துக்கறிவகைகளையும், குழம்பு, ரசம் போன்றவற்றையும் பெரிய மண்பானையில் இட்டு சுண்டக்கறி ஆக்கிவிடுவார்கள். திருமணநாள் இரவில் வீட்டில் தங்கும் உறவினர்களுக்கு இந்த சுண்டக்கறியுடன்தான் சோறு கிடைக்கும். அத்தனைபேரும் விரும்பி சாப்பிடும் உணவாகும். திருமணம் முடிந்த அன்று இரவு சுண்டக்கறியுடன் சோறு என்பது ஒரு பண்பாடாகவே நீடித்திருந்தது.

இப்படி ஆண்டுமுழுவதும் பழையசோறு சாப்பிட்டுவந்தவர்களுக்கு எப்போதாவது உப்புமா கிடைக்கும். அரிசியைத் திருவையில் (திருகல், எந்திரம்) உடைத்து அரிசி உப்புமா கிண்டித் தருவார்கள். இந்த அரிசி உப்புமாதான் நம் பாரம்பரிய உப்புமா. பாம்பே ரவையிலும் உப்புமா கிண்டித்தருவார்கள். அந்த உப்புமா எங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. எனக்குத் திருமணம் ஆனபிறகுதான், என் மனைவி (நாஞ்சில் நாடு) எனக்குச் சம்பா ரவையில் செய்யும் உப்புமாவை அறிமுகப்படுத்தினார். காலையில் அவித்து மீந்த இட்லிகளை உதிர்த்து உப்புமா செய்வதும் உண்டு.

நான் விக்கிரமசிங்கபுரம் தூய இருதய உயர்தர ஆரம்பப் பாடசாலையில் (Sacred Heart Higher Elementary School) படித்துக்கொண்டிருந்தபோது, அங்கு ஏழை மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதி இருந்தது. அந்த மாணவர்களுக்கு மக்காச்சோள மாவில் உப்புமா கிண்டித்தருவார்கள் என்பதை நான் அறிவேன்.

1962 ஆம் ஆண்டு, நாட்டில் ஒரு பஞ்சம் வந்தது. அந்தப் பஞ்சக்காலத்தில் பாபனாசம், தென்காசி பகுதிகளில் மலையில் விளைந்த ஏழிலைக் கிழங்கு (மரவள்ளிக்கிழங்கு/மரச்சீனிக்கிழங்கு/ குச்சிக்கிழங்கு/கப்பக்கிழங்கு) பெரிய அளவில் உணவுபொருளாக இருந்தது. அந்த ஏழிலைக்கிழங்கு மாவிலும் உப்புமா செய்வார்கள்.

**உப்புமா என்னும் பொது உணவு:**

ஒரே உணவைத் தினமும் உண்டு கொண்டிருப்போர்க்கு ஒருவித சலிப்பு ஏற்படும் என்பதை மறுக்க முடியாதுதான். அப்படிப்பட்டவர்களுக்குப் புதியவகை உணவு கிடைக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கும் என்பதும் உண்மையே. இன்று வழக்கொழிந்துபோன பழையசோறு என்பது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்ககாலத்திலேயே இருந்திருக்கிறது என்பதும் சங்கஇலக்கியங்களில் இருந்து தெரியவருகிறது.

**“புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்**
**இரும்புவடித் தன்ன மடியாமென்றோற்**
**கருக்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்**

பழஞ்சோற் றமலை மனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவலெறி உலக்கைப் பாடுவிறந் தயல.."

(பெரும்பாணாற்றுப்படை, வரிகள், 221 -226)

மருதநிலத்தில் நெல் வயல்வரப்புகளின் அருகே புதிய வைக்கோலால் வேயப் பட்ட கூரைகளை உடைய வீடுகள் அமைந்திருக்கும். அந்த வைக்கோல் வீடுகளின் முற்றத்தில் பெண்கள் அவல் இடித்துக்கொண்டிருப்பார்கள். உழைத்து உழைத்துப் புடைத்த மார்பும், இரும்புத்தகடுபோன்று சுருக்கமற்றத் தோலும் கொண்ட உழுகுடிகளின் அன்பிற்குரிய சிறுவர்கள் பழஞ்சோற்றை வெறுக்கும்போது அவர்களது தாய்மார்கள் அவல் இடித்து, ஏதோ ஒருவித உணவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இப்பாடலில் இருந்து இரண்டு செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன. ஒன்று, பழஞ்சோறு உண்பது, பண்டைத்தமிழனின் உணவுப் பண்பாடாக இருந்திருக்கிறது என்பது. அவல் இடித்து உணவாகப் பயன்படுத்தும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந் திருக்கிறது என்பது மற்றொரு செய்தி.

நாஞ்சில்நாட்டில் அவல் மிகவும் பிரபலமான உணவு. கவிமணி பிறந்த தேரூரில் பெண்கள் அவல் இடிப்பதைக் குடிசைத்தொழிலாகக் கொண்டிருந்தனர். இங்கு அவல் என்றால் அது சிவப்புச் சம்பா அவல்தான். மிகவும் சுவையாக இருக்கும். சித்திரை ஒன்று அன்று அவல் விரவுவது வழக்கம். அதாவது நனைத்த அவலுடன் வெல்லம், பழம், தேங்காய் சேர்த்து உண்பது. அவல் தாளித்தல் என்பதும் உண்டு. இன்றும் எங்கள் வீடுகளில் வாரம் ஒருநாள் தாளித்த அவல் காலை உணவாக இடம்பெற்றுவருகிறது. தாளித்த அவல், ஒரு விதத்தில், உப்புமா போலத்தான் இருக்கும். நாஞ்சில் நாட்டிலிருந்து வெளியூர்களில் திருமணம் ஆகிப்போன பெண்பிள்ளைகளைப் பார்க்கப்போகும் பெற்றோர் மறக்காமல் வாங்கிச்செல்வது அவல். கூடவே தேங்காயும், கைச்சுற்று முருக்கும் இடம்பெறும்.

இப்போதெல்லாம் திருமணம்போன்ற மங்கல நிகழ்வுகள் மண்டபங்களுக்கு மாறிவிட்டன. மிகவும் ஆடம்பரமாகத் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. உறவுகளும், நட்புகளும் கூடிக் கலையும் இடமாக மண்டபங்கள் மாறிவிட்டன. கூடிக்களித்தக் காலம் மலையேறிவிட்டது. மண்டபங்களில் நடக்கும் எந்த ஒரு நிகழ்விலும் உயிரும் இல்லை, உணர்வும் இல்லை. அத்தனை செயற்கையாக மாறிவிட்டது. மண்டபங்களில் சந்திக்கும் உடன்பிறந்தவர்கள்கூட இரயில் பயணத்தில் சந்திப்பதுபோல சந்தித்துப் பிரிகிறார்கள். சிலர் மொய் உறை கொடுத்துவிட்டு சாப்பிடுகிறார்கள். வேறுசிலர் சாப்பிட்டுவிட்டு மொய் உறை கொடுக்கிறார்கள். இதுதவிர வேறுபாடு எதுவும் இல்லை.

ஆனால் முன்பெல்லாம் வீடுகளில்தான் மணமக்களை உறுதிசெய்யும் நிச்சயதார்த்தம், திருமணம், வயதுக்குவந்த சிறுமிகளின் மங்கல நீராட்டு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. அப்போதெல்லாம் வெளியூர்களில் இருந்து உறவினர் பிள்ளைக்குட்டிகளோடு வருவார்கள். அப்படி வரும்போது நிகழ்வுக்கு முன்பான நாட்களில் அனைவருக்கும் உணவு ஆக்கும் பணி பெண்களைச் சேர்ந்தது. காலையில் பெரும்பாலும் உப்புமாதான் கிண்டுவார்கள். அதுதான் அன்றைய காலங்களில் எளிதானது. பந்திவைக்கும்போதும் ஒரு முறையைப்பின்பற்றினார்கள். முதலில் அனைத்துக் குழந்தைகளையும் அமரவைத்து அவர்களுக்கு ஊட்டிவிடுவார்கள். அடுத்த பந்தியில் ஆண்கள் சாப்பிடுவார்கள். கடைசியாகத்தான் உணவு ஆக்கியப் பெண்கள் சாப்பிடுவார்கள். இழவு வீடு களுக்கு உறவினர் வரும்போதும் இப்படித்தான் நடந்தது. இப்படி குழந்தைகளுக்கு முதலில் உணவு கொடுப்பதுகூட சங்ககாலத் தொடர்ச்சியாக இருந்திருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் அம்மா தனது 97வது வயதில் மரணமடைந்தார். அந்த ஈமச்சடங்குக்கு வந்திருந்த எனது மைத்துனர், எனது மகளிடம் (அவளது மாமனாரும் ஆவார்) இரண்டுகிலோ ரவை வாங்குவதற்கு பணம் கொடுத்துவிட்டுச் சென்றார். நாங்கள் பொதுவாக இறந்தவர் உடலை எரிப்பது வழக்கம். அதன்பொருட்டு உருவான வழக்கம்தான் கொள்ளிவைத்தல். எங்கள் ஊரில் (சிவந்திபுரம், அம்பாசமுத்திரம்)

சுடுகாடு, தாமிரபரணி ஆற்றின் வடகரையில் உள்ளது. எங்களது சுடுகாடுகள் அனைத்துமே ஆற்றங்கரை, வாய்க்கால் கரை, ஓடைக்கரை, ஏரிக்கரை என்று ஏதேனும் ஒரு நீரோடும் கரையில் அல்லது நீர்நிலைக்கு அருகில்தான் அமைந்திருக்கும். மறுநாள் 'சாம்பல் கரைத்தல்' என்று சொல்வார்கள். அந்தச் சடங்கிற்கு வருபவர்களுக்குக் காலையில் உணவாக ரவை உப்புமா கொடுப்பது முன்பு வழக்கமாக இருந்தது. நீண்டகாலம் தொடர்ந்துவரும் பழக்கவழக்கம்தானே பண்பாடாகச் சொல்லப்படுகிறது. சடங்கு என்று ஏன் சொல்கிறோம்? இப்போது அவை தேவை இல்லை என்று பொருளாகும். அப்படித்தான் இந்த உப்புமாக்குப் பணம்கொடுத்தலும் ஆகும்.

இன்றும்கூட தென்காசிக்குச் சென்றால் அங்குள்ள டீ, காப்பிக்கடைகளில் உப்புமா விற்பதைக் காணலாம். வேறு எந்தப் பகுதியிலும் இப்பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. உணவு விடுதிகளில் (ஒட்டல்கள்) உப்புமா கிடைக்கும் என்பது வேறு. தென்காசியிலும், அதன் சுற்றுப்புற ஊர்களிலும் காலை நான்குமணிக்கே உப்புமா கிடைக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு குற்றாலம் சென்ற நான் தென்காசி பேருந்து நிலையம் அருகே ஒரு விடுதியில் தங்கியிருந்தேன். காலை 5 மணிக்கு தேநீர் குடிக்கச் சென்றபோதுதான் உப்புமா விற்பதைக் கண்டேன். இந்த நேரத்தில் யார் உப்புமா தின்பார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே மண்வெட்டிகளுடன் சிலர் வந்தனர். ஆளுக்கொரு உப்புமா வாங்கித்தின்று, ஒரு டீயும் குடித்துவிட்டுச்சென்றனர். விடியல்வேளையில் வடை வகைகளை விடவும் ஒரு உப்புமா தின்பது உழைக்கும் மக்களுக்கு உகந்ததாக இருக்கிறது. அப்போது ஒரு கிண்ணம் உப்புமா 5 ரூபாய். இப்போது என்ன விலை என்று தெரியவில்லை.

அதுவரையிலும் எனக்குப் புரியாத உண்மை அப்போது புலப்பட்டது. முன்பு பொது உணவாக இருந்த உப்புமா, இன்று ஏழைகள் மட்டுமே உண்ணும் உணவாக மாறியிருக்கிறது. அதுவேகூட எள்ளலுக்குக் காரணம் ஆகியிருக்கக்கூடும். இப்படிச் சொல்வதற்கும் காரணம் உண்டு. இன்று உப்புமாவைக் கிண்டலடிப்பவர்கள் அனைவருமே பெரிய வீடு, பெரிய கார், விலை உயர்ந்த கைபேசி வைத்திருக்கும் வசதிபடைத்தவர்களே.

இன்று உப்புமாவை வைத்துக்கிண்டலும் கேலியும் செய்வதும், அதனை நகைச்சுவை என்பதும் காலத்தின் கோலம். மாத்திரம் அல்ல, இவர்கள் வீடுகளில் தினமும் உப்புமா கிண்டுவதுபோல் உண்மைக்குப் புறம்பான ஒரு மாயத் தோற்றத்தையும் உருவாக்கிவருகிறார்கள்.

**சத்துணவில் உப்புமா:**

அரசுப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்குக் காலை உணவில் உப்புமா உணவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. தினமும் காலையில் உப்புமாதான் என்றும் சிலர் குறைசொல்கிறார்கள். அந்த அரசியலுக்குள் நாம் போகத்தேவை இல்லை. ஏழைகளுக்கு வேறு வழி இல்லை. எப்படியும் அடுத்தத் தலைமுறையாவது படித்து முன்னேறவேண்டும் என்று விரும்பும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அரசுப்பள்ளிகளில் மட்டுமே சேர்க்கமுடியும். அரசுப்பள்ளிகளைத் தனியாரிடம் விட்டுவிடும்வகையில் தமிழக அரசு எந்த ஒரு முடிவையும் எடுக்காமல் இருப்பது ஏழைமாணவர்கள் கல்விநலனுக்கு நல்லது.

ஆங்காங்கே மாடுமேய்க்கும் சிறுவர்களைப் படிக்கவைக்கவேண்டும் என்றால் அவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் உணவு வழங்கவேண்டும் என்று சிந்தித்து செயல்படுத்திய மக்கள் தலைவர் காமராசர் முதல், அதன்பிறகு அதனை வளர்த்தெடுத்து இன்றுவரையிலும் செயல்படுத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டு முதல்வர்கள் அனைவருமே பாராட்டுக்கு உரியவர்கள். ஒருவர் ஆட்சியில் கொண்டுவரும் திட்டங்களை அடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் முடக்கிவிடுவதை நாம் நம் காலத்தில் கண்டுவருகிறோம். ஆனால் இந்தத் திட்டத்தை அவர்களால் அப்படி முடக்கமுடியவில்லை என்பதையும் உணவில் கூடுதலாக முட்டை (வாழைப்பழம்) போன்றவற்றைச் சேர்த்துப் பெருமைகொள்கிறார்கள் என்பதையும்

பார்க்கிறோம். அது அரசியல்தான் என்று வைத்துக்கொண்டாலும், படிக்கும் ஏழைமாணவர் நலனுக்கானது என்பதில் நமக்கு மகிழ்ச்சியே.

உப்புமாக்கும் உப்பு வேண்டுமே!

அரிசியை உடைத்து அதில் கிண்டிய உப்புணவு ‘உப்பு மாவு’ என்று இருந்து பின்னர் உப்புமா என்று திரிந்திருக்கலாமோ!

எனது பணிநிறைவுக்குப் பின்பான காலத்தில் சமையல் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பக்குவம், கோயம்புத்தூரில் எனது மகளுக்குத் துணையாக இருந்த எனது மனைவியிடம் கைபேசியில் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அப்படிக் கற்றுக் கொண்டு நான் முதன்முதலில் செய்த உணவு, ரவை உப்புமா. ‘முதல்’ என்றாலே ஒரு கிளுகிளுப்பு இருக்கும்தானே ! எனக்கும் இருந்தது. அந்த உணர்வோடு உப்புமாவை சுவைக்கத்தொடங்கினேன். பக்குவம் சரிதான். உப்பு இல்லை. ஆம், உப்புப்போட மறந்துவிட்டேன். ‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’ என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது. மனைவி செய்தது என்றால், தூக்கிவீசி ‘ஆண்மையை’ காட்டியிருக்கலாம். ஆனால் இது நான் ஆக்கியது ஆயிற்றே. அப்படியெல்லாம் வீசிவிட முடியுமா? உண்டேன், உப்பில்லா உப்புமாவை ! இன்று உப்புமாவைக் கிண்டலடிப்பதும் அப்படித் தான், ‘உப்பில்லா உப்புமா’!! ●

கவிதை

# மகளுக்கு

அகிலமும் நீதான்!
ஆர்ப்பரித்து
போர்ப்பறைக் கொட்டு!!

தொன்று நிகழ்ந்த
மடமைகள் யாவும்
மடிந்து போயின
இன்று மட்டுமல்ல
எதிர்காலமும் உனக்குத்தான்!!
உள்ளத்தில் உள்ளதை
உரக்கச் சொல்லிடு..
கள்ளத்தை கண்டால்
கண்ணாலே துரத்திடு..

காதல் வலை வீசுபவன்
காதல் வரை வருவானா என்று
சோதனை செய்து கொள்
வேதனை உனக்கில்லை...

வாடிக்கையாய் உன்னை
வேடிக்கை பார்ப்பவர் முன்னால்
தேடிக் கைகளில் பொருளைச் சேர்
உன்னை
நாடிப் பல கைகள் வரும்..
கண்கள் இரண்டிலும் காட்சி உண்டு
பெண்கள் அறிவை வளர்த்தால்
வையம் பேதைமை அற்றிடும்
முண்டாசுக் கவிஞனின்
முழக்கத்திற்கு இலக்கணமாக..



தொழுது எழுந்த காலங்கள்
தொலைந்து விட்டன..
அழுது ஏங்கிய பொழுதுகளும்
அகன்றே போயின..
உழுது மனத்துள்
நம்பிக்கையை நடவு செய்.
எழுது எழுது எதிர்காலம்
உனக்கென்று எழுது...!

அடுப்படியில் மடப்பிடியாய்
வாழ்ந்திடாதே
பழைய சரித்திரம் துடைத்திடு
புதிய சரித்திரம் படைத்திடு!

- கோ.பூமாரி.

கவிதை

# ஜிப்மர்




**1**

நியாயம் கோரி
ஒற்றைமுலை திருகியெறிந்தவளின்
சந்ததியொருத்தியை இன்று பார்த்தேன்.
படர்ந்த புற்றுக்காய்
இன்னொன்றையும் அறுக்கக் கொடுத்துவிட்டு
மருத்துவமனை வளாகத்தில் அரற்றிக்கொண்டிருந்தாள்

**2**

எலும்பில் தொற்றிய புற்று
உடலெங்கும் இலை படர்த்தி
மரணம் மலரக் காத்திருந்தவளை
காத்திருப்பு வளாகத்தில் பார்த்தேன்
கையை விரித்துவிட்ட மருத்துவம்
வாயைக் கட்டாதே என்றதாய்
வாழ்வின் ஏக்கம் நாவில் சுரக்க
சுண்டல் வாங்கிக் கொறித்துக்கொண்டிருந்தாள்
உதிர்ந்த தோல் துணுக்குகளை
மெல்ல இழுத்துச்செல்லும்
எறும்புகளின் சாரை
அவளின் கருப்பு தினத்தின் கோடாய்
அசைந்துகொண்டிருந்தது

**3**

வளர்ச்சியின் நன்மை பொருட்டு
ஜடையிட்டு இடைதொட்ட
கூந்தல் நுனியை
முன்பொருமுறை
கத்தரித்துக்கொண்டு வந்து நின்றபோது
காதலுற
கடிந்துகொண்டவனிடம்தான்
மீண்டுமொருமுறை வந்து நிற்கிறாள்...

படர்ந்தப் புற்றுக்காய்
வார்க்கப்பட்ட மருத்துவத்துவ ஒவ்வாமைக்கு
அதே
மனவுகோப்பன்ன மாநெடுங்கூந்தலை
தானமிட்டுவிட்டு

**4**

நெருப்புக் குழம்பிற்குத் தப்பிய
கிருமிகள் சில
மீண்டும் அவள் உடலில்
கொடிபடர்த்தியுள்ளன

படரும் கொடி
நுரையீரலைப் பற்றிவிட்டால்
என்னால் எதுவும் ஆகாதென்கிறது மருத்துவம்
உடைந்தழும்
அவளின் கண்ணீரில் வழுக்கி
காயம் பட்டு நிற்கிறது
இக்கவிதை

**5**

சாப்பாட்டில் பெரிதாய் விருப்பமில்லாத
கைப்பக்குவக்காரி அவள்

கூடக்குறைய கையிருப்பு
எப்படியிருப்பினும்
வாயிலிட்டும் பார்க்காமல்
அவள் ஆக்கி இறக்கிய சமையலுக்கு
சுவர்களுக்கும் நாக்கு முளைக்கும்

தேனூற்றிக் கரைப்பாளோவெனும் ஐயம்
புளிக்குழம்பின் மீது எப்போதும் உண்டு
பக்கத்து வீட்டுப்பெண்களுக்கு!

சித்தியின் மீன் குழம்பிற்கு
சென்னையிலியிருந்தே நீளும்
எச்சிலூறிய அக்காள் மகனின் நாக்கு

இப்போது
சாப்பிட இயலாத வாயோடு
வயிற்றில் வளர்ந்த புற்றைச் செருமியபடி
வரிசையில் நின்று வாங்கிய
தானக் கஞ்சியை
சிறுகச் சிறுக மிடறியவளின் கண்கள்
நன்கு உண்பவர்களை

ஒரு கணம்
ஏக்கத்தில் உற்றோய்ந்தன

மரக்கிளைக் காகங்களோடமர்ந்து
அவளையே வெறித்துக்கொண்டிருக்கிறது
ஏதும் செய்யவியலாத எனது கையறு நிலை

- கோ.பாரதிமோகன்

# அப்பாவை போல் வாழ்வது சிரமம்

பாலகுமரன் பரிதி

சமூகத்தின் வரையறைக்குள் கட்டுப்படாமல் அந்த சமூகத்தின் மீது அக்கறை கொள்ளும் மனிதர்கள் போராளிகள் ஆகிறார்கள். அவ்வகையில் அப்பாவும் போராளிதான்.

எங்கு சென்று எதை எதிர்த்துப் போராடினார் என்ற கேள்வி உங்களுக்கு எழும். போராட்டம் என்பது ஏதோ ஓர் இடத்திற்குச் சென்று செய்வதில்லை, உங்களை சுற்றி இருக்கும் இடத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளுக்கும் உங்கள் குரல் ஒலிக்குமாயின் நீங்களும் போராளிதான்.

அப்பா ஒருநாள் பேருந்தை தவறவிட்ட பள்ளி மாணவனை வீட்டிற்கு அழைத்து வந்து இரவு தங்க வைத்திருக்கிறார். அந்த மாணவன் காலையில் சென்ற பிறகு ஆத்தா "அந்த பையன் என்ன ஆளுக" என கேட்டார்களாம். அந்த மாணவனின் சாதி தெரிந்த உடன் படுத்திருந்த பாயில் தண்ணீர் தெளிக்க முற்பட்டிருக்கிறார் ஆத்தா. உடனே பாயை வாரி சுருட்டி கிணற்றுக்குள் எறிந்துவிட்டு "இப்ப தண்ணீ திட்டாயிட்டு" அதையே குடிங்க என ஆவேசப்பட்டாராம் அப்பா.

வீட்டில் இப்படி என்றால் ஆசிரியர்கள் மத்தியில் வேறு விதம்.

ஒருமுறை ஆசிரியர் ஒருவருக்கு இரங்கற் கூட்டம் நடந்திருக்கு. அப்பா இறந்த ஆசிரியருக்கு "கருந்தேக்கே கருந்தேக்கே" என இரங்கற்பா பாடினாராம்.

மற்றொருமுறை ஒருவர் இறப்பிற்கு இரங்கற்பா பாடச் சொன்னபோது முடியாது என மறுத்திருக்கிறார்.

"அவருக்கு மட்டும் பாடுனீங்க" என மற்றவர்கள் கேட்க.

"இவருக்கெல்லாம் எழுதுமளவு அவர் எதுவும் செய்யவில்லை கவிதையும் வராது" என வெளிப்படையாகப் பேசிவிட்டாராம்.

ஆசிரியர் பணியைத் தொழிலாக மட்டும் எண்ணுவோரை என்றைக்குமே ஆசிரியர் என அப்பா ஏற்றுக் கொண்டதேயில்லை.

தாத்தா மறைவிற்குப் பிறகு ஆத்தாவிற்கு கிடைக்கவேண்டிய குடும்பப் பென்ஷன் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்தது. அதனைப் பெறுவதற்காக அப்பா பென்ஷனர் ஆபிசுக்கும் டிரசரி ஆபிசுக்கும் நடையாய் நடந்து உள்ளார்.

ஒரு கட்டத்திற்கு மேல் சலிப்படைந்த அப்பா டிரசரி ஆபீஸர் அறைக்குச் சென்று, இன்னும் எத்தனை காலம் என்னை அலைக்கழிப்பீர்கள் என்று தெரியவில்லை. இனி நான் இங்கு வருவதாக இல்லை. உங்கள் ஆபீஸ் படி ஏறி ஏறி என் செருப்பு தேய்ந்து விட்டது. இனி இந்த செருப்பு எனக்கு பயன்படாது. இங்கேயே இருக்கட்டும்'' என டிரசரி ஆபிஸர் அறையிலேயே கழட்டிவிட்டு வந்தாராம் அடுத்த சில நாட்களில் ஆத்தாவின் குடும்பப் பென்ஷன் கிடைத்தது.

எங்கள் குடியிருப்பில் ஒரு முறை குடிநீர் பிரச்சனை ஏற்பட்டது. குடியிருப்பு சங்கம் கூடி முடிவு செய்தது சாலை மறியலில் ஈடுபடுவது என்று. அப்பா, குடியிருப்பு சங்கக் கூட்டத்திற்குச் செல்பவர் அல்லர். இதைக் கேள்விப்பட்டவுடன் காலையிலே என்னை அழைத்துக்கொண்டு பைபாஸ் சாலைக்குச் சென்றார். கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் திரண்டனர். மதுக்கூர் சாலையில் மறியலில் ஈடுபட்டோம்.

போலீசார் வந்தனர். பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியில் கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் போலீசார் ஈடுபட்டனர். திடீரென ஆவேச குரல் எழுப்பினார் அப்பா. போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். யாரும் இதை எதிர்பார்க்கவில்லை. நான் செல்லமாட்டேன். தண்ணீர் எனக்குக் கொடுத்தாக வேண்டும் என்று அங்கேயே அமர்ந்தார். கூட்டமும் கலையவில்லை. கோட்டாட்சியர் வந்து உறுதியளித்ததன் பேரில் கூட்டம் கலைந்தது.

இது என்ன பெரிய போராட்டம் என நீங்கள் நினைக்கலாம். அரசு வேலையில்

இருப்பவர் சாலை மறியலில் ஈடுபட்டுப் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவது என்பது தன்னலம் கிடையாது பொதுநலம். பொது நலத்திற்காகப் போராடும் எவரும் போராளியே!

ஒருமுறை அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்த போது,

“நம்மைச் சுற்றி நடக்கும் விஷயங்கள் நம்மைப் பாதிக்காதவரை நாம் ஒதுங்கிச் செல்கிறோம். இதைத்தான் இந்த சமூகம் கற்றுக்கொடுக்கிறது. மிகத் தவறு. நான் செய்யும் செயல் சிலருக்குக் கோமாளித்தனமாகக்கூடத் தோன்றலாம். அவன் அப்படி நினைப்பான், இவன் இப்படி நினைப்பான் என வாழ்ந்தால் உன் வாழ்க்கையை நீ எப்போது வாழ்வாய்? ஊரோடு எப்போதும் ஒத்துப் போக வேண்டிய அவசியம் இல்லை. உனக்கென்று ஒரு பாதை இருக்கும். அதை சரியாகத் தேர்ந்தெடுத்துக்கொள். அந்தப் பாதையிலேயே பயணம் செய். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்பது பற்றி கவலை கொள்ளாதே.” என்று சொன்னார். எனக்கு நினைவிருக்கும் வரை எழுதியிருக்கிறேன். ஆனால் அப்பா இன்னும் சிறப்பாக இந்த விஷயத்தை என்னிடம் சொன்னார்.


அவர் சொன்னபடி வாழ்ந்துவிடலாம் என முயற்சி செய்கிறேன். இன்னும் முடியவில்லை. அப்பாவை போல் வாழ்வது சிரமம் தான்... ●

## மேலவாசல் நடமாடும் நூலகம் - அறிவுலகின் திறவுகோல்

உலகின் முதல் நடமாடும் நூலகம் 1857 ஆம் ஆண்டு இலண்டனில் தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனைப் பிரித்தானிய வோர்க்மென் என்ற நாளிதழ் பிப்ரவரி 1 ம் தேதி அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் முதல் நடமாடும் நூலகம் தோற்றுவிக்கப்பட்ட பெருமை தமிழ்நாட்டையே சேரும். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள மேலவாசல் என்னும் சின்னஞ் சிறு கிராமத்தில் தோற்றுவிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம் நாளில் இந்த நடமாடும் நூலகம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நூலகத்தைத் தொடங்கியவர் எஸ்.வி. கனகசபை. அடிப்படையில் இவர் ஒரு பொறியாளர். தன்னுடைய சொந்த முயற்சியால் தொடங்கியுள்ளார். இதனை நூலகத்தந்தை எஸ்.ஆர். ரெங்கநாதன் தொடங்கி வைத்துள்ளார். இந்த நடமாடும் நூலகத்தின் புகைப்படமும், நூலகத்தின் மாதிரியும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. மன்னார்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு மாட்டு வண்டியில் நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஓர் இயக்கமாக முன்னெடுத்திருக்கின்றனர். இந்த நடமாடும் நூலகத்தால் மன்னார்குடியை உள்ளடக்கிய 98க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பலனடைந்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இரட்டை மாட்டு வண்டியில் இருபுறத்திலும் அடைக்கப்பட்ட வெளிப்பகுதியில் அறிவுச் சுவடிகள், விளக்கப்படங்கள், நீதிக்கதைப் படங்கள் இடம்பெற்றிருந்தன.

தொண்ணூற்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய அறிவுலகின் திறவுகோலாக ஒரு நடமாடும் நூலகம் இயங்கியது என்பது இன்றும் என்றும் நாம் நினைத்துப் போற்றத்தக்கதாகும்.



# பாரதி-மேலநாகை அடைகாத்த அக்கினிக்குஞ்சு



இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரு நெருப்பை மூட்டிய அக்கினிக் குஞ்சொன்று திருவாரூர் மாவட்டம் மேலநாகையில் ஒரு பத்துநாட்கள் அடைகாத்திருந்தது என்பது நாம் அறிந்துகொள்ள வேண்டிய செய்தி ஆகும். அந்த அக்கினிக்குஞ்சு மகாகவி. சி. சுப்பிரமணிய பாரதியார்.

தன் எழுத்தாலும் பேச்சாலும் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களது உள்ளங்களில் நாட்டுப்பற்று என்னும்பெருஞ் சுடரை ஏற்றியவர். மண் விடுதலையும் பெண் விடுதலையும் இவரது படைப்புக் களத்தின் மையமாகும். "ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்", என்று செந்தணலாய்க் கனன்று நின்றவர். "முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்," என்று இந்திய ஒற்றுமையைப் பாடியவர்.

கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம் போன்ற படைப்புகளைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்தவர். தமிழ்ப் புதுக்கவிதைக்கு வசன கவிதை என்ற புதிய இலக்கிய வகைமையைக் கொடையளித்தவர்.

பாரதியின் செயல்பாடுகளில் நடுக்கமுற்ற ஆங்கிலேய அரசாங்கம் 1918 ல் அவரைக் கைது செய்யப் பிடியாணை பிறப்பித்தது. அப்போது பாண்டிச்சேரியில் தங்கியிருந்த பாரதியர், அங்கிருந்து தப்பித்து, மன்னார்குடி மேலநாகைக்குத் தலைமறைவாக வந்தார். அவருக்கு

அடைக்கலம் கொடுத்தவர் கொடியாலம் வா. ரெங்கசாமி குடும்பத்தினர். இந்தச் செய்தியை 2011 ஏப்ரல் 6 நாளிட்ட ஆனந்தவிகடனின் இணைப்பு இதழான என் விகடன் பின்வருமாறு பதிவு செய்கிறது.

மேலநாகையில் ரெங்கசாமிக்கு ஒரு பங்களா இருந்தது. மாலை வேளைகளில் அவர் அங்கு செல்வார். அன்றைய தினம் அப்படி அவர் சென்று இருந்தபோது வழுக்கைத் தலையுடன் மீசை இல்லாமல் பித்தான் இல்லாத சட்டையின் மேல்கோட் அணிந்து இடுப்பில் பஞ்சகச்சம் கட்டி இருந்த ஒருவர் குதிரை வண்டியில் வந்து பங்களாமுன் இறங்கினார். ரெங்கசுவாமிக்கு சட்டென அவரை அடையாளம் தெரியவில்லை. உற்றுக் கவனித்தால்... பாரதி.

ஆனந்த அதிர்ச்சியை அடக்கிக்கொண்ட ரெங்கசுவாமி தன் நண்பர்களிடம், “இவர் என் ஸ்நேகிதர் சுந்தரம் அய்யர். இங்குதான் கொஞ்ச நாட்கள் தங்கி இருப்பார், என்று சொன்னார். பாரதி அங்கு ஒருவாரம் தங்கி இருந்தார். அப்போது அவர் எழுதிய மறக்க முடியாத பாடல்களில் ஒன்று. “பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு”.

மன்னார்குடி நகரம் நிறைய வரலாற்றுச் சுவடுகளைக் கொண்டது. ஆனால் அவற்றில் பல இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை. விடுதலைப் போராட்ட வீரரும் பாரதியின் சீடருமான வ.ரா. என்கிற வ.ராமசாமி எழுதிய பாரதியாரின் வாழ்ககை வரலாற்றுப் புத்தகம் சித்திர பாரதி. “இந்தப் புத்தகத்தால் தான் பாரதி இங்கு தங்கியதே நமக்குத் தெரியும்,” என்றார்.




பாரதி தங்கி இருந்த மேலநாகையில் உள்ள அவரது நினைவிடத்திற்குப் பாரதி பேரன்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் பாரதி பிறந்த நாளில் நினைவு வணக்கம் செலுத்தி வருகின்றனர். ●

---

கவிதை


# காணிக்கை

முட்டை வியாபாரி சித்தப்பா
மூவாயிரம் ரூபாய் காணிக்கை.
கறிக்கடை மாமா
கணக்காய் ஆயிரத்தொண்ணு.
மீன் விற்கும் அத்தை
வியாபாரம் அதிகமென்பதால்
தங்கத்தில் மீன் உருவம்
உண்டியலில் போடுவார்.
லெதர் பிசினஸ் மச்சான்
லாபத்தில் ஒரு சதவீதம்
கட்டு கட்டாய்ச் செலுத்துவார்.

இந்தக் காணிக்கையெல்லாம்
புனிதப்படுத்தல் ஏதுமின்றி அப்படியே
ஏற்றுக்கொள்ளப்பட்டதைப் பார்த்து
சத்தம் வராமல் சிரித்தார்
பல்லாயிரம் பட்டுப்பூச்சிகளிலிருந்து
உருவான உயர்தரப் பட்டாடை
அணிந்த எம்பெருமான்.

- நாகை பாலா

# கோ. அருணகிரி கவிதைகள்



## ஒரே பெயரில் இரண்டு கீரைகள்.

கீரையின் பச்சை சிரிப்பை
உச்சியில் சுமந்து
இறக்க முடியாமல்
ஒவ்வொரு வீடாக ஏற்றிஇறக்கி

பேரம் பேசுபவர்களின் குரலுக்கும்
தன் உழைப்புக்கும்
இடைப்பட்ட இடத்தில் நின்று சிரித்து

இல்லாத கீரையை
கேட்பவர்களிடம்
நாளை தருவதாக நயந்து

மணத்தக்காளி
வெந்தயக்கீரை
பொன்னாங்கன்னி என
வெவ்வேறு குரல் பாவங்கள் கொடுத்து

கீரையின் பாரம் குறையக் குறைய
கழுத்து இடுப்பு வலிகளில் இருந்து
ஆசுவாசமடைந்து
ஆத்தா விற்றுச் செல்லும் கீரையும்

இருசக்கர வாகனத்தில்
பதிவு செய்யப்பட்ட
ஒலிபெருக்கிக் குரல்களால்
கீரை விற்பவரின் கீரையும்
பெயரளவில் ஒன்றுதான்.

ஆனால் அந்த இரண்டு
கீரையும் வேறு வேறு.

## சிலுவையில் தொங்கும் மரம்

மரத்தில் ஆணியடித்து
தொங்கவிடப்பட்டிருந்தது
செத்தவனை வைப்பதற்கான
குளிர்சாதனப் பெட்டி விளம்பரம்.

ஆணியடித்து
வடிந்த பால்தடம்
அழுத பிள்ளையின் கன்னம் போல.

ஒரு துருப்பிடித்த ஆணியைத்
தன் சதையில் சொருகிக்கொண்டு
இந்த மரம் எப்படித்தான்
துளிர்க்கிறதோ...
பூக்கிறதோ...
காய்க்கிறதோ...!

மரத்தில்
சிலுவை செய்வதைக்கூட
மன்னித்துவிடலாம்.
ஒரு மரத்தையே
சிலுவையில் அறைந்து இருப்பதைத்தான்
ஏற்றுக்கொள்ள முடியவில்லை!




## செருப்...பூ

கோவில் வாசலில்
எல்லாச் செருப்புகளோடும் கிடக்கின்ற
அந்த செருப்பை எல்லா செருப்புகளோடும்
சேர்த்து பார்க்க முடியவில்லை என்னால்.

பாசிப் பச்சை நிற உடம்பில்
அரக்கு நிறத்தில்
ஒரு பூ வரையப்பட்டு இருக்கிறது.
உள்ளங்கால் வைக்கும் இடத்தில்
அதே நிறத்தில்
ஒரு பூ பின்னப்பட்டிருக்கிறது மேல்புறத்தில்..
இத்தனை அழகிய செருப்பைப்
பார்க்கையில்
அணியும் கால்கள் குறித்த கற்பனைக்கு
மனம் செல்வதைத் தவிர்க்க முடியவில்லை.

பளிச்சென இருக்கும் அந்தப்பூவை
பார்க்கையில்
பூ மிதித்து பூ வாடவா போகிறது என
சொல்லவும் தோன்றுகிறது.

பிறகுதான் கவனித்தேன்
எல்லாச் செருப்புக்கும்
டோக்கன் கொடுத்துக்கொண்டிருக்கும் சிறுமியை..

உன் செருப்பு எங்கே என்றேன்?
எனக்குச் செருப்பே இல்லை
என்ற அவள் தன் பாவாடையின்
அடிப்பாகத்தை இழுத்து
பித்த வெடிப்புப் பாதத்தை மறைத்தபொழுது
குற்ற உணர்வில்
என் பாதத்திலும் விழுந்தது
கீறலாய் ஒரு பித்தவெடிப்பு...

சிறுகதை

# சாவக்கட்டு

## அய்யனார் ஈடாடி

பூவும் பிஞ்சும் இறங்கிய மாமரங்களும் புளியமரங்களும் சுனத்து இருந்தது. நெடு வாய்க்காலில் தண்ணீர் சலசலவென ஓடிக்கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்த்துச் சொனங்கிப் போய் வந்தார் திருலோகம்.

தண்ணியை அள்ளி அள்ளி நாவை உலர்த்தினார். கையோடு கொண்டு வந்த மறைச்சேவலையும் வாய்க்காலில் இறக்கி விட்டு, சிறிது நேரம் குளித்து குளுமையடைந்து கிளம்பினார். எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகள் தூக்கி நின்றன. ஒலிப்பெருக்கியில் அறிவிப்புகள் வந்தபடியே இருந்தன. பந்தயக்காரர்கள் சேவலைத் தயார்படுத்தி வையுங்க இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் சாவக்கட்டு தொடங்கப்போகுது. திருலோகம் வேகமாக வேசுமாக எட்டு வைத்து வந்தார். இந்தச் சுற்று வட்டாரத்தில் கோழி வளர்ப்பிலும், சேவச்சண்டையிலும் பேரு பெற்றவர் திருலோகம்.

அதிரசப்பாட்டி கடகாப்பெட்டி நிறைய அதிரசத்தை அடுக்கி தலைச்சுமையோடு வந்தாள்.

“அதிருசம்.. அதிருசம்“..

பாட்டியின் குரலைக் கேட்டதும் ஓடி ஓடி வந்து வாங்குவார்கள்.

பச்சரிசியோடு பனங்கருப்பட்டி போட்டு இடித்துச் சுட்டு எடுத்து வரும் அதிரசப் பாட்டியின் அதிரசத்துக்கு அடித்துக் கொண்டனர்.

“ஏலே திருலோகம் அதிரசம் வாங்கிட்டுப் போடா”

“இல்லை ஆத்தா, வேணாம்“..

பந்தயத்தில் சேவல இறக்கிவிட்டு செயிச்சிட்டு வந்து வாங்கிக்கிறேன் ஆத்தா.

“ஒன்ஞ்சேவ செயிக்காம இருக்குமாடா?”.

“இந்த சுத்துப்பட்டியில் திருலோகம் சேவல்னா, பந்தயம் கட்டுறதுக்குக் கூட பயப்புடுவாய்ங்க”.

ஆத்தா... “நாலு அதிரசம் எடுத்து வச்சிரு”



பந்தயத்தை முடிச்சுட்டு வந்திடுறேன்.

பந்தயத்தில் செயித்த சந்தோஷத்தில் வீடு வந்து சேர்ந்தார் திருலோகம்.

“ஏய் சீலையம்மா”.. “ஏய் சீலையம்மா”...

“எல்லா கோழி குஞ்சுகளுக்கும் இரை வச்சியா”.

வச்சேன் வச்சேன்.

‘‘நம்ம சேவ கிட்ட அடி வாங்கி தோத்துப்போன சேவலுக்கு காயம் நெறைய இருக்கு. இம்புட்டு மஞ்ச கொண்டு வா’’

சீலையம்மா மஞ்சளை உரலில் போட்டு இடித்துப் பொடியாக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். சேவலின் கால்,முகம், கொண்டையில் மஞ்சளை அப்பிப் பூசிவிட்டுக் கூண்டுக்குள் அடைத்து வைத்தார்.

திருலோகமும் சீலையம்மாளும் பிள்ளைபாக்கியம் பெறாமல் இருந்தார்கள். கோழிகளையும் குஞ்சுகளையும் சேவல்களையும் பிள்ளையாகப் பெற்றுக் கொண்டார்கள். வீட்டைச் சுற்றிலும் அரைக் குறுக்கத்திற்குக் கொசுவலை கம்பி வேலி பிடித்து வைத்திருந்தார் திருலோகம்.

அடுத்த வீட்டுக் கோழிகள் உள்ள வரக்கூடாது. நம்ம வீட்டுக் கோழிகள் வெளியே போகக்கூடாது.

விடிந்தால் செல்லூர் சாவக்கட்டு. கம்பரிசி சேவலையும் பெரியமறைச் சேவலையும் தயார்படுத்தினார் திருலோகம். பெரிய குளுதாணி நிறைய தண்ணீரை ஊற்றி சேவல்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுத்தார். எவ்வளவு நேரம் தாங்கும் என்று சோதனை செய்தார். ரெண்டு சொட்டு எலுமிச்சை சாறு விட்டு சேவல்களை

மேலேற்றி கூண்டுக்குள் அடைத்து விட்டு திண்ணைக்கு வந்தார். சீலையம்மா அசந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

"ஏய் சீலையம்மா... ஏய் சீலையம்மா..."

கோழி கூப்பிட வெள்ளனத்துல சாவக்கட்டுக்கு போகனும்.

அசந்து உறங்கிறாத...

வேம்பு மரத்தடியில் பூக்கள் சிதறிக் கிடந்தது. குஞ்சுத்தா கோழிகள் குப்பைகளைக் கிண்டி புழுக்களையும் பூச்சிகளையும் தின்றன. பொன்ராமன் வீட்டின் முன் வந்து நின்று கொண்டிருந்தான். சீலையம்மா அக்கா, திருலோகம் மாமா இருக்காரா.?

இன்னைக்கு செல்லூர் சாவக்கட்டு அங்க போயிருக்காரு.

என்ன சேதி? இந்தப் பக்கம்.

"ரெண்டுக் கோழி குஞ்சு வேணும். வளர்க்க".

கோழிக்குஞ்சோ, முட்டையோ வெளியே குடுக்குறதில்லை.

சம்சாரம் கோழி வளர்க்க ஆசைப்பட்டு கேட்டதாக சீலைம்மாவிடம் கேட்டான் பொன்ராமன். அவன் முகத்தைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. ஒருவேளை கோழியைக்குடுத்து நம்மள விட இந்த ஊருக்குள்ள பெரிய பந்தயக்காரர்களாக போட்டிக்கு வந்திட்டா அவ்வளவு தான் என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குள் சென்றாள்.

திருலோகம் பிடிவாதக்காரர். கோழி தரமாட்டார், என்று புரிந்து கொண்டான் பொன்ராமன்.

வேறு ஊருகளுக்கோ சந்தைகளுக்கோ சென்று கோழி வாங்க விருப்பமில்லை. அப்படி ஒரு நாள் திருமங்கலம் சந்தைக்கு கோழி வாங்கப் போயிட்டு வரும் வழியில் வெடைக்குஞ்சுக பறந்து ஓடி விட்டது. காட்டுகளுக்குள் விரட்டிப் பார்த்தும் பிடிக்க முடியாமல் திரும்பினான்.

திருலோகம் இல்லாத நேரமாய் சீலையம்மாவிடம் அடிக்கடி சென்று பிடிவாதம் பிடித்து ரெண்டு கோழிக் குஞ்சுகளை வாங்கினான்.

"யாருகிட்டயும் சொல்லிராத சாமி",

"இந்த விசயம் வெளிய தெரிஞ்சா"..

"எனக்கு எருவு அடுக்கிருவாரு, ஒங்க மாமா."

சரிக்கா...

நான் எதுக்கு சொல்லப்போறேன்.

கோழிக்குஞ்சுகள் கத்தாமல் இருப்பதற்கு ஈரத்துணிகளைச் சுற்றி வீட்டுக்குக் கொண்டு வந்தான். மந்தையிலும் பெட்டிக்கடையில் யாரும் இருக்கிறார்களா என்று பார்த்தான். யாரும் இல்லை. விறு விறுவென நடந்து வந்து கொட்டத்திற்குள் நுழைந்தான். யாரும் கோழிக்குஞ்சு ஏதுன்னு கேட்டா பெறாந்து தூக்கியாந்து போட்டுச்சுனு சொல்லிச் சமாளித்துக் கொள்ளலாம் என்று மனதுக்குள் ஓடிக்கொண்டிருந்தன.

சீலையம்மாவுக்கு பயம். கோழிக்குஞ்சு குடுத்து விட்ட விசயம் தெரிந்தால் என்ன செய்வது, ஏது செய்வதென்று.

என்றைக்கும் போலல்லாமல் திடீரென்று கோழிகளையும் குஞ்சு களையும் எண்ணத் தொடங்கினார்.

சாம்பல் கோழியின் குஞ்சுகள் ரெண்டு இல்லாமல் இருந்தது.

சீலையம்மாவிடம், கோழி குஞ்சுகள பாக்காம எங்க போன?. "காக்கா கழுகு தூக்கிருச்சா" "கெணற்றடிக்கு தண்ணி தூக்கப் போயிட்டேன்" என்று உண்மையை மறைத்தாள்.

பொன்ராமன் வாங்கிட்டுப் போன குஞ்சுகள் இரண்டும் விடைக்கோழியாய் வளர்ந்திருந்தது. இரண்டும் பெட்டையாக இருந்தன. இணை சேர்ப்பதற்கு நல்ல வேற துடிப்பான சேவல்கள் இல்லை.

சீலையம்மாவிடம் மீண்டும் வந்தான்.

"என்னடா பொன்ராமா குஞ்சுக வளர்ந்திருச்சா"?.

"நல்லா வளர்ந்திருச்சுக்கா".

அதுகள மிதிக்கச் சேவல் இல்லை.

வேற சேவல்களோட சேர்ந்துச்சனா பலவற்றையா மாறிடும்.

சேவல் குடுத்தீங்கனா இணை சேர்த்து வளத்துக்கிருவேன் என்று சொன்னான்.

ரெண்டு கோழிகளையும் இங்க கொண்டு வந்து விடவும் முடியாது. திருலோகம் மாமா கண்டுபிடிச்சுருவாரு என்று நினைத்துக் கொள்கையில் ஒரு புது யோசனை வந்தது. திருலோகம் தினமும் காலையில் கிளம்பி மதியம்.. அப்படியில்லை என்றால் பொழுதுசாயத்தான் வருவார். அவர் வெளியே கிளம்புற நேரம் பார்த்து

சேவலைப் பிடித்துக் கொண்டு வந்து கோழிகளை மிதிக்க விட்டு, திருலோகம் வீடு வருவதற்குள் சேவலைப் பிடித்திட்டு' வந்து சீலையம்மாவிடம் விட்டுவிடலாமென்று யோசித்தான். சீலையம்மாவுக்கும் பொன்ராமனுக்கும் மட்டுந்தான் இந்த விசயம் தெரியும். காட்டுப் பாதை வழியே வந்து காட்டுப்பாதை வழியே சென்றான் பொன்ராமன்.

பாட்டையாவின் டீக்கடையில் அனலாய் பறந்து கொண்டிருந்தது பால். சாவக்கட்டுக்குப் போயிட்டு வந்த களைப்பில் ஒரு கட்டு பீடியும் டீயும் வாங்கி மரப் பலகையில் உட்கார்ந்தார் திருலோகம்.

சங்கையா வந்ததும் திருலோகம் சித்தப்பா ஒங்க வீட்டுச் சேவல்கள் ஒங்க வீடுகள விட்டு வெளியே வராது. ஒருவேளை பறந்து வெளியே வந்திருமோ? நீங்க நல்லா கொசுவலை கம்பி வேலி போட்டு வச்சிருக்கீங்க.

எப்படி வெளியே வரும்..?

"ஓங்க சேவல் பொன்ராமன் வீட்டுக் கோழியை ஏறி மிதிச்சத நான் பாத்தேன்"

"ஏலே சேவ ஏறி மிதிக்கிறது பார்க்கிற சரி",

"ஓங்க அப்பன் ஓங்க ஆத்தாள ஏறுறத பாத்திருந்தா".

டீக்கடையில் சிரிப்பலைகள் ஓடியது.

எண்ணே திருலோகம் அண்ணே சங்கையா சொல்லுறது உண்மை தாண்ணே. நீயில்லாத நேரம் பார்த்து காட்டுப்பாதையில போயிட்டு காட்டுப் பாதையிலே வாரான். சீலையம்மா ஈரத்துணியைச் சுத்தி நாருப்பொட்டில சேவலைக் குடுத்து விடுதாமென்று திருலோகத்திடம் சொல்லிக் கொண்டிருந்தான். ஊர் தெறித்து வந்தது குலவைச் சத்தம்.

பொன்ராமன் இரண்டு கோழிகளையும் அடையில் ஏற்றினான் நேக்கு போக்குகளைச் சீலையம்மா சொல்லிவிட்டிருந்தாள். மூன்று வாரங்கள் கழித்து குஞ்சுகளைப் பொறித்தது இரண்டு கோழிகளும்.

சாவக்கட்டுப் பந்தயத்தில் பேரும் புகழும் பேற்ற திருலோகம் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை உள்ளூரில் இருந்தே பந்தயத்துக்கு பொன்ராமன் சேவல் வருமென்று.

பொன்ராமனுக்கு கோழிகள் பெருக ஆரம்பித்தது. சேவல்களைப் பந்தயத்திற்கு எடுத்துச் சென்றான். ஊருக்குள் திருலோகத்திற்குப் போட்டியாக பொன்ராமன் என்ற விறுவிறுப்பான பேச்சுக்கள் பட்டமாய் சுத்தி வந்தது.

பிராட்டியார்பெற்று சாவக்கட்டு அன்று சேவல்கள் பந்தயத்திற்கு வந்தன. திருலோகத்தின் சேவலும் பொன்ராமனின் சேவலும் இறங்கின. இறுதியில் திருலோகத்தின் சேவல் சுருண்டு விழுந்தது. முப்பதாண்டு காலமாய் செயித்து வந்த பந்தயக்காரர் திருலோகத்தின் சேவல் கவ்வியது முகங்குராவிப் போய் வந்தார் திருலோகம். வீட்டில் மனைவி சீலையம்மாவுக்கும் திருலோகத்திற்கும் வார்த்தைப் போர் தீயாய்ப் பரவியது. என் பேரையும் புகழையும் கெடுத்தவ நீதாண்டியென்று சீலையம்மாவை அடித்து துரத்தி வதை செய்து மண்ணெண்ணெயை ஊற்றினான்.

ஆமய்யா நான் தான் பொன்ராமனுக்கு சேவல் குடுத்து விட்டேன்.

"இம்புட்டு கோழிகளையும் இந்தப் பேரும் புகழையும் வச்சு என்ன செய்யப் போற?

நமக்கு கொள்ளி வைக்க ஒரு பிள்ளை கூட இல்லை. இந்தக் கோழிகளா வந்து கொள்ளி போடப்போகுது. நாலு மனுசங்க வேண்டும் என்று விம்மினாள்.

ஊருக்குள் முகங்கொடுத்து பேச முடியாதவராய்த் திருலோகம் மறுநாள் காலையில் சாவக்கட்டிற்குக் கிளம்பினார். சீலையம்மா கோழிகளுக்கு இரை வைத்தாள். அன்று முழுவதும் பட்டினியாகக் கிடந்தாள். பிள்ளைகளாய் வளர்த்த கோழிகளையும் குஞ்சு களையும் பார்த்து கண்ணீர் விட்டபடியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

பொழுதும் சாயத்துவங்கியிருந்தது. திருலோகமும் சாவக்கட்டு முடிந்து வந்தார். அன்று இரவு முழுவதும் உறக்கமில்லை. பளாரென்று விடிந்தது. கோழிகளும் குஞ்சுகளும் சேவல்களும் செத்துக் கிடந்தன. மருந்துகளோடு சோற்றுப் பருக்கைகள் பிசைந்த சீலையம்மாவின் கைகளில் நாடி அடங்கிக் கொண்டிருந்தது.

குறுங்கதை

# வேலி

## தங்கேஸ்வரன்

அது மலையடிவார கிராமம். அங்கே விண்ணைத் தொடும் அளவிற்குச் சவுக்கு மரங்களும் ஊசி இலை மரங்களும் போட்டி போட்டுக் கொண்டு உயரமாக வளர்ந்து நின்றன. அந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்களின் பிரதான தொழில் விவசாயம்தான். குறு மிளகு எடுப்பது ஏலக்காய் பறிப்பது, காபி, தேயிலை பயிரிடுவது, இவைகள் தவிர வாழையும் கரும்பும் பயிரிட்டு நல்ல விளைச்சல் எடுப்பது என செழிப்பான விவசாயம்தான். ஆனாலும் என்ன பிரயோசனம்?



அந்த ஊர் மக்கள் தங்களுக்கென்று எந்த நிலத்தையும் உரிமையாகப் பெற்றிருக்கவில்லையே

இத்தனை ஆண்டு காலமாய் வெறும் கூலிகளாகத்தானே அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இயற்கையை வெள்ளந்தியாக நேசிக்கக் கூடிய மனிதர்கள் அவர்கள்.

கீழே நகரத்திலிருந்து வரும்

பெரும் முதலாளிகளும் அரசியல்வாதிகளும்தான் இந்த நிலங்களைத் தங்கள் வசப்படுத்தி அங்குள்ள பூர்வ மக்களை குடி வேலையாட்களாகப் பணிக்கு வைத்திருக்கிறார்கள்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த இசக்கி கங்காணி என்பவன் ஒரு பெரிய முதலாளியின் விசுவாசி. ஏவல் நாயைப் போன்றவன்தான் அவன். அவனுக்கு சிறிதும் மனிதாபிமானம் கிடையாது. தன் மக்கள் மீது கொஞ்சமும் விசுவாசமும் கிடையாது.. முதலாளிக்காகத் தன் மக்களைக் காட்டிக் கொடுப்பதற்கும், இந்த காட்டையே அழிப்பதற்கும் கூட அவன் தயங்காதவன்தான்.

அந்தக் காட்டில் அந்த மலைவாழ் மக்களின் இயற்கையை நேசிக்கும் விதிகளுக்கு எதிராக, இந்தக் கங்காணி இசக்கி, சமீபமாக ஒரு பாதகமான செயலைச் செய்து முடித்திருக்கிறான். அதுதான் அந்த கிராமத்திற்கு அருகே உள்ள, தன் முதலாளியின் ஐம்பது ஏக்கர் வாழைத் தோட்டத்தைச் சுற்றி, ஆட்களை வைத்துக் கொண்டு, ராவோடு ராவாக ரகசியமாக மின் வேலியை அமைத்து முடித்தது.

காலையில் பார்த்தால் அது சாதாரணமாக முள் கம்பி வேலி போலத்தான் தோற்றம் தரும். ஆனால், இருட்ட ஆரம்பித்தவுடன் கங்காணி இசக்கி யாருக்கும் தெரியாமல் அங்கே வந்து அந்த முள் வேலிக்கு, ரகசியமாக நல்ல ஹெவி மின் இணைப்பை கொடுத்து விட்டுச் சென்று விடுவான் பின்பு காலை வரை அந்த வேலியில் மின்சாரம் பாய்ந்து கொண்டேதானிருக்கும். அதற்கான மின் இணைப்புப் பெட்டி மற்றும் சுவிட்ச் பாக்ஸ் இவைகளெல்லாம் எங்கேயிருக்கிறது என்று அவனைத் தவிர அந்த ஊரில் வேறு யாருக்கும் தெரியாது.

இன்றும் வழக்கம் போல கங்காணி வந்து ரகசியமாக அந்த வேலிக்கு மின் இணைப்பைக் கொடுத்து விட்டு நைசாக ஊருக்குள் போகும் ஒற்றையடி பாதையை நோக்கி நான்கைந்து எட்டுகள் தான் எடுத்து வைத்திருப்பான். அதற்குள் அங்கேயிருந்த சவுக்கு மரங்களுக்குப் பின்னால் பதுங்கியிருந்த முறிக்கொம்பன் யானை, பயங்கரமாக பிளிறியபடியே வெளியே வந்து, அவனைத் துரத்த ஆரம்பித்து விட்டது. ஓடுவதற்கு எதிர் திசை எதுவும் கிடைக்காமல், உயிர் பயத்தில், இருட்டுக்குள் வந்த வழியிலே திரும்பவும் ஓடிச் சென்றவன், சரியாகப் போய் அதே மின் வேலியிலேயே விழுந்து விட்டான்.

அவன் விழுந்த வேகத்திலேயே, மின்சாரம் அவன் உடலெல்லாம் அசுர

வேகத்தில் பாய்ந்து பரவ, எழுந்திருக்க கூட சிறிதும் அவகாசம் இன்றி. அவனுடைய உடல் அந்த மின் வேலியிலேயே, சிறிது சிறிதாக துடித்து அடங்கியது.

அந்தக் காட்சியைக் கண்ட பிறகு தான் முறிக் கொம்பன் யானை, சாக்கிரதையாக மெல்லப் பின் வாங்கி, இருளோடு இருளாக மறைந்தது. ஆனால் அதன் கண்களில் இன்னும் சென்ற வாரம் இதே மின் வேலியில், குழந்தைத் தனமாக விளையாடப் போய், அடிபட்டு துடிதுடித்து இறந்து போன அப்படியே தன்னுடைய செல்லக் குட்டி யானையின் தோற்றம் அப்படியேதான் இருந்தது. அந்த இருளிலும் கூட அதன் கண்களிலிருந்து இன்னும் கண்ணீர் சொட்டிக் கொண்டேதான் இருக்கிறது. ●

---

நடைச்சித்திரம்

# இப்படியும் இவர்கள்

## சா.தமிழ்ச்செல்வன்

காலை நேர நடைப்பயிற்சி எனக்கும் என்னுடைய நண்பர்களுக்கும் வெறும் நடைப்பயிற்சி மட்டுமன்று. இங்கிலாந்தின் சமூக வரலாற்றில் வருகின்ற Coffee House போல, சமூகத்தின் செயல்பாடுகளை, அரசியல் நகர்வுகளை, இலக்கியத்தின் போக்கை, திரையிசைப் பாடல்களை, விழாக்களை, மாணவர்களின் நடத்தையை, கோவில்களில் அதிகரிக்கின்ற கூட்டத்தை, தொலைக்காட்சிச் செய்திகளை, அதிகரித்து வருகின்ற புரோட்டாக் கடைகளை, துரித உணவகங்களை என்று இன்னும் என்னவெல்லாம் பேசி, ஒரு மணி நேர நடைக்குப் பிறகு, நாங்கள் கூடும் இடம் தேரடித் தேநீர்க்கடை,.

ஐம்பது வயது கடந்த எங்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வகையான தேநீர். சர்க்கரை இல்லாமல், சிறிது சர்க்கரையும், பாதி சர்க்கரையும், சிலருக்குப் பால் என்று ஒரு கலவையான அருந்துதல். வேலைநாட்களில் எட்டு மணிக்கே கலைந்து விடுவோம். இதுவே விடுமுறை நாளென்றால் 9 அல்லது 9.30 வரை உரையாடல் தொடரும். சிலநாட்களில் காலை உணவு கடையிலேயே முடிந்துவிடும்.

அவ்வப்போது தேநீர்க்கடை வாசலில் நடுத்தர வயதில் மெலிந்த சற்றே உயரம் குறைவான காரை படிந்த பற்களுடன் தோளில் தொங்கும் ஒரு பையுடன் மழையற்றுப்போன மாவட்டத்தைச் சார்ந்த ஒருவரைப் பார்ப்போம். அவரது நடையில் ஒரு சுறுசுறுப்பும், கண்களில் இழந்த நிலத்தின் ஏக்கமும், பேசத் தொடங்கினால் இழையோடும் ஒரு மெல்லிய சிரிப்பும் இருக்கும். எப்போதும் பணிவோடு பேசுவார்.

நகரம் முழுவதும் நடந்தே சென்று பூட்டு,பெல்ட் போன்றவற்றைத் தினந்தோறும் விற்பனை செய்பவர். எங்கள் பகுதி முழுவதும் காலை 7 மணிக்குத் தொடங்கி இரவு வரை அந்த இரண்டு பொருட்களையும் விற்று வருகிறவர். இவரது வருவாயில்தான் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளின் எதிர்காலமும். ஆச்சர்யம் கலந்த வருத்தம் எங்களுக்கு. இந்த வருவாயில் குடும்பம் நடத்த எப்படி முடிகிறது என்று. இதைப்போன்றே சோளப்பொறி, ஐஸ்க்ரீம், பஞ்சுமிட்டாய் விற்கின்ற எளியவர்களைப் பற்றியும் மறுநாள் நடையில் விவாதிப்போம்.

பூட்டு விற்பவரிடம் ஏதாவது வாங்க வேண்டும் என்பதற்காகவே அவ்வப்போது எங்களில் யாராவது ஒருவர் ஒரு பொருளை வாங்குவோம். முந்தைய நாள் அவர் சொன்ன செய்தித்தான் இப்படியும் மனிதர்களா என்று வெறுப்படைய வைத்தது. இளைஞர்கள் இருவர் இவரிடம் பூட்டும், பெல்ட்டும் வாங்கிவிட்டு, கூகுள் பே செய்திருக்கிறார்கள். பணம் இவரது கணக்கிற்கு வரவில்லை. நெட் ஸ்லோவாக இருக்கிறது. சிறிது நேரத்தில் வந்துவிடும் என்று சொல்லி ஏமாற்றி இருக்கின்றார்கள். இப்படியும் செய்ய இவர்களால் எப்படி முடிகிறது?... ●

கவிதை

# தோழர்
# மன்னை உ. இராசேந்திரன்

(9.4.2025 ஏழாமாண்டு நினைவேந்தல்)



நீங்கள்
பேசிக் கொண்டிருப்பீர்கள்..!

ஆறு சலசலத்து
ஓடிக் கொண்டிருக்கும்

வெள்ளைப் புறாக்கள்
படபடத்துச் சிறகடிக்கும்..!

மலர் டீச்சர் வைத்த மல்லிச் செடி சன்னலுக்குள்
தலை நீட்டும்..

நீங்கள்
பேசிக் கொண்டிருப்பீர்கள்..

அம்பேத்கரும் பெரியாரும் கைத்தடியுடன்
நடை போடுவர்.

அப்பு
பாலன்
சோழபாண்டி சந்திரசேகர்
பொன்பரப்பி தமிழரசன்
விரல்கள் இறுகமூடி முழங்கை உயர்த்தி
முழங்கிச் செல்வர்.

நீங்கள்
பேசிக் கொண்டிருப்பீர்கள்..

கார்க்கியும் கத்தாரும்
செரபண்ட்ராசும் உங்கள் அறைக்குள்
உலவுவர்.

பகத்சிங், இராசகுரு, சுகதேவ்
தன் தோழர்களோடு திலீபனை
சந்தித்துச் செல்வான்.

நீங்கள்
பேசிக் கொண்டிருப்பீர்கள்

இன்குலாப் கவிதையாய்
போர்ப்பறை இசைப்பார்.

அ. மார்க்சு
பேரா. கல்யாணி
பேரா. திருமாவளவன்
இராமசுப்பிரமணியன்
கோச்சடை அரங்க குணசேகரன்
மாசி பூபாலன்
இரா. காமராசு
கலை பாரதி என நீளும்
தோழர்கள் கைகளை
அழுந்த பிடித்துக் குலுக்குவர்.

நீங்கள் பேசிக் கொண்டிருப்பீர்கள்..

குப்பாயிப் பாட்டி
பீமன்
மனநோயாளி கம்யூனிஸ்ட் மணி
குலசாமி வீரப்பன் வாசலில்
விளைந்துகிடக்கும்
காட்டு மூலிகைச் செடியாய்
மணம் பரப்புவர்.

மடியில் காந்தியும் மனசுக்குள் வள்ளலாரும்
அழுத்தமாய் அமர்ந்திருப்பர்.
துவக்கோடு
பிரபாகரனும்
புன்னகைத்துக் கொண்டிருப்பார்.

பேரன்பு கசிகின்ற கண்களால் கருணையின்
மகள் தெரசா
உங்களையே
பார்த்துக்கொண்டிருப்பாள்.

நீங்கள் பேசிக் கொண்டிருப்பீர்கள்..!

**கலைபாரதி**

கட்டுரை

# அன்புன்னா அம்மா..!

## இரா.மோகன்ராஜன்

இவ்வுலகில் யாருடனும் நான் வேறுபடவில்லை. என்னுள் இருக்கும் குழந்தமையை உயிருடன் வைத்துள்ளேன் என்பதைத் தவிர – **ஹோஸே சரமாஹோ**



இழக்குறது வலி. அன்பை இழக்குறது தாயை இழக்குறது, இரண்டும் ஒண்ணுதான். தாயிங்குறது சரமாஹோ சொல்ற குழந்தைமை. அதை நமக்குள்ள பாலோட ஊட்டுறதுதான் அம்மா. கடைசி வரை குழந்தைமைய இழக்காதவங்களதான் நாம அம்மாங்குறோம். இரு கை, கால்கொண்ட மிருகத்தை மனுசனாக்குனது நல்லமனசுன்னு சொல்வாங்க. ஆனா அந்த நல்ல மனசுங்குறது அம்மாகிட்டேருந்து வந்தது. அம்மா குடுத்தது. அம்மாவா ஆனது. அம்மாங்குற ஒரு பிறவி இந்த ஒலகத்துக்கு கொடுத்த பெரிய கருணை என்னான்னா அது அன்புதான். அம்மா இல்லேனா அன்புங்குறதும் இல்லேதான்.

அம்மாவோட பொறந்த வீட்டு வாழ்க்கங்குறது. பதினைஞ்சு வயசோட சரி. மத்தது எல்லாம் புகுந்த வீட்டுலதான். ரெண்டாவது பொறந்த வீடா புகுந்த வீடுதான் இருந்துச்சு. அப்படித்தான் ஆகிட்டு. பதினைஞ்சு வயசு கொழந்தமை கழியாத அம்மாதான் பத்து, பதினைஞ்சு பேருக்குத் தாயா இருந்தாங்க புகுந்த வீட்டுல. 15 வயசுல கல்யாணம். அஞ்சும், பத்துமான வயசுல நாலு கொழுந்தன்மார். அந்த வயச கடந்த இன்னும் ரெண்டு பேரு. அம்மாதான் அம்மா இல்லாத கொழுந்தன்மாருக்கும் அம்மாவானாங்க. "பதினாரு வயதினிலே பதினேழு பிள்ளையம்மா தாலாட்டுப் பாடுகிறேன் தாயாகவில்லையம்மா!" அம்மா இந்த சினிமா பாட்டை அடிக்கடி முனுமுனுப்பாங்க சிரிச்சிட்டே.

நாத்தனார் 3 பேரு கல்யாணம், கொழுந்தனார் 3 பேரு கல்யாணம்னு ஆறு பேரு கல்யாணத்த அவங்க முன்ன நின்னு நடத்தி வெச்சிருக்காங்க. எவ்வளவோ நெருக்கடி, சிக்கலுங்க, சிரமங்க, வாதைங்க, வலிங்க நெறைஞ்சதா இருந்திருக்கும்னு யோசிக்கலாம். அப்படி, அது கூடவே ஓடியாடி தன்னோட ஓடல் ஒழைப்ப அந்த குடும்பத்துக்குனு குடுத்துருக்காங்க. கத்தி மேல நடக்குறாப் போல ஒறவுகள பாலன்ஸ் பண்ற வித்த. அம்மா எல்லாத்தையும் ஒரு சின்ன புன்சிரிப்பால கடந்து போவாங்க. போனாங்க. புத்தனா இருந்துடலாம். எல்லாத்தையும் தொறந்த தொறவியா இருந்துடலாம். எல்லா ஒறவுகளையும் ஏத்துக்கிட்டு தன்னோட ஆசைகள், விருப்பு வெறுப்புகளத் தொறந்துட்டு ஒரு கூட்டுக் குடும்பத் தலைவியா அம்மாவா இருக்குறதுதான் தொறவு. அம்மா அப்படியான குடும்பத் தொறவியாதான் இருந்தாங்க.

நாங்க நாலுபேரு. கொழுந்தனார் பிள்ளைங்கனு அவங்க 'குழந்தைகள் இல்லம்' ரொம்ப பெரிசா இருந்துச்சு. பேதமில்லாத அன்பு, பேதமில்லாத கரிசனம். எல்லோருக்கும் அள்ள அள்ளக் குறையாத அம்மாவா, அன்பா இருந்தாங்க. நாளுக்கு 3 வேள பந்தி வெச்சுக் கிளப்பணும். பரிமாறணும். ஒரு துண்டு மீன் அளவா எல்லோருக்கும் போகும். கூட்டும் அப்படித்தான். சண்டை சச்சரவில்லாம நிறைவா பந்தி கலையும். அதான் அம்மாவுக்கு வேணும். சோசலிசம், சோசலிசம்னு சொல்வாங்க. அம்மாவுக்கு அது எதுவும் தெரியாது. அது என்னான்னு அம்மா படிச்சதில்ல. ஆனா வாழ்ந்தாங்க. நடைமுறையா இருந்தாங்க.

அவ்வளவு பெரிய உழவுக் குடும்பத்தத் தன்னோட புன்சிரிப்பாலும், மவுனத்தாலும், பகையல்லா மனசாலும், ஒறவுகள்தான் மனுசங்கதான் முக்கியம்ங்குற உறுதியாலும், விட்டுக் கொடுப்பாலும் தன்னோட கண்ணீராலும் சின்னச்சின்ன விரிசல்களப் பூசி, பெரிய விரிசல்ங்க வராம கட்டிக்காத்தாங்க. தனக்கான

விருப்பங்க, ஆசைங்க, தேவைங்க எல்லாம் ஒட்டுமொத்தக் குடும்பத்தோடவையாதான் இருந்துச்சு. அவங்களுக்குன்னு தனிப்பட்ட ஆசைங்க, விருப்பங்க, தேவைங்க என்னானு அவங்களும் சொன்னதில்ல.. சொல்லவுமில்ல.. யாரும் கேட்டதுமில்ல, கேக்கவுமில்ல. எல்லோரும் ஒத்துமையா, இப்பப்போல எப்பவும் இருக்கணுன்னு சந்தோசமா எல்லோரும் ஒன்னு கூடியிருக்கும் போதும், சிரிச்சுப் பேசி சாப்பிடுறப்பவும், குடும்பத்துல நல்ல தேவை நடக்குறப்பவும் ஒரு பிரார்த்தன போல, மந்திரம் போல முணுமுணுப்பாங்க, வெளிலேயேயும் அப்படிச் சொல்வாங்க. இந்தக் காலத்துக்கு அதுவே ரொம்பப் பெரிய பிரார்த்தன, பேராச இல்லயா..

அம்மா ஆடு, மாடு, கோழி, வீட்டயே சுத்திட்டு திரியிற பூனைங்க நாய்களுக்கும் அம்மாவா இருந்தாங்க. மீன் சுத்தம் பன்றப்போ வளப்பு பூனைங்க எல்லாம் ரவுண்டு கட்டி ஒக்காந்துக்கும். அதுங்க பண்ற ரவுசு தாங்காது. அம்மா அதுங்க கூடெல்லாம் பேசிட்டே மீன தூக்கிப் போடுவாங்க இந்தா சின்னவனே.. இந்தா பெரியவனே.. ஏய் புள்ளதாச்சி ஒனக்கு இதும்பத்தாது.. என்ன செய்யுறது? இருக்குறது போவ மிஞ்சினாத்தானே ஒனக்குன்னும் போட முடியும்னு போடுவாங்க. நாய்களுக்கும், பூனைங்களுக்கும் அப்போ சண்ட வரும் யாருக்கு மீனு தல, வாலுன்னு. அதயும் சமாதானப்படுத்த மீனை பங்கு போட்டுக் குடுப்பாங்க.. வீட்ல உள்ளவங்களுக்குத்தான் பங்கு வெக்குறதுல தாவு தீருதுன்னா ஒங்களுக்குமுல்ல பஞ்சாயத்து வக்க வேண்டியிருக்கும்பாங்க.

மீனு கேட்டு தொண்ட கிழிய சத்தம் போடும் பூனைங்க, அழிச்சாட்டியமாக அம்மா கையத் தட்டிவிட்டுத் தூக்கிட்டு ஒடுங்க. சிலசமயம் அம்மா வெரலக் கடிச்சு வெச்சிடுங்க. ஆனா அதுக்காக அதுங்க கிட்ட கோவப்பட்டுக்க மாட்டாங்க. அப்படித்தான் பசு மாடுன்னா உசுரு. அடங்காத மாடும் அதுங்க மடியிலயேயும், தாவாயிலேயும் அவங்க கைபட்டா அடங்கிடுங்க. அப்படியே கறவைக்கு சொரந்து நிக்குங்க. அப்படி ஒரு லாவகம் அவங்க கைக்கு. சாலினு ஒரு கன்னுக்குட்டி. பெருசா வளந்து சாஞ்சும் அதுக்கு அம்மாவப் பாத்தா இன்னும் குட்டினு ஞாவகம். கழுத்துல ஒரஞ் சுவிட்டா அவ்வளவுதான் இடம், பொருள், ஏவல் பாக்காம திடீருன்னு அவங்க மடில விழுந்து படுத்துக்கும்.

பரம்பரையா வளத்த மாடு, கன்னுக்குட்டிய, மாட்டுபொங்க கழிச்சு கெடைக்கு அனுப்பி வைக்கிறப்போ கெடைகாரங்ககிட்ட, தூசு துரும்பு படாம பாத்துக்குங்க கோனாரேனு பெத்த மவ புகுந்த வீட்டுக்குப் போற கணக்கா கண்ணுகலங்கி, தொண்ட அடச்சுப் போயி நிப்பாங்க. அவுத்துட்டுப்போன மாட்டோட தாம்புகயிற பாத்து, பாத்து ரெண்டு, மூணு நாளுன்னு அழுதுட்டேயிருப்பாங்க. அப்படித்தான் புதுசா வாங்குன மாடு, கன்னுக்குட்டிய விட்டுட்டு தண்டவாளப் புல்ல மேயப்போன தாய் மாடு ரயிலுல அடிபட்டு செத்துப்போனப்போ எப்படி ஒன்னய வளக்கப்போறன்னு சொல்லி சொல்லி கன்னுக்குட்டிய கட்டிட்டு அழுதாங்க. ஒரு தடவ பசுமாடு பேறு எடுக்குறப்போ வயித்துக்குள்ளாவே அது குட்டி செத்துப்போச்சு. வயித்துக் குட்டியோட தாய்மாடு பட்ட வாதனையப் பாத்து நெஞ்சுல அடிச்சுட்டு கதறுனாங்க. அம்மாக்கு மனுசங்க, வாயில்லா சீவனுங்கன்னு பிரிச்சுப் பாக்கத் தெரியாது. கூடவே கூடாது. அவங்க ஆசையா வளத்த ஆடு நல்ல பாம்பு கடிச்சு செத்தப்போ அதோட ரெண்டு குட்டிங்களுக்கு புட்டிபாலு குடுத்தே வளத்தெடுத்தாங்க. ஒங்கள எப்படி பாலு வத்திப்போனப்போ வளத்தெடுத்தனோ அப்படித்தான் இதுங்களயும் வளத்தெடுக்கப்போறேன், நீங்க. வேற, இந்த குட்டிங்க வேற இல்லன்னுவாங்க. ஆடோ, மாடோ, கோழியோ வளக்குறதுக்கு மட்டும்தான். விக்கிறதுக்கோ, கறியாக்கிப்போடவோ கெடயாது. அதுங்கள நாயி, நரி, காட்டுப் பூனங்க அதுங்களா தூக்கிட்டுப் போனதான் உண்டு.

மீந்த பாலதான் வெளில குடுப்பாங்க. பாலுல தண்ணி கலக்குறது பாவம்னுவாங்க. பாலுக்கான காசு கணக்க வாங்குறவங்க, கொடுக்குறவங்க பாக்குறாப்போல வீட்டு கொல்லைச் சொவத்துல கரிகோடு இழுத்து வப்பாங்க. ஒனக்கு ஒடம்பு முடியல, முன்னப் போல ஆடு, மாடப் பாக்க முடியலன்னு முடிவு பண்ணி, ஆட்ட, மாட்டக் கொடுத்துடுவம்னு சொல்லி

பரம்பர மாடு ஒன்னில்லாம வித்தன்னிக்கு வீம்பாப் படுத்தவங்கதான். பின்னாடி வேறெதுக்கும் வெளில கிளம்பி வரல. அது இருக்கும் ஒரு முப்பது வருசம்.

தெருவுல உள்ள வீடுகள்ள தூக்கி எறியப்பட்ட பழந்துணியப் போல நைஞ்சு போன, பொறக்கணிக்கப்பட்ட கெழம் கட்டைகளுக்கும்' அம்மாதான் ஆதரவற்றோர் இல்லம். வீட்டுக்கு வந்துட்டா ஒரு வேள சாப்பாடோ, நெய்குருண அரிசியோ அம்மா கையாள அவங்களுக்குக் கெடச்சிடும். அவ்வளவு நம்பிக்கையோட வருவாங்க. அம்மாவும் அவங்கள ஒருபோதும் ஏமாத்தினதில்ல.. இப்போது போல நெகிழிப் பையெல்லம் அப்போ கெடயாது. முந்தான இல்லனா துண்டில் முடிஞ்சுகிட ஏந்தலா மரக்கால்ல எடுத்துவந்து போடுவாங்க. அதுல அரிசியோ, குருனையோ இருக்கும். வீட்டுப் பாத்திரம் இருந்தா அதுலயும் கொடுத்துவிடுவாங்க. பெரிய மண் சால்கள்ல சொந்தமா இருந்த வீட்டு அரவ மில்லுலேந்து வார அரிசி, குருனயெல்லாம் அம்மா கைவழியா கருணையா அட்சய பாத்திரமாப் பொங்கி வழியும். இன்னைக்கு அவங்க சடலத்தப் பாக்குற பலபேரோட கண்ணுல அடக்க முடியாத கண்ணுதண்ணியா அதப் பாக்க முடியுது. அவங்களோட கூப்பிய கைக்குள்ளாரே அம்மா இருந்தாங்க. ஆறுதல் சொல்லா, பொறக்கணிக்கப்பட்டவங்க வாழ்க்கையா, எரியாத வீட்டு அடுப்புக்களோட நம்பிக்கையா அவங்க இருந்தாங்க. அந்த நம்பிக்க அவங்க வீடுகளோட அடுப்ப அணையாம வச்சுருந்துச்சு. அள்ளக் கொறயாத குருணை சால்களில் அவை ரொம்பி வழிஞ்சிட்டுருந்துச்சு.

அம்மா கைபக்குவம்ங்குறது அம்மாவோட இருந்த பக்குவம்; குணம்; குணசீலம்; அன்பும், கரிசனமுமான பக்குவம். அம்மா ஸ்பெசல்னா அது கருவாட்டுக் கொழம்புதான். ஊரு ஒலகம் மணக்க மண்சட்டியில கொதிக்கும் கொழம்புக்கு வயிறு நெறஞ்சிருந்தாலும் கொல பசி எடுத்துடும். அம்மாவுக்கும் கருவாடுனா உசிரு. நம்ம நாக்கு ருசி எதுல நிக்குதோ அந்தப் பக்குவம்தான் நம்ம கையிலயும் வரும். இத்தனைக்கும் அளவான உப்பு, கொஞ்சம் பூண்டு, இதிலேயே அம்மா ருசி, நாக்கு ருசியா வந்துடும். வக வகயான கருவாடுன்னாலும் ருசியான கருவாடா மாத்துறது அம்மா கைபக்குவம்தான்னு ஊரு சொல்லும். வத்தக் கொழம்பும் அப்படித்தான். வத்தல்லதான் கொழம்பே கெடக்கும். அப்படி ஒரு கெட்டி. கார அல்வா இருந்தா எப்படி இருக்குமோ அப்படி. அந்த வத்தக் கொழம்ப, வத்தாத கொழம்பா மாத்துறது. எண்ணெய் கத்தரிக்கா, சுண்டக்கா வத்த, இல்ல.... அதுக்கு தோதா சுடுற அப்பளம்தான். அம்மா வைக்கிற வத்த கொழம்பு ருசியா இல்ல அவங்க கரிபடாம சுட்டு வைக்கிற அப்பளமானு பட்டிமண்டபமே வெக்கலாம். அடுப்பு வெந்தணலுன்னு சொல்வோமே அந்தத் தணலு எப்ப தங்கமா மின்னுதோ அப்ப அப்பளத்த அடுப்புக்குள்ள போட்டு சட்டு சட்டுனு எடுக்குற வித்த அம்மாவுக்கு மட்டும்தான் உண்டு. அப்படி போட்டு எடுக்குற பக்குவம் ஊரு வட்டாரத்துலயே கெடயாது. கொஞ்சமும் கருவாது, தேங்கா எண்ணெய்ல பொரிச்சு போட்டது போல கரி தட்டாம, நெருப்புல கரிஞ்சுபோகாம அப்படி இருக்கும். வாட்டுறதுக்கு கரண்டியோ, கிடுக்கியோல்லாம் வெச்சுக்குற பழக்கம் இல்ல. கை சூடு பொறுக்க தணல்ல போட்டு எடுப்பாங்க. தணல் கையெ சுடுறதுக்குள்ள அப்பளம் வெளில வந்துடும். அந்த மொற தங்குனுச்சுனா அப்பளமும் வராது, கையும் சூடுபட்டுடும். சூடு தணிய கைய ஊதிட்டே ஒரு கை அப்பளத்த உள்ள தள்ளும், இன்னொரு கை வெளிய எடுத்துப் போடும். வெண்ணெய் கடையுறப்பவும் அம்மா இதே பக்குவத்தோடதான் சுத்தி எடுப்பாங்க. மொற ஒன்னுதான். இது வெண்ண. அது அப்பளம். அம்மா கைபட்டா அது தனி ருசிதான். சித்தப்பா வீடு, பெரியப்பா வீடு, பக்கத்து வீடுனு அம்மாட்ட வந்து கேட்டு அப்பளம் சுட்டு எடுத்துட்டுப் போவாங்க. ஒரு கருகல் இருக்காது முறுகல் இருக்காது, கரிஞ்சு ஓட்டை விழுந்துருக்காது.

கடும் முன்பனி, பின்பனி காலத்துல நம்ம ஒறக்கத்த கலைக்கிறது புதுநெல்லு அவியுற வாசனதான். பெரிய மண்பானைகள்ல சுள்ளி, செத்த, செருவ அள்ளிப்போட்டு கல் அடுப்புங்கள்ல பெரிய மண் பானைகள வச்சு நெல்லு அவிப்பாங்க அம்மா. ரெண்டு ஆள் வடிச்சு எறக்குற பானைகள ஒத்த ஆளா வடிச்சு எறக்குவாங்க. கொழம்பு மட்டுமில்ல சோறும் மணக்குறதுக்கு அம்மா

நெல்ல பதமா வடிக்கிறது மட்டுமில்ல, அந்த ருசியும், மணமும் அம்மா முழுநெலா அளவுக்கு வைக்கோலு கலந்து தோசபோல தட்டுற சாண வறட்டிக்கும் அதுல பதிஞ்சு கெடக்குற அம்மாவோட கைரேகைக்கும் உண்டுன்னுதான் சொல்லனும்.

அன்புக்குனு எதிரி யாராச்சும் இருக்க முடியுமா... அப்படித்தான் அம்மாவுக்குனு ஒரு எதிரியும் கெடயாது. அக்கம் பக்கம்னு வேலி சண்ட, ஒறவு சண்ட எல்லாம் நமக்குத்தான். அம்மாவுக்கும், அவங்க அன்புக்கும் வேலின்னு ஒன்னே கெடயாது. என்னம்மா..அவங்க நம்ம கூட பேசுறதில்ல..நம்ம எடத்த அவங்க எடம்னு சொல்லி சண்ட போடுறாங்க அத கேட்டுட்டு அவங்க வீட்டு அம்மாகூட நம்மகிட்ட மல்லுக்கு வாறங்க அவங்க கூடயெல்லாம் நீ பேச்சுவார்த்த வச்சுகிறியே, நீயும் எங்க தாய்தானேன்னா..”ஒங்க சண்டய ஒங்க கூடயே வெச்சுக்குங்கப்பா.. பாத்தா முகத்த திருப்பிக்கிட்டு போற பழக்கம் எனக்கு கெடயாதும்பாங்க. நம்மளத்தான் அடங்கியிருங்கன்னு சொல்வாங்க. சண்டய யாரு ஆரம்பிச்சு வெச்சாங்க, நியாயம் யாருபக்கம் இருக்குன்னலாம் அவங்களுக்கு முக்கியமில்ல. நாங்க சண்டை போடக்கூடாது. அதான் முக்கியம்.

கொழந்தைங்க சண்ட போலத்தான் அவங்களுக்கு. கொஞ்ச நேரம்தான் அதெல்லாம் தாக்குப்புடிக்கும். எல்லாமே அவங்களுக்கு அன்பு சண்டதான். அப்படி ஒன்னு இருக்குறதே அம்மாட்டதான் கத்துக்கிட்டோம். அம்மா பேரே பாப்பாதான். அம்மா பேர மட்டும் காப்பாத்தி வெச்சுட்டுப் போகல அவங்க அன்பயும் தன்னோட கொழந்தமயயும்தான்.

அன்றைக்கெல்லாம் வீடுகளுக்கு ஆனந்தவிகடன். குமுதம், தினமணிகதிர்தான் பொஸ்தகமே. இதுல அம்மாவுக்கு புடிச்ச எழுத்தாளருங்க எழுதுன கதைங்கள படிச்சு அவங்க ஓப்படியாரு, நாத்தனாருக்கெல்லம் சொல்வாங்க. அப்போல்லாம் டி.வியோ, டிவி தொடர்கதைங்களோ ஏது? அம்மாதான் அவங்களுக்கு டி.வி; ஊரு ஒலக சன்னலு. சிவசங்கரி, ஜெயகாந்தன் எழுத்து ரொம்ப புடிக்கும். சில நேரங்களில் சில மனிதர்கள், கங்கை எங்கே போகிறாள். ஒரு காவிரியப் போல, கதைங்கள சினிமா கதை போல ஒரு தேர்ந்த கத சொல்லி போல சொல்வாங்க. சிவசங்கரி கதைங்கள்ல வார ஆண்கள் அவங்களுக்கு ரொம்ப புடிக்கும். அந்த ஆண்கள் பெண்களுக்கு புடிச்சவங்களா இருக்குறது காரணமா இருக்கலாம்.

சிவசங்கரியோட ஒரு மனிதனின் கதய விரும்பி வாசிச்சாங்க. பி.வி.ஆர். எழுதுற ஆடாத ஊஞ்சல், வாசந்தி எழுதி விகடன் இணைப்புகளில் தொடரா வந்த காதலெனும் நதியினிலே. அப்புறம் அந்த கதநாயகன் அரவிந்தாக்சனோட மென்மயான காதல் எல்லாம் புடிக்கும். அந்த நாப்பத்தியேழு நாட்கள் சிவசங்கரியோடது. அந்த கதைநாயகி வெளிநாட்டுல நம்பிப் போன கணவனாலே கைவிடப்பட்ட தவிப்ப கதயா சொல்வாங்க. அப்புறம் அந்த கனல்வீசும் நேரம், நெஞ்சினிலே ஒரு கனல் இது ஜெயலலிதா எழுதினது. இந்த கதைகள் தொடரா வரவரப் படிச்சுட்டு வந்து எல்லாருக்கும் கதயா சொல்வாங்க. பொஸ்தகங்கள்ல வர மணியம் செல்வம் ஓவியங்கள் ரொம்பப் புடிக்கும். மாயா ஓவியமும் அப்படித்தான். சில்பி வரைஞ்ச தினமணி கதிர் ஓவிங்கள தன்னோட இரும்பு பொட்டிக்குள்ளார மயிலிறகு போல பத்திரப்படுத்தி வெச்சிருந்தாங்க பொட்டிய தொறக்குறப்பல்லாம் பளிச்சுன்னு அந்த ஓவியங்க கண்ணுல படும். அம்மா சொன்ன கதைகள் பார்வைக்கு, செவிக்கு மங்கலான பழைய புகைப்படம் போல, அந்த தருணத்தோட ஒளிக்கீற்றுப் போல நினைவுக்கு வருது. டிரங்கு பெட்டியத் தொறக்குறாப்போல அதுக்குன்னு ஒரு வாசன இப்பவும் இருக்கத்தான் செய்யுது.

அம்மா சாமி பக்தியுள்ள நாத்திகர்னு சொன்னா கொழப்பமா இருக்கும். ஆனா அதான் மெய்யி. யாருக்கு ஒடம்பு முடியலனு தெரிஞ்சாலும் அது சொந்த ஒடம்புக்காரங்க கவல இல்ல.. எதுத்த வீடா..பக்கத்து வீடா தெரு கோடி முக்கமா எது, யாருன்னலாம் கெடயாது. சாமி படத்துட்ட நின்னு மஞ்சள் துணில ஒடன காசு முடிஞ்சு வெச்சுடுவாங்க எந்த கோவிலு, எந்த ஊருன்னலாம் அம்மா முனுமுனுக்குறதுல விழாது. யாராச்சும், இந்த கோவிலுக்குப் போறன்னு சொல்றப்பவோ இல்ல..அவங்களே போறதா இருந்தாவோ ஞாபகமா அந்தக் காச எடுத்துட்டுப் போய் கோவிலு உண்டியல்ல சேத்துடுவாங்க இல்ல, கொடுத்துவிட்டுருவாங்க.. சாமி

மாடத்துல காசுகள் மஞ்சத் துணி சுத்தி, நெறஞ்சு கெடக்கும்.

ஒடம்பு முடியாதவங்களுக்கு வேண்டிக்கிட, ஊரு ஒலகத்து சாமியெல்லாத்தையும் கொண்டுவந்து நிறுத்தி வெச்சு வேண்டிக் கிடுவாங்க. சொந்தம் சோலியன்னலாம் அந்த வேண்டுதல் பாக்காது. அந்த சாமியோட அருளு போல. "எந்த கொறயும் இல்லாம் காமாடு தலமாடு காப்பாத்துன்னுவாங்க. வேண்டுதல் பலிச்சா சாமிய கொண்டாடுறதும், பலிக்கலேன்னா திட்டித் தீக்குறதும் அவங்க போல கெடயாது. அவங்க கொண்டாட்டத்துல நெக்குருகி போறதும் அவங்க திட்டுல நொந்து போறதும் சாமிங்களுக்கே வாடிக்கைதான். அம்மா அவங்களுக்கா எதயும் கேக்கலியேங்குறதுல அந்த சாமிங்கள்லாம் சமாதனமாகிடும். அம்மா தனக்காவ எந்த சாமியையும் வெச்சுக்கிறதே இல்ல. அது மத்தவங்களுக்காக அம்மா வெச்சுக்கிற சாமி. மத்தவங்களுக்கு நோய் நொடி இல்லேனா சாமிக்கு வேண்டுதலும் இல்ல..திட்டுதலும் இல்ல. அப்புறம் ஏன் அம்மாவுக்கு சாமியும் இல்ல. முறைப்பாடும் இல்ல. அம்மாவுக்கு சாமிங்கிறது மத்தவங்களுக்கானது. தனக்கான சாமி ஏதும் இருக்குறதா அவங்களும் சொன்னதில்ல நாங்களும் கேட்டுக்கிட்டதில்ல.

குடும்ப மருத்துவர் திரு.இளங்கோ எம்.பி.பி.எஸ்.அவர்கள் சொன்னார். அம்மா பெரிய கூட்டுக் குடும்பத்துல இருந்து, தான் கஷ்டப்பட்டதா சொன்னதே கெடயாது. அத பெருமையாதான் சொல்வாங்கனு. ஒய்வே இல்லாதவங்களுக்கு கூட்டுக் குடும்பம் பிரிஞ்சப்போ அந்ததனிமைய அவங்களாலே கடைசி வரைக்கும் தாங்கிக்க முடியல. ஓய்வு தன்ன சீக்காளியா நெனைக்க வச்சுட்டு. அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு போறதும் மருத்துவர்கிட்ட தன்னோட பழைய வாழ்க்கய சொல்றதுமா ஆகிட்டு. அது ஆறுதலா அவங்களுக்கு இருந்தாலும் அவங்க வாழ்க்க அந்த காலத்துக்குள்ளாகவே ஒறஞ்சு போய்ட்டு. அப்பறம் அவங்க வாழந்ததெல்லாம் வாழ்க்கயே இல்ல. தன்னையே வருத்திகிட்டு தனக்குள்ளாவே ஒரு சிலுவய சொமக்க ஆரம்பிச்சுட்டாங்க. கடுமையான ஒழைப்பும், சிக்கலும் இருந்த கூட்டுக் குடும்பம் அவங்களுக்கு சிக்கலா தெரியல..ஆனா சிக்கலே இல்லாத தனிக் குடும்பம் அவங்களப் பொறுத்தவரைக்கும் சிக்கலா இருந்துச்சு. பரந்த அன்பு குறுகுன அன்பா போறத எந்த மனசால தாங்கிக்க முடியும்... அம்மாக்களாலே எப்படி முடியும். அன்புன்னா அம்மாதானே... அம்மாக்கள்தானே.!

அம்மா இருந்த அறையின் பொருளெல்லாம் எடுத்தாயிற்று. அம்மாவோட இறுதிக்காலம் அந்த அறையில அப்படியே ஒறஞ்சி கெடக்கு. எல்லாப் பொருளும் அம்மாவா இருக்கு.. அம்மா அம்மா ன்னு சொல்லுது. அம்மா இல்லாம அம்மான்னு சொல்ற பொருளுங்க மனச கலங்க அடிக்குது. அம்மா தன்னோட எல்லா பொருள்ளேயும் இருக்காங்க. அம்மா பொருளா இல்லாம இருக்காங்க. அவங்க விருப்பங்க, ஆசைங்க, தேடல்ங்க.. வெறுப்புங்க பொருட்களா அறையில உசிருல்லாத உசிராக் கெடக்கு. அம்மா இருக்காங்கன்னு அதுங்கதான் சொன்னுச்சு. அம்மா இல்லேனும் அதுங்கதான் இப்போ சொல்லுது.

அம்மா தனக்குன்னு வெச்சுருந்தது கொஞ்சம் கவரிங் வளையல்ங்க. அவங்களுக்கு புடிச்ச அரக்குக் கலர் பொடவ. செலது பச்சையில, செலது கருநீலம். செலது வேற சில நெறத்துல அழகா மடிச்சு இருக்குது. ட்ரைக்கானு கேட்டு வாங்கி சாப்பிடுற மாத்திரை கொஞ்சம். ஒடம்பு வலிக்குன்னு ஒரு சில தைலம், தேவைப்பட்டா மட்டும் எடுத்து கூப்பிடுறதுக்கு பட்டன் கைபேசி, ஒரு முகம் பாக்குற கண்ணாடி, சில்வர் தண்ணி பாட்டிலு, ஒரு சில நகக்கட மணி பர்ஸ்.. அதுல சிறுக சேமிச்சு வச்சுருந்த பத்தாயிரம் சொச்சம். இதான் அம்மாவோட கடைசி ஒலகம். பொற உலகம் விட்டுப்போக இதவிட வேறொன்னும் தேவயில்லனு நெனச்சிருக்கணும். விட்டுப் போகாம இருக்க அன்பு போதுமின்னு நெனச்சிருக்கணும். ஆத்துல எறங்கி முங்கிப் போறவங்க கையில என்னா இருக்கும்.. அப்படி சாவு இருக்கணும்னு அம்மா நெனச்சிருக்கணும். விரும்பிருக்கணும். எதிர் கொண்டிருக்கணும். அதுவும் சரிதான். எளியவங்க. எளிமையான சாவத்தானே ஆசப்பட்டிருக்க முடியும். அம்மா காலத்த ஏமாத்தினதில்ல. காலமும் அப்படித்தான் போல. ●

ஆய்தல்

# கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்களின் "மகள் இருந்த வீடு" - ஒரு பார்வை

## கோ. பாரதிமோகன்

"பொன் வைக்கிற இடத்தில்
பூவை வைக்கலாம்'' என்பார்கள்.

இந்தத் தர்க்கவியலுக்கு அது பொருந்தாத மொழி.

ஏனெனில்,

பொன் செயற்கையானது.
பூ இயற்கையானது.
பெண் இயற்கையானவள்;
ஈடு இணையற்றவள்!

உலகாய மதிப்பீட்டின் மனித சட்டகங்களுக்குள் அவள் அடைபட மாட்டாள்.

உறவுகள் எதுவாகினும்

பெண்ணை தாய் என்றே விளிக்கிறது தமிழ்.

பெண்ணே மகளென்றும்
மகளே பெண்ணென்றும்

சொல்மருவி நிற்கிறபோதும் மாறாத பொருண்மை மிக்கவள் அவள்!

**"பெண்ணென்றால்
பதைபதைக்கிறாயே மனமே
பெண்ணென்றால் யார்?
பெற்றுக்கொண்டால் மகள்
பெறாதவரை பிரகாசமான இருள்"**

என்று தன் கவிதையொன்றில்

பெண்மீதான ஒளிச் சுடர்த்துகிறார்,

கவிஞர் பிரான்சிஸ் கிருபா.

உழலும் இந்த உலகின் உயிர்களில் நிலவுயிரி நீருயிரி என இரண்டு வகை உண்டு.

ஒன்று நிலவாழ் உயிரி;

மற்றொன்று நீர்வாழ் உயிரி.

அது உருப்பெற இயலாத சூரியனிலும்

அரிதாய் நின்று சுழல்வதாய்

தேறிய அறிவியல் தோராயமாய்ச் செப்புகிறது.

நீரிலும் நிலத்திலும் வாழும் சில அபூர்வ உயிர்களைப்போல், பெண் இரண்டு வாழிடங்களைக் கொண்டவள்.

அவவற்றைப் 'பிறந்த வீடு புகுந்த வீடு' எனப் பெண்ணை ஓர் உடைமை என கைக்கொள்ளும் ஆதிக்க சமூகம் வகுத்து வைத்திருக்கிறது.

திருமணத்திற்குப் பிறகு பெண் புகுந்தவீட்டிற்கு 'உயிர்ப்பெயர்வ'தென்பது, பெருவாரியான உலகநாடுகளில் இன்னமும் வெளுக்காதக் கிழக்காய் வ(பு)ழக்கத்தில் உள்ளது.

பெற்ற மகளை திருமணத்திற்குப்பின்

பிறந்த வீட்டிலிருந்து புகுந்தவீட்டிற்கு வழியனுப்பி வைத்துவிட்டு வலிமிகுத் துயருறும் தந்தையை, தன் காதல் காவியமான 'முறிந்த சிறகுகள்' நூலில் வடித்துக் காட்டியிருப்பார், லெபனானியக் கவிஞர் கலீல் ஜிப்ரான்.

உலகெங்கிலும் உள்ள கவிஞர்களின் உணர்வு ஒன்றாகத்தான் இருக்கிற தென்று கவிஞர் பழநிபாரதியின் கவிதை நூலொன்றுக்கு தான் எழுதியிருக்கும் அணிந்துரையில் மேற்கோளிட்டுக் கூறியிருப்பார் புலம்பெயர் எழுத்தாளர், அ. முத்துலிங்கம் அவர்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் தமிழ் நிலத்திலிருந்து, மணம் முடித்தபின் மகளைப் பிரிவுற நேர்ந்தத் தந்தையின் கண்ணீர்துளிகளில் 'மகள் மஹால்' ஆக எழுப்பி நிற்கிறது, மகளைப் பெறாமலுமிருக்கிற ஏக்கத்தில் திளைக்கும் அனைத்துத் தந்தைகளுக்குமான

கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்களின்

"மகள் இருந்த வீடு" கவிதைநூல்.

"உன் பொருட்டு
ஒலித்து அடங்கிய
கெட்டி மேளத்திற்குப் பிறகு..."

*என மகளின் பிரிவை வெறுமையாக, ஆற்றாமையாக, இயலாமையாக அத்தனைக் கவிதைகளிலும் எழுதித் தீர்க்கும் கவிஞரின் கண்களின் ஈரம், கவிதைநூலை வாசிக்கிற எல்லோரையும் பெற்றோராக்கி இதயத்தில் பசைகொள்கிறது; பச்சையங்கட்டுகிறது.*

*சாதாரணமாக மகளைப்பிரிந்த தத்தையின் ஆற்றாமைப் பிதற்றலாக மட்டு மில்லாமல் மகளை ஒரு தாவரமாய் பாவிக்கிற தந்தை,*

"பெரும் பொருட்செலவில்
இறுநூறு
கிலோமீட்டருக்கு அப்பால்
நாங்கள் உன்னை
நட்டது
புதிய குழியிலா?
புதை குழியிலா?"

*என்று அச்சவினா எழுப்புகிறபோது*

*பெண்ணின் சுயவிருப்பம், உரிமை, சுதந்திரம் என்பனவற்றையெல்லாம்*

*கேள்விகளேதுமற்று பலிகொள்ளக் கொடுத்துவிட்ட மனிதக் குற்றவுணர்வின் தார்மீகப் பதற்றம் மனசாட்சியை உலுக்குகிறது.*

*தாய்வழிச் சமூகமாய் தலைமையித்து பிறகு ஆதிக்கப் பிடிக்குள் ஒடுக்கப்பட்ட பெண்ணின் இருத்தல் என்பதே ஒரு வாழ்வியல் கனவாகிவிட்டது.*

*இந்நிலையில் அவளுடையதான விருப்பம் என்பதெல்லாம் அவளின் உறங்காத கண்களுள் திரையிடப்பட்டு கலையும் கனவாக விரிந்தடக்குகிறதாகவே உள்ளது.*

*அவளுக்கான சின்னஞ்சிறு விருப்பமும் தேவையுங்கூட ஒரு கனவாகவும் அவற்றை அடைவதென்பது ஒரு லட்சியமாகவும் ஆகியிப்பதை*

*முட்டிமோதி அவள் வென்றே வந்திருக்கிறாள்.*

"கனவு காணத்
தெரிந்திருந்த உனக்கு
அவற்றை அடைய
கற்றுக்கொள்ளவும் தெரிந்திருந்தது

ஒவ்வொரு கனவுக்கும்
முனைந்து நீ
முட்டி மோதி முறைத்துக் காட்டினாய்

பின்னர் உனக்கு தோ்ந்த அந்த
ஒன்பது பத்தரைக்குப் பிறகு
நீ கைவிட்ட கனவுகளின்
அருங்காட்சியகம் போலாகிவிட்டது
வீடு"

*என்கிற கவிஞரின் கூற்று, அவளின் கலைக்கப்பட்ட கனவின் அதிகாரமிக்க ஒப்புதல் வாக்குமூலமாய்த் தெறிக்கிறது.*

*மணம் முடித்தனுப்பிவைத்த மகளிடம் நடந்துமுடிந்த நிகழ்வு குறித்து இப்படியானதொரு ஒரு மனக்குமுறலை முன் வைக்கிறார், கவிஞர்:*

"உனது திருமணப் பந்திகளில்
வாரி வாரி வைத்தார்கள்
விருந்தளிக்கத் தெரியாதவர்கள்.

பரிமாறப் பட்டதையெல்லாம்
பாழடித்தார்கள்
உணவறிந்து
உண்ணத்தெரியாதவர்கள்

பாதி இலையில்
உணவுகளைக் குவித்து
மீதி இலையால் மூடியவர்களுக்கு
வட்டிக்கு வாங்கிய - என்
வலி தெரியவில்லை மகளே"

*என்கிற கூற்றினைத் தனியொரு மனிதனின் பொருளாதாரப் பின்னணியாய்ச் சுருக்கிவிட இயலாது.*

*அது, இதுநாள் வரையிலான தேசத்தின் பொறுப்புணர்வற்றதும் அலட்சியமுமான இருபுறமும் புரிந்துணர்வில்லாத அரசின் மக்களின் மனோநிலைப் பாடுதனை குறுக்குவெட்டுத் தோற்ற வரிகளில் விளாசிச் செல்வதாக உணரமுடிகின்றது.*

*உலகில் மிக உயர்ந்தவைகளில் கேள்வியும் ஒன்று.*

ஏன் - எப்படி எதற்காக என்கிற கேள்வி தான் அடுத்தக்கட்டத்திற்கு நம்மை நகர்த்து கின்ற நெம்புகோலாக இருக்கின்றது.

கேட்கப்படுவதாலேயே எல்லா கேள்விகளும் மதிப்புடையவை அல்ல.

அவற்றில் சில அபத்தமானவையும் கூட.

கேட்கக்கூடாத இடத்தில் கேட்கக் கூடாதக் கேள்விகளை மனித நாக்கு நீட்டி முழக்கி விடுகிறது.

அப்படியானதொரு கேள்வி கவிஞரைத் துளைத்தெடுக்க...

இந்தச் 'சிறுநாக்'கின் கேள்வி குறித்து கவிஞர் செப்புகிறார் இப்படி:

**"எப்போது கல்யாண சாப்பாடென்று**
**எப்போதும்**
**உன்னைக்கேட்கிற எதிர்வீட்டுக்காரர்**
**அதே கேள்வியை**
**உன்னிடம் கேட்குமாறு**
**அருகிலிருப்போரிடம்**
**அறிவுறுத்துவார்**
**வலியுறுத்துவார்'**

**ஒரு முகூர்த்த நாளில்**
**உன்பொருட்டு அமைந்த**
**உணவுப்பந்தியில்**
**அவரது ஏக்கம் தீர்ந்து**
**ஏப்பமாக வெளிவந்தது மகளே**

**பிறகு தனது**
**அந்த ஒற்றைக் கேள்வியைத்**
**தொடுக்க ஆளின்றி**
**அல்லாடிக்கொண்டிருந்தார் அவர்.**
**தற்போது**
**அண்மையில் பருவமெய்திய**
**பிள்ளையிடம்**
**படிப்படியாக நெருங்கிக்**
**கொண்டிருக்கிறது**
**அவரது அந்தக் கேள்வி?**

என்று முடித்து பதிலிறுத்து வைக்கிறார்,

அந்தக் கேள்வியை.

இந்தக் கேள்வி மகளைப்பெற்ற தனியொரு தந்தையிடம் கேட்கப்பட்ட கேள்வி இல்லை.

மனிதகுலப் பெண்களின் வசம் ஓங்கப்பட்டிருக்கிற அபத்தச் சவுக்கின் நீண்ட நாக்கு.

இதற்கு கோபமிகு மாண்புமிகு மகள்களே பதில்சொல்லக் கடமைப் பெற்றவர்.

**"காற்று குறைந்திருக்கும்**
**உனது கால்பந்தில் முகம் புதைத்து**
**கண்துடைத்துக் கொள்கிறாள்**
**அம்மா"**

என்று தொகுப்பின் ஒரு கவிதையை முடித்திருக்கிறார்,

கவிஞர் ஜெயபாஸ்கரன்.

**உண்மையில் மகள் எனும் பெண் இன்றி**
**காற்று குறைந்திருப்பதும்**
**காலாவதியாகப் போகவிருப்பதும்**
**வெறும்**
**கால்பந்து மட்டும்தானா?**

என்கிற கேள்வி

மனிதத் தோள்களைத் தொற்றியபடி வலுக்கூட்டி இறுக்கிகொண்டே இருக்கிறது.

**பதிலிறுக்கவோ சுமையிறக்கவோ**
**கேள்வியைத் எதிர்கொள்ளும் தோள்கள்**
**முன்வருமா தெரியவில்லை...**

மகளின் பிரிவின்பொருட்டுத் துயருறும் ஒரு தந்தையின் தவிப்புமிக்க எழுத்து இதுவென்று குறுக்கிவிட இயலாது, கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்களின் இந்த மகள் இருந்த வீட்டை.

இது ஒரு கட்டுடைப்புக்காக ஏங்கும் மனித ஆன்மாவின் விடுதலை ஏக்கமிகுத் தவிப்பு என்றால் அது மிகை இல்லை.




*மகள் இருந்த வீடு*
*(கவிதைகள்)*
*ஆசிரியர்:*
*ஜெயபஸ்கரன்*
*வழுதி வெளியீட்டகம்*
*முதல் பதிப்பு;*
*செப்டம்பர் 2024*
*விலை; ரூ.200*
*தொடர்புக்கு:*
*94445 56925*

# தங்கேஸ்வரன் கவிதைகள்

## மனிதர்களெனும் நாம்

முழுக்கோப்பையின்
ஒரு மிடறை உனதன்பிற்காகப்
பருகினேன்
ஆஹா அந்த
கருந்திராட்சை உதடுகள்
வாழ்க!
விரைந்தேகும் ஓவியன் காலதேவன்
ஒவ்வொரு நாளும் நமது வாழ்வை
சித்திரமாக தீட்டிக் கொண்டேதான்
செல்கிறான்
வளம் கொழித்த இளமை
உன்னிடமிருந்து விடைபெற்றுச்
சென்று விட்டது
முதுமை ஒரு கொசுவலையைப் போல
உன் மீது கவிழ்ந்திருக்கிறது

கற்சிலை போல் விம்மியிருந்த
மதர்த்த மார்பு
தொய்ந்து ஊஞ்சலாட
கருங்குழற்கற்றை
தும்பைப்பூ போல
வெளுத்து கிடக்க
தூரத்தில் நடந்து வருவது நீ தானா ?

நானோ கேள்விக்குறியை
முதுகில் சுமந்தபடி
கருவறையின் குழந்தை போல
குறுகியபடியே போய் கொண்டிருக்கிறேன்

நம் உடலிருந்து மனது
தனியாக விலகிச் சென்று
முன்னே நடந்து கொண்டிருக்கிறது

இப்படித்தான்
பழையன கழிந்து
புதியன புகும்
இந்தப் பைத்தியகார உலகத்திற்குள்
சிற்றெறும்புகள் போல
ஊர்ந்து சென்று கொண்டிருக்கிறோம்
மனிதர்களென்னும் நாம்

## முத்தமிடல்

முற்றிலும் காமமற்று
உச்சி முகர்ந்து
நீ தந்த ஒரு முத்தமிடல்
இன்று இரவு முழுவதும்
ஒரு குழந்தைதையாக்கியிருக்கிறது
என்னை

## பாதிக் கனவு

பாதிக் கனவைத் திறந்து
கண்களைத் திறந்தால்
நீ தொலைகின்றாய்
கண்களை மூடினால்
நான் தொலைகிறேன்
ஒருவரில் ஒருவர் தொலைந்து விடும்
இந்த தீராத விளையாட்டில்
இருவரையும் ஒரு சேரக் காணப்
பாதி கனவைத் திறந்து கொண்டு
நான் வெளியே வந்திருக்கிறேன்
அன்பே...





## நட்சத்திர மனது

ஒரு நட்சத்திரம் தான்
முதலில் கண்ணில் பட்டது
பிறகு நோக்க நோக்க
இந்த வானம் என்பது
எண்ணற்ற நட்சத்திரங்களால்
உருவாக்கப்பட்டது என
அறிந்து கொண்டேன்

ஆனால் துளியூண்டு மனதுக்கு
அத்தனை நட்சத்திரங்களையும்
கூழாங்கற்களாகப் பொறுக்கி
எடுத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று
அத்தனை ஆசை

அதே நேரம் எந்தத் துளியூண்டு மனது
இந்த பேராசைக்கார மனதை
ஒரு சின்னஞ் சிறிய கல் துளியாக
இதயத்தில் ஏந்திக் கொள்ள
ஆசைபட்டுக் கொண்டிருக்கிறதோ
யார் கண்டது?

## வாழ்க்கை என்றொரு


கடவுளே!
இந்த வாழ்க்கையை
இதயத்தில் ஏந்திக்கொள்வது இருக்கட்டும்
யார் யார் இதை சில்லறைக் காசுகள் போல
சட்டைப் பையில் போட்டுக் கொண்டு
திரிகிறார்களோ யார் கண்டது?

யார் இதை சிகரெட் துண்டைப் போல
புகைத்துக் கொண்டு அலைகிறார்களோ?
யார் மதுப் புட்டியைத் தீர்ப்பதற்கு
ஊறுகாயாகத் தொட்டுக் கொள்கிறார்களோ?
யார் உடல் இச்சையைத் தீர்ப்பதற்கு
இதை மாத்திரையாகப்
பயன்படுத்துகிறார்களோ?

யார் தன் பால் ஈர்ப்புக்கு
இதை ஒரு சமிஞ்ஞையாக
அழைப்பு விடுக்கிறார்களோ?

யார் பிணம் புதைக்கும் நேரத்தில்
இதை வாய்க்கரிசியாய்ப்
பயன்படுத்துகிறார்களோ?

யார் பச்சை களிமண்ணைப் போல
இதை நீரில் கரைத்து விட்டு
நதியை உற்றுப் பார்த்துக்
கொண்டேயிருக்கிறார்களோ
யார் கண்டது?



சிறுகதை

# மம்புட்டி வைத்தியர்

## த.ரெ.தமிழ்மணி


கமலாபுரத்தில் வந்து இறங்குவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. நேரம் 6.00 மணி இருக்கும். இருட்டத் தொடங்கிவிட்டது தோள்பட்டையில் மகனைச் சாய்த்து வைத்துக்கொண்டு அவன் கீழே விழுந்து விடாதபடி இடுப்பை இடக்கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு நடந்தாள். அவனது கால்கள் இரண்டும் சூம்பிப்போய்த் தொங்கின. பிறந்தபோது நன்றாகத்தான் இருந்தான். மூன்று வயது இருக்கும். அப்போது நடையில் சிறிய தடுமாற்றம். தரையில் ஓடினால் மேடு பள்ளம் தெரியாமல் விழுந்து விடுவான். சமதளமாக உள்ள வீட்டுத் தரையில் நடந்தால் கூட ஏதேனும் போர்வையோ சாக்கோ தட்டுப்பட்டால் குப்புற விழுந்து விடுவான்.

ஏறாத கோயிலும் இல்லை பார்க்காத மருத்துவமும் இல்லை.

''இதுக்கு மயோபதின்னு பேரு குணப்படுத்த முடியாது ஆனா சப்போர்ட் மெடிசன் சாப்பிட்டாகணும்'' சொல்லி வைத்தது போல எல்லா மருத்துவர்களும் ஒரே குரலில் இதைத்தான் சொன்னார்கள். குணப்படுத்த முடியாத நோய் என்று தெரிந்திருந்தும் எதோதோ மருந்து எழுதிக் கொடுத்தார்கள் துணைக் கருவி, உடற்பயிற்சி கருவி வாங்கச் சொன்னார்கள் கணவன் இறந்ததற்காக அரசாங்கம் கொடுத்த 10 இலட்சமும் பஞ்சாய்ப் பறந்தது. எஞ்சியவை ஒரு கூரைக் குடிசையும் சில ஆட்டுக்குட்டிகளும் கொஞ்சம் கோழிகளுமே. வருமானத்திற்கான வழி எல்லாம் குறைந்த போது, கடைசியாகக் கிடைத்தவர் இந்த மம்புட்டி வைத்தியர்.

“தம்பி பசிக்குதாடா? இங்க ஏதாவது வாங்கி தரட்டா?”

“இல்லம்மா ஒன்னால தூக்க முடியலன்னா என்ன செத்த அந்த கட்ட



மேல உட்காரவய்யி எவ்வளவு நேரந்தான் நீயும் கஷ்டப்படுவ?

பிள்ளையின் அன்பை உணர்ந்து நெக்குருகினாள். இதுபோல பலமுறை அவன் பேசியிருந்தாலும் ஒவ்வொரு முறையும் அவன் இப்படிப் பேசும்போது இவளுக்குள் புதுத்தெம்பு பிறக்கும். கணவனின் உயிரைக் கள்ளச்சாராயம் குடித்தது. அதற்குப் பிறகான காலங்களில், மகனின் இத்தகைய அன்பூறிய சொற்கள் மட்டுமே ஒரே ஆறுதல்.

‘நேரம் ஆகிவிட்டால் கூட்டம் கூடிவிடும்’ என்ற நினைப்பு வரவே அவனைத் தூக்கிக் கொண்டு விடுவிடுவென்று நடந்தாள். குளிரில் நடுங்கிய சாலை ஒரு நோயாளியைப் போல் இருளைப் போர்த்திக் கொண்டது. ஆற்றங்கரைக் கட்டையில் அமர்ந்து தண்ணியடித்துக் கொண்டிருந்தவர்கள் கடந்து போகும் அவளைப் பாவமாகப் பார்த்தனர். ஆங்காங்கே நாய் குரைப்பதும் ஊளையிடுவதையும் தவிர மற்றபடி தனிமையே அவளுக்குத் துணையாக நடந்தது.

அரைமணி நேர நடையில் நொச்சிக்குடி வந்து சேர்ந்தது. இடப்புற தெருவுக்குள் இறங்கி நடந்தாள். இதுவரை நிலவிய இருளும் தனிமையும் இங்கு இல்லை.

முனைவீட்டு வாசலில் ஆடுகள் படுத்துக் கிடந்தன. அவற்றிற்குத் தொந்தரவு தராமலும் புழுக்கையை மிதித்து விடாமலும் இடுக்கில் புகுந்து நகர்ந்தாள். இவற்றைப் பார்த்தவுடன் தனது ஆடுகள் நினைவுக்கு வந்தன.

'இது மாதிரி வெளிச்சமாகவும் நடமாட்டமாகவும் இருந்தா ஆடுவள கட்ட வேண்டியது இல்ல நாய் நரிக்கி பயப்பட வேண்டியதுமில்ல'

'சீக்கிரம் பாத்துட்டா நல்லா இருக்கும் நேரத்தோட வீடு போய் சேர்ந்திடலாம்'

வைத்தியர் வீட்டை அண்டிய போது வாசல் நிறைய வண்டிகள், திண்ணை நிறைய கூட்டம். அவளுக்கு முகம் செத்துப் போனது. வெளித்திண்ணையில் பத்துப்பதினைந்துபேர் உட்கார்ந்திருந்தனர். அதில் ஒருவர் சக்கரநாற்காலியில். அவர்களிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்து தனக்கு முன்னே 5 பேர் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். மற்றவர்கள் எல்லாம் துணைக்கு வந்தவர்கள் என்பதை எண்ணி சற்றே ஆறுதல் அடைந்தாள்.

வரிசைப்படிதான் வைத்தியரைப் பார்க்க முடியும் இடையில் போனால் அவ்வளவுதான். அவர் ஒன்றும் சொல்ல மாட்டார் காத்திருக்கும் நோயாளிகள் சண்டைக்கு வந்து விடுவார்கள். மெதுவாக உள்திண்ணை திரைச்சீலையை விலக்கிவிட்டு எட்டிப் பார்த்தாள். உள்ளே மருத்துவம் நடந்து கொண்டிருந்தது. வைத்தியர் காவிவேட்டி கட்டிச் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தார் மேலே ஒரு துண்டு மட்டும் போட்டிருந்தார் அறுபதை நெருங்கி விட்டாலும் ஒரு நரைதிரை இல்லை முடியை வழித்துச் சீவி புறடியில் சிண்டு போலத் தொங்கவிட்டிருந்தார்.

எதிரே ஒரு முதியவர் குப்புறப் படுத்துக் கிடந்தார். வழக்கமாக வருகிறவர்தான் ஓய்வு பெற்ற காவல் அதிகாரி, அவர் தண்டுவடத்தில் எண்ணையைத் தடவி நீவி விட்டுக் கொண்டிருந்தார் வைத்தியர். இதுதான் சமயம் என்று நினைத்தவள் பிள்ளையைப் படியில் உட்கார வைத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

வைத்தியரையா எனக்கு கடைசி வண்டி பத்து மணிக்கு அதுக்குள்ள வைத்தியம் பாத்தா வீட்டுக்கு போயிடுவேன் ஆடுவொளயெல்லாம் கட்டாம வேற வந்துட்டேன். கொஞ்சம் உதவி பண்ணுங்கையா கெஞ்சியவளை நிமிர்ந்து பார்த்தார்.

''செத்த உக்காரும்மா கூப்பிடுறேன்'' என்றவாறே படுத்திருந்தவரின் பின்னங் கால்களில் எண்ணெயைத் தடவினார்.

'இனிமேஇவரிடம்பேசமுடியாது.இவரா கூப்பிட்டாதான்,' நிலைகொள்ளாமல் தவித்தாள்.

கால் நரம்புகளைத் தடவியபடி கைகளை நகர்த்தியவர் குதிகால் நரம்பை அடையாளமிட்டுத் தொட்டார். மண்வெட்டி எடுத்து, அதன் இழையை அடையாளமிட்ட இடத்தில் வைத்துக் காம்பைத் தூக்கினார், அவ்வளவுதான் நோயாளியின் அலறல் சத்தம் காதைப் பிளந்தது.

"கர்த்தரே வலிய பொறுத்துக்க அருளும் அப்பா!" என்பதில் தொடங்கி "ஐயோ அம்மா வலிக்குதே," என அதிகரித்தது.

"மூச்ச இழுத்து விடுங்க," என்றவுடன் அழுகையை நிறுத்திவிட்டு மூச்சை இழுத்து இழுத்து விட்டார். இவ்விதம் மூன்று முறை வலக்காலிலும் மூன்று முறை இடக்காலிலும் செய்த பின் மண்வெட்டியால் தரையிலும் மூன்றுமுறை வெறுங்கொத்து கொத்தினார். நோயாளி அழுகையை நிறுத்தி எழுந்து உட்கார்ந்தார் கைகால் விரல்களில் நெட்டி முறித்த பின், பச்சை மருந்தைத் தடவி கட்டு கட்டத் தொடங்கினார். இப்போது நோயாளியிடம் அழுகை இல்லை; தெளிந்திருந்தார்.

முன்னக்கி இப்ப தேவலாங்கையா. கம்பு ஊனாம நடக்க முடியுது. ஆனா உழுந்துருவோம்னு பயமா இருக்கு".

"பயப்படாதீங்க துணைக்கு ஆள வச்சிக்கிட்டு நடங்க, போகப் போகச் சரியாயிடும்'' தெம்பூட்டினார். அவர் எழுந்தவுடன் அடுத்தவர் விடுவிடுவென வந்து சட்டையைக் கழற்றிக் குப்புறபடுத்துக் கொண்டார். மருத்துவம் தொடர்ந்தது.

கட்டு கட்டினால் 400. மண்வெட்டி வைத்தியம் மட்டும் என்றால் 200. ஆனால் கைநீட்டிப் பணத்தை வாங்க மாட்டார். மருந்துப்பெட்டியில்தான் போட வேண்டும். அதுவும் கட்டாயம் இல்லை. சிலர் கைக்குக் கிடைத்ததைப் போட்டு விட்டுப் போவார்கள், மண்வெட்டியை மட்டும் வைத்து மருத்துவம் செய்வதில்லை. சில நேரங்களில் பித்தளைத் தாம்பாளத்தையும் பயன்படுத்துவார்: அது இன்னும் கடுமையாக வலிக்கும்.

ஒவ்வொருத்தரையும் கவனமாகப் பார்த்து பொறுமையாக வைத்தியம் செய்து கொண்டிருந்தார். கடிகார முட்களோ வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அப்பாடா! அப்படி இப்படி என்று இவள்முறை வரும் நேரம் மகனை உள்ளே தூக்கிச் சென்று மேல்சட்டையைக் கழற்றினாள். ‘‘குளுருதும்மா” என்று முனகினான். “செத்த நேரந்தான்” என்றவள் எடுத்து வந்திருந்த கம்பளியைப் போர்த்தி விட்டாள். மின்விசிறி வேறு வேகமாகச் சுழன்று குளிரள்ளி அடித்தது. சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை பார்த்தவள் அதிர்ந்தாள், மணி 11.

‘இனிமே ஊட்டுக்கு போக முடியாது: இந்த ராத்திரிய எப்படி கழிக்கிறதுன்னு தெரியல’ கவலைக் கோடுகள் முகத்தில் படர்ந்தன.

இவளுக்கு முன்னதாக வந்திருந்த நோயாளிக்கு மருத்துவம் முடிந்தது. எண்ணெயில் வழுக்கிக் கொண்டே எழுந்தார் வைத்தியர் தமது குடுமியை இழுத்து விட்டுக் கொண்டே இவளைப் பார்த்து, புள்ளைய தூக்கிக்கிட்டு வாம்மா!” என்றார்.

அவளுக்கு வெறுப்பாக இருந்தது. ‘கொஞ்சம் முன்னாடி புள்ளைக்கு வைத்தியம் பார்த்து இருந்தா இந்நேரம் வீட்டுக்கு போய் இருக்கலாம். என்ன செய்வது விதி விட்ட வழி...’ தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

தரையில் மீது விரிக்கப்பட்டிருந்த பதாகை மேல் அவனைக் குப்புற படுக்க வைத்தாள். வைத்தியரும் தனக்கு வாகாக அவனைப் படுக்க வைப்பதில் ஒத்தாசையாக இருந்தார் நோயாளியின் தன்மை தெரியாமல் இப்படி உதவி செய்ய மாட்டார். துணைக்கு வந்தவர்கள் ஒழுங்கு செய்யும் வரை கண்ணை மூடி அமைதியாக உட்கார்ந்து இருப்பார் இச்சிறுவனை முன்பே அறிந்ததால் கூடுதல் கவனத்துடன் உதவி புரிந்தார்.

கருப்பு நிறத்தில் ஒரு எண்ணெயையும் பச்சை நிறத்தில் ஒரு எண்ணெயையும் முதுகில் ஊற்றி கைகால் முழுதும் தேய்த்துப் பிடித்து விட்டார். தண்டுவடத்தின் ஒவ்வொரு எலும்பையும் அழுத்தினார். குதிகால் நரம்பைத் தேடி மண்வெட்டி இழையை எடுத்து வைத்து அழுத்தியதும் கத்தத் தொடங்கினான்.

“எம்மா வலிக்குதும்மா எடுக்கச் சொல்லுங்கம்மா”

அவள் கண்ணில் இருந்து கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது. அந்த பிஞ்சுக் குரல் வெளியே காத்திருந்தவர்களின் நெஞ்சைப் பிசைந்தது. கடவுளுக்கு கண்ணே கிடையாதோ? நாமதான் இப்படி அல்லாடுறோம்னா இந்த சின்னக் குழந்த என்ன பாவம் பண்ணுச்சு?” என்று ஆதங்கத்துடன் பேசிக்கொண்டனர்.

சில மணித்துளிகளுக்குப் பின் அழுகை ஓய்ந்தது தாம் அரைத்து வைத்திருந்த பச்சை மருந்தை அவன் முதுகில் தடவிக் கட்டுபோட்டார் மருந்து பெட்டியில் நானூறு ரூபாயை எடுத்து வைத்தாள். வேறுபணம் அவளிடம் இல்லாததை வைத்தியர் கவனித்தார். அவனைத் தூக்கிக் கொண்டே“ஐயா இந்த வெளித்திண்ணையில படுத்து இருந்துட்டு காலையில மொத வண்டிக்கு. கிளம்பிடுறேனையா இவனை வைத்துக்கொண்டு நான் எங்கேயும் தங்க முடியாதுய்யா,’’ கெஞ்சினாள்.

அதுக்கு என்னம்மா? தாராளமா தங்கிக்கலாம்’’ என்றவர் அடுத்தவருக்கு மருத்துவத்தைத் தொடங்கினார்.

மணி 12

கடைசி நோயாளியையும் பார்த்து முடித்ததும் அவளை உள்ளே கூப்பிட்டார்.

“நீ கேட்ட மாதிரி உன்ன பத்து

மணிக்கு எல்லாம் அனுப்பி இருக்கலாம். ஆனா நோயாளிகளோட தன்மையையும் பாக்கணும். உட்கார முடியாம நிக்கவும் முடியாம துன்பப்படுறவங்க, வெளியூரிலிருந்து வந்தவங்க எல்லாம் இருக்காங்க அதனால உன்னக் கூப்பிட்டு டக்குன்னு வைத்தியம் பார்க்க முடியாது. புரிஞ்சிக்கவன்னு நினைக்கிறேன். உன்னப் பார்த்தா பசியோட இருக்கிற மாதிரி தெரியுது. முதல்ல உள்ளார வா.. சாப்பிட்டுட்டு தூங்கலாம்,'' என்றவர் உள்பக்கம் திரும்பி

''வெள்ளையம்மா இந்த ரெண்டு பேருக்கும் சாப்பாடு போட்டு அங்கேயே தங்க வை. வெளியே கடும்பனியா இருக்கு" குரல் கொடுத்தார்.

தாயும் பிள்ளையும் வாசல் நிலை அருகே வந்தபோது,

"கொஞ்சம் நில்லுமா ஒங்கிட்ட ஊருக்குப் போறதுக்கு காசு இல்லன்னு நினைக்கிறேன் இந்த மருந்து பொட்டியில் இருந்து 100 ரூபாய் எடுத்துக்க,'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்த மருந்துபுட்டிகளையும் ஏனங்களையும் ஒண்ட ஒதுங்க வைத்தார். அவள், வீட்டிற்குள் செல்லத் தயங்குகிறாள் என்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தார். அவள் கண்கலங்கி நின்றிருந்தாள்; கைகளை கூப்பி கும்பிட்டபடி சொன்னாள்.

''ஐயா! ஒரு ராத்திரி பாதுகாப்பா ஒறங்க இடங்கேட்டேன். நீங்க பசியறிஞ்சு சோறு போட்டதுமில்லாம எங்கிட்ட காசு இல்லன்னு தெரிஞ்சு கொடுத்து வுடுறீங்க. நீங்க வைத்தியர் மட்டுமில்ல. எங்கள் போல கைவிடப்பட்டவங்களுக்கு சாமியும் கூட''

"பெரிய வார்த்தயெல்லாம் பேசாத நான் என்ன செஞ்சுட்டேன்? என்கிட்ட 400 ரூவா கொடுக்க நீ வளத்தக் கோழிய வித்துட்டு வந்திருப்ப போன வாரம் நீ வந்துட்டு போனப்ப, வைத்தியம் பார்க்க வந்தவங்க உன் நெலமயச் சொன்னாங்க. கடவுள் உன்ன மாதிரி என்ன வறுமையா வச்சில்ல. எனக்கு அவன் கொடுத்த தொழில வச்சு நாலு பேருக்கு உதவி பண்றேன். நானும் வசதியா வாழ்றேன். உன்ன மாதிரி துன்பப்படுற மக்கள் கிட்டயும் காசப் புடுங்குனா நான் மனுசனே இல்ல. உன் பையன காப்பாத்திடுவேன்னு நம்பு. அவன் குணமாவுற வரைக்கும் இனிமே நீ வைத்தியத்துக்குப் பணம் கொடுக்க வேண்டாம். எதப் பத்தியும் நெனச்சுக் கவலப்படாம நீ போய் நிம்மதியா தூங்கு."

அவர் பேசப் பேச தன் தகப்பனை நேரில் காண்பதைப் போல உணர்ந்தாள். இப்போது எந்தத் தயக்கமுமின்றி வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள்.

●

**படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!**

கதை சொல்லிகளிடமிருந்து கதைகள், கவிஞர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரை யாளர்களிடமிருந்து கட்டுரைகள், பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.

தகுதியான படைப்பிற்குக் களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்: 9659335462
மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

**கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே**
**9659335462 விவரத்தை எங்கள்**
**வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.**

போகிறபோக்கில்

# நாம் பேசியாக வேண்டும்

## சின்னப்பயல்

மரித்துப்போனது
மனிதமனம்
பக்கத்துவீட்டு
மரணம்
எதிர்வீட்டுத்
திருட்டு
அடுத்த வீட்டுப்பெண்
ஓட்டம்
கோடிவீட்டுத்
தகராறு
நமக்கேன் வம்பு
கதவை மூடு! - ரவிசுப்பிரமணியன்

இங்கு எது நடந்தாலும், என்ன நடந்தாலும், எப்படி நடந்தாலும் பேச்சரவமற்று வாய்மூடி, கைகள்கட்டி, மவுனித்துக் கிடக்கின்றது மனித சமூகம். கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகளிலும் எழுத்துப்பிழை தேடுபவர்களாகவே இருக்கின்றோம் நாம். மறந்தும் கண்ணீருக்கான காரணத்தைப் பேசுவதற்கு எவரும் முன்வருவதில்லை.

கல்விக்கூடங்கள் சிறைக்கூடங்களாக மாறுகின்ற அளவிற்குப் போதைப் பொருட்களும், போக்சோ வழக்குகளும் மலிந்திருக்கும் இடமாகவே இருக்கின்றன. அறமற்ற கல்விச்சூழலே அதிகாரத்திற்கு அடிபணிகிறது. மதிப்பெண்ணின் இலக்கங்கள் உயர்வு மாணவர்களுக்கான இலக்குகளை ஒருபோதும் உயர்த்துவதாக இல்லை என்கின்ற உண்மை சுடத்தான் செய்யும். கவிஞர் நடேசமகரந்தன் சொல்வதைப் போன்று

மடிநிறைய
பால் சுரந்தும்
கன்றுக்குத் தராத
தறுதலைப் பசுக்கள்!

தறுகலைப் பசுக்கள் தரமான கல்வியைக் கொடுப்பதில்லை.

மீளவும், களப்பால் பள்ளித் தலைமையாசிரியர் க. கலைச்செல்வன் போல மாணவர் நலனுக்காக, வளர்ச்சிக்காக விவாதிக்க முற்பட்டால் தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்.

இங்கு தற்கொலையை நாம் ஏற்கவில்லை. அறிவுபெற்ற சமூகம் ஏற்கவும் செய்யாது. ஆனால் அதற்கான பின்புலத்தை, அதிகார அழுத்தத்தை நாம் பேசியாக வேண்டும். விவாதிக்கவும் வேண்டும். கல்விச்சூழல், கல்விக்கூடங்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடத்திட்டங்கள் குறித்து நாம் பேசியாக வேண்டிய காலக்கட்டத்தில் நின்று கொண்டிருக்கிறோம். நம்முடைய பள்ளிக் கணக்குகள் புள்ளிக்கு உதவலாம். ஆனால் மாணவர்கள் முன்னேற்றத்திற்கு?

மல்லிப்பட்டினப் பள்ளி வளாகத்திற்குள் பாடம் நடத்துகின்ற ஆசிரியரை கத்தியால் குத்திப் படுகொலை செய்கிறான் ஒருவன். மாணவர்கள் முன்னேற்றம் சார்ந்து விவாதிக்கும்போது ஒருசில ஆசிரியர்களால் அவமானப்படுத்தப்பட்டு தற்கொலை முடிவுக்கு தள்ளப்படுகிறார் களப்பால் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் க. கலைச்செல்வன். ஒரு பெண்மணி கணவரை இழக்கின்றார். இரண்டு குழந்தைகள் தகப்பனை இழக்கின்றனர். பள்ளிக்கூடம் நல்ல தலைமையாசிரியரை இழக்கின்றது. நாமும் கருப்புப்பட்டை அணிந்து கலைந்து செல்கின்றோம். வேறென்ன செய்வோம் நாம்?

நாம் பேச வேண்டும். பேசியாக வேண்டும். இனியும் இதுபோன்று எவருக்கும் நேரக்கூடாதென்றால் திறந்த மனத்தோடு நாம் உரையாட வேண்டும் எல்லாவற்றையும்.

பேசுவோம்.

**அன்பான வேண்டுகோள்!**

**கண்ணாமூச்சிக்கான ஆண்டுக்கட்டணம் சென்ற இதழோடு நிறைவடைந்தவர்கள் தாங்களாகவே ஆண்டுக் கட்டணத்தைப் புதுப்பித்து கண்ணாமூச்சி ஆட்டத்தில் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். - கண்ணாமூச்சி**


HOTEL
Church Park
VCRG IN
HOTEL
CHURCH PARK
Modern Hotel
Experience Opulence: Your Retreat of Refinement and Relaxation
Double Room
Triple Room
Family Room
About us
Nestled in the Near of the velankanni Church , our opulent hotel offers guests an unforgettable experience of refined luxury and impeccable service.
Our Facilities :
Free Wi-Fi
Car Parking
Kitchen
24x7 Hot Water
Sea View Rooms
Lift Available
Discount up to
20%
*Valid Week Days
hotelchurchpark@gmail.com
Thonithurai, Beach Road, Velankanni
BOOKING NOW
94895 63300
Booking.com, MakeMyTrip, Aggoda


Siva
தொழில்நுட்பமே
எங்கள் சிறப்பம்சம்
உங்கள் இல்ல
நிகழ்வுகளை துல்லியமாக
பதிவு செய்திட
சிவா
வீடியோஸ்
டிஜிட்டல் ஸ்டுடியோ
& லேசர் கலர் லேப்
மன்னார்குடி
செல் : 93440 10195 - 92620 74795
OUT DOOR PHOTOGRAPHY
WEDDING VIDEOGRAPHY
SPOT MIXING & YOU TUBE LIVE
WALL LED DISPLAY